# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 06 வியாழக்கிழமை (22.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 238


# இலங்கை தொடர்பான நிபுணர் குழு இப்போது நவநீதம்பிள்ளையின் கீழ்

## பான் கீ - மூன் அதிரடி நடவடிக்கை





கொழும்பு, ஜூலை 22

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்றங்கள் தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நியமித்துள்ள நிபுணர்குழு, ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் கீழ் இயங்கும்.

ஐ.நா.செயலாளர் நாயகத்தின் இணை ஊடகப் பேச்சாளர் பர்ஹான் ஹக் இத்தகவலைத் தெரிவித்தார்.

இதன்படி நிபுணர்குழுவின் நடவடிக்கைகளை நவநீதம்பிள்ளை மேற்பார்வை செய்வார். மூவரைக் கொண்ட இந்த நிபுணர் குழுவுக்கு உதவுவதற்காக 8பேரைக் கொண்ட குழு ஒன்றும் ஐ.நா.செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழுவுக்கு ரிச்சர்ட் பேர்னாட் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். நிபுணர்கள் குழு நேற்றுமுதல் தொடர்ந்து கலந்துரையாடல்களை நடத்தி வருகிறது.

டாருஸ்மன் தலைமையிலான மூவர் கொண்ட நிபுணர் குழுவும் அதற்கு உதவும் பொருட்டு நியமிக்கப்பட்ட எண்மர் குழுவும் இவ்வாரம் முழுவதும் சந்திப்புகளை நடத்தத் தீர்மானித்துள்ளன எனவும் பர்ஹான் ஹக் தெரிவித்தார்.

இந்தப் பதினொரு உறுப்பினர்களும் முழுநேரக் கடமையில் ஈடுபட்டுப் பரிந்துரைகளை சமர்ப்பிக்கவுள்ளனர். (அ-சி)

## டெங்கு ஒழிப்பு வாரம்

கொழும்பு, ஜூலை22

ஓகஸ்ட் மாதத்தின் மூன்றாம் வாரத்தை அரசு டெங்கு ஒழிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றம் ஏற்பாடு செய்த டெங்கு ஒழிப்பு பிரசாரத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகையில் சூழலை வைத்திருந்தமையே 50 சத

(24ஆம் பக்கம் பார்க்க)


### கல்விச் சுடர்

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்காக யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு பிரபல ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள் நாளை முதல்


## போர்க் குற்றக் குற்றச்சாட்டுக்கள் குறித்து இலங்கை அரசு விசாரணை நடத்தவேண்டும்

### அமெரிக்க உதவி அமைச்சர் பிளேக் சொல்கிறார்



கொழும்பு, ஜூலை22

போர்க்குற்றங்கள் புரிந்ததாகக் கூறப் படும் குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை அரசாங்கம் விசாரணை நடத்தவேண்டும். போரினால் இடம்பெயர்ந்த லட்சக் கணக்கான தமிழர்களை விரைவில் மீளக் குடியமர்த்த வேண்டும். அவற்றின் மூலமே இந்த நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான உதவி அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக்.

ஒரு நாள் விஜயமாக இலங்கை வந்திருந்த அவர் -

இலங்கையில் போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டனவா என்று ஐக்கிய நாடுகள் சபை விசாரணை நடத்துவதனை அமெரிக்கா ஆதரிப்பதாகவும் - சொன்னார்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு குறித்து இலங்கையில் தவறான கருத்து நிலவுகிறது. இந்தக் குழு, பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டதே தவிர, இலங்கை தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு அல்ல என்றும் றொபேட் ஓ பிளேக் சொன்னார்.

இலங்கை வந்துள்ள அவர் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு -

நான் மீண்டும் இலங்கைக்கு வந்து எனது பழைய நண்பர்களைச் சந்திப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

அமெரிக்கா, இலங்கையின் நீண்டகால நட்பு நாடாக இருந்து வருகிறது. அந்த நட்பை மேலும் கட்டியெழுப்புவோம். புலிகள் இலங்கையில் (24ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தில் கொலையுண்ட, ஊனமுற்ற பொதுமக்களுக்கு நஷ்டஈடு கிடைக்கும்

### அமைச்சர் டியூ குணசேகர வாக்குறுதி

கொழும்பு, ஜூலை 22

யுத்தத்தின் போது கொலையுண்ட பொதுமக்கள், அரசஊழியர்கள், ஊனமுற்றோர், சொத்துகளை இழந்த அரச ஊழியர்கள் ஆகியோருக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்று புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர நேற்று வாக்குறுதி அளித்தார்.

யுத்தத்தில் கொலையுண்ட, ஊனமுற்றவர்கள், சொத்துகளை இழந்தவர்கள் ஆகியோருக்கு நஷ்டஈடு வழங்க அமைச்சுக்கு 2010ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என 'உதயன்' செய்தியாளர் கேள்வி எழுப்பினார். அப்பொழுது பதில் அளித்த அமைச்சர், வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, ஆள்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைப்புச் செய்யும் அதிகார சபையிடமும் நிதி இருக்கிறது எனத் தெரிவித்தார்.

செய்தியாளர்:- கொல்லப்பட்டவர்கள், சொத்துகளை இழந்தோர் இனங்காணப்பட்டுள்ளனரா?

அமைச்சர்:- யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெற்ற எமது நடமாடும் சேவைகளில் இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. கிராமசேவகர், பிரதேச செயலாளர் ஆகியோர் உறுதிப்படுத்திய பின்னர் நஷ்டஈடு வழங்கப்படும்.



புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர, பிரதி அமைச்சர் விஜயமுனி சொய்ஸா ஆகியோர்

(24ஆம் பக்கம் பார்க்க)

## போரில் சரணடைந்த 12,000 புலிப் போராளிகளில் 3,028 பேர் விடுவிப்பு; 1,300 பேர் தீவிர உறுப்பினர்

கொழும்பு, ஜூலை 22

12 ஆயிரம் புலிப் போராளிகள் அரசிடம் சரணடைந்தனர். இவர்களில் 3,038 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். தற்போது 7,980 பேருக்கு மாத்திரம் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றது. 1,300 பேர் தீவிர புலி உறுப்பினர்கள் என இனம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் டியூ குணசேகர.

புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சரணடைந்த புலிப் போராளிகள் சுதந்திரமாக நடமாடித் திரிகின்றனர். புலி முக்கியஸ்தர்கள் கூட கூண்டில் அடைத்து வைக்கப்படவில்லை. பிரபல நடிகை

(24ஆம் பக்கம் பார்க்க)

## தர்சிகாவின் சடலம் அடக்கம் செய்த ஊற்றல் மயானத்திற்கு பொலிஸ் காவல்

கைதடி, ஜூலை 22

வேலணை அரசினர் வைத்தியசாலை குடும்பநல மருத்துவமாது தர்சிகாவின் சடலம் அடக்கம் செய்யப்பட்டுள்ள கைதடியில் உள்ள ஊற்றல் மயானத்திற்கு நேற்று முன்தினம் இரவு முதல் பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

மரணமான தர்சிகாவின் தயார் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாக ஊர்காவற்றுறை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், சடலத்தை எதிர்வரும் 28ஆம் திகதி பொலிஸ் பாதுகாப்புடன் கொழும்புக்கு எடுத்துச் சென்று சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனை அறிக்கையைப் பெற்று நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு தெரிவித்திருந்தது.

இந்த உத்தரவையடுத்து சடலம் புதைக்கப்பட்ட கைதடி (24ஆம் பக்கம் பார்க்க)

## மாத்தறையில் இருந்து கிளிநொச்சிக்கு கஞ்சா எடுத்து வந்த சிப்பாய் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஜூலை 22

மாத்தறையில் இருந்து கிளிநொச்சிக்கு கஞ்சாப் பைக்கற்றுகளுடன் சென்றுகொண்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரை அநுராதபுரம் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

இந்த சந்தேகநபர் மாத்தறையில் இருந்து அநுராதபுரம் சென்று, அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த போது அநுராதபுரம் நகரில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

நேற்று அதிகாலை 4 மணிக்கு குறித்த நபர் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அவரது பயணப் பையில் இருந்து 1,500 கஞ்சாப் பக்கற்றுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்களான



பிலிப் ஞானப்பிள்ளை




பி.கி.வேதநாயகம்

ஆகியோரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு இவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.

(100811)

## மரண அறிவித்தல்கள்



### கனகசபை செல்லக்கண்டு

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை செல்லக்கண்டு நேற்றுமுன்தினம் (20.07.2010) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை- தெய்வாத்தை தம்பதியினரின் அன்பு மகனும், அன்னக்கண்டுவின் அன்புக்கணவரும், கந்தையா, காலஞ்சென்றவர்களான மீனாட்சி, நாகம்மாள் மற்றும் இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கராஜா, நகுலேஸ்வரி, சிவலோகநாதன், சந்திரகுமார், கனகாம்பிகை, செல்வி, சிறிவஜன், கவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபாசினி, தியாகராஜா, செல்வலெட்சுமி, யாசோ, கனகசபை, கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சபிதா, சாருஜன், சர்மிலன், கஜானன், கஜந்தன், கஜீபன், மதுசானா, சதுர்சன், விதுசன், யதுசன், சுரேஸ்குமார், சுவர்ணா, சுகிர்தா, சுதர்சினி, சுபாஸ்கரன், கீர்த்திகா, சிந்துஜா, அபிசா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரி யைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை. (100807)

தகவல்:
தியாகராஜா (மருமகன் சுவிஸ்).

### பாலசுப்பிரமணியம் பத்மாவதி

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும், பண்டாரவளையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் பத்மாவதி நேற்று (21.07.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், நந்தகுமாரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2010) வியாழக்கிழமை பண்டாரவளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கருங்காலி,
காரைநகர். (100814)

தகவல்:
சகோதரர்கள்.

### M.S.குமாரசாமி
**(முன்னாள் பிரபல வர்த்தகர், நெடுந்தீவு)**

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், லண்டன் வோல்த்தம்ஸ்ரோவை வதிவிடமாகவும் கொண்ட மருதையினார் சுப்பிரமணியம் குமாரசாமி அவர்கள் 19.07.2010 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கச்சிப்பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - மரகதமொழி தம்பதியினரின் அருமை மருமகனும் பொன்னம்மாவின் (லண்டன்) அன்புக் கணவரும், வோல்த்தம்ஸ்ரோ குமரன்ஸ் உரிமையாளர் மகேஸ்வரன் (ராசா), நெடுஞ்செழியன் (செழியன்), கிருஷ்ணமூர்த்தி (மூர்த்தி), ராசாத்தி, தனம், மதியழகன் (அழகன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வேணி, மலர், பாமினி, வரதராசா, சோதிராசா, ஜெயந்தி ஆகியோரின் மாமனாரும், கண்மணி, தனலட்சுமி, காலஞ்சென்றவர்களான பராசக்தி, தையலம்மா, பொன்னம்மா, கதிரவேலு, தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் குமாரசாமி, சிவகாமிப்பிள்ளை, புஸ்பம், வெற்றிவேல், மருதையனார், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம், பார்வதி ஆகியோரின் மைத்துனரும் துளசி, மணாளினி, மயூரன், நிரோஷன், அபிரா, மயூரா, மதிரா, ராஜினி, ரஜீவ், ராஜேந்தினி, லக்ஷனா, லக்ஷ்மன், கரிஷ், பரணி, பாபு, பிரபு, கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சந்து ரெய்லர் ஆசிய மலர்ச்சாலையில் (Chandu Tailor Asian Funeral Service Lower Park Road, London N11 1QD) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை (25.07.2010) காலை 9 மணிக்கு இறுதிக்கிரியைகள் (City of London) மயான மண்டபத்தில் நடைபெற்றுத் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர் (லண்டன்)

தொடர்புக்கு :
மகேஸ்வரன் (லண்டன்) 07590047232
செழியன் (லண்டன்) 07988249710
மூர்த்தி (லண்டன்) 07970200137
வரதராசா (லண்டன்) 07828741886
அழகன் (லண்டன்) 07958360176
சோதிராசா (லண்டன்) 02084249268
வெற்றிவேல் (லண்டன்) 02086831011
வே. சுந்தரலிங்கம் (யாழ்ப்பாணம்) 0212225638
த. பன்னீர்ச்செல்வன் (யாழ்ப்பாணம்) 0212227286
க. சூரியா (நெடுந்தீவு) 0213007677

(100819)

# நிபுணர் குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பது குறித்து நாடாளுமன்றமே முடிவு செய்யவேண்டும்

## சென்னையில் ரணில் தெரிவிப்பு

சென்னை, ஜூலை 22

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்றம் தொடர்பாக ஆராயவரும் ஐ.நா. நிபுணர் குழுவை இலங்கைக்குள் அனுமதிப்பதா அல்லது இல்லையா என்பது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதித்து முடிவு எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கையில் நடைபெற்ற போரின் போது இடம்பெயர்ந்து மீளக் குடியமர்த்தப்படாத தமிழர்களின் நிலை எங்களுக்கும் கவலை அளிக்கிறது. காலதாமதமின்றித் தமிழர்கள் குடியமர்த்தப்பட வேண்டும்.

தமிழர்களை மீண்டும் குடியமர்த்தும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட வேண்டும் என்று அரசிடம் கோரியுள்ளோம். குடிபெயர்ந்த தமிழர்களில் எஞ்சிய 50ஆயிரம் பேரை மீண்டும் குடியமர்த்தும் பணி நடைபெற்று வருகிறது என அரசு எங்களிடம் தெரிவித்துள்ளது.

தமிழக - இலங்கை மீனவர்கள் பிரச்சினை குறித்து இருநாட்டு அரசுகளும், இருநாட்டு மீனவர்களும் அமர்ந்து பேசவேண்டும். தேவையற்ற உயிர்ப்பலிகளைத் தவிர்க்கவேண்டும்.

இலங்கையில் போரால் ஏற்பட்ட பாதிப்புக் குறித்துக் கண்டறியவரும் ஐ.நா. குழுவை அனுமதிப்பது குறித்து, இலங்கை நாடாளுமன்றத்தில் விவாதித்து முடிவெடுக்கவேண்டும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை அங்கத்துவம் வகிக்கவில்லை.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (அ-சி)

## மட்டக்குளி தாக்குதல்! சந்தேகநபருக்குத் தொடர்ந்தும் விளக்கமறியலில்

கொழும்பு, ஜூலை, 22

மட்டக்குளி பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் மேற்கொண்டு உடைமைகளை சேதப்படுத்தினர் எனக் கூறப்படும் பிரதான சந்தேக நபரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் லால் ரணசிங்க உத்தரவிட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் லால் ரணசிங்க முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது தனது சட்டத்தரணி மூலம் நீதிமன்றில் ஆஜரான பிரதான சந்தேக நபரை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (சி)

## பொன்சேகாவுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 22

ஜெனரல் சரத் பொன்சேகா எம்.பியை விடுதலை செய்யும்படி கோரி நேற்று மாலை தேசிய சுதந்திர முன்னணி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

பொரளை கெம்பல் மைதானத்தில் இருந்து அனோமா பொன்சேகா, ஜே.வி.பியின் எம்.பிக்கள் உட்பட சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் லிப்டன் சதுக்கத்தை நோக்கி சுலோகங்களை எழுப்பியவாறு ஊர்வலமாக வந்தனர். (சி)


## முகவர் தேவை

வடமராட்சியில் இயங்கிவரும் கொங்கிறீட் தொழிற்சாலையின் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு விற்பனைப் பிரதிநிதிகளும் விற்பனை முகவர்களும் உடன் தேவை.

**தொடர்புக்கு : 0217222333**


## கருத்தரங்கு இடமாற்றம்

Mathuram Institute
Dutch Road, Kopay South, Irupalai

எமது நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் ந. சந்திரகுமார் அவர்களின் புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்கு இடநெருக்கடி காரணமாக இருபாலை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் பிரமாண்ட திருமண மண்டபத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

சனிக்கிழமை 24.07.2010 மு.ப. 10.30 மணிக்கு இக்கருத்தரங்கு ஆரம்பமாகும்.

தொடர்புகளுக்கு :-
**0779122918**
**0775581626**

பதிவு செய்த மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

மண்டப முகவரி :-
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருமண மண்டபம்,
பருத்தித்துறை வீதி,
கட்டைப்பிராய்,
இருபாலை,
கோப்பாய் தெற்கு.

நிர்வாக இயக்குநர்

(100818)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி நளினி ரவிந்திரன் அவர்களின் அன்புத் தந்தையார்

*பிரான்சிஸ் கிறிஸ்டி வேதநாயகம்*

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

கல்லூரிச் சமூகத்தினர்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/569380)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். தெல்லிப்பழை 769 பாதைச் சிற்றூர்திச் சேவைச்சங்கத்தின் நீண்டகால உறுப்பினராகவும் தலைவராகவும் பதவி வகித்துத் தற்போது யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச்சங்கங்களின் இணையத்தின் தலைவரான,

**திரு. பொன்னுத்துரை கெங்காதரன்**

அவர்கள் கடந்த 19.07.2010 முதல் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய வடபிராந்திய தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் ஒன்றியத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பெற்றதையிட்டு, அவர்களை உளமார வாழ்த்தி வரவேற்பதுடன் அவரது பணி மேலும் சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம்.

நிர்வாகத்தினர், பணியாளர்,
உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள்,
சிற்றூர்திச் சேவைச்சங்கம் - 769. தெல்லிப்பழை.

(100000)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
21 ★ 08 ★ 1933



மறைவு
22 ★ 06 ★ 2010

### திருமதி சோதிப்பிள்ளை இரத்தினம்

அன்பிற்கு இலக்கணமாய், பண்பில் உயர்ந்தவராய்
பாசத்தின் உறைவிடமாய் எம்மையெல்லாம் வளர்த்து
ஆளாக்கிய அன்புத் தெய்வமே!
எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு எங்கு சென்றீர்களோ?
ஒரு மாதம் ஓடி மறைந்ததம்மா,
எங்கள் உயிர் உள்ளவரை உமை மறவோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23.07.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

225, சென் பெனடிக்ற் வீதி,
நல்லூர். (100817)

தகவல் :
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
திரு. திருமதி பரமநாயகம் (மகன்)

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு கனகராசா (சுதர்சனம் பேக்கரி)

கரணவாய் மத்தி, சீனட்டியைச் சேர்ந்த மா. கனகராசா நேற்று (21.07.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு - பாருவதி தம்பதியினரின் அன்பு மகனும் கிருஷ்ணகுமாரியின் அன்புக் கணவரும், கெங்காதேவி (லண்டன்), காலஞ்சென்ற அகிலன் மற்றும் ராஜபிரபு, இளவரசி ஆகியோரின் அன்புத் தந்தையும் தவராசா (கனடா) வின் அன்புச் சகோதரனும் சத்தியநாதன் (லண்டன்) இன் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் மத்தி,
சீனட்டி, கரவெட்டி. (சி/569386)

தகவல் :
க. இராஜபிரபு
(மகன்)

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நச்சுச் செடிகளாக அரசியல்வாதிகள்!

நாட்டின் எதிர்காலச் சந்ததியினர் ஆங்கில அறிவு இல்லாமல், சுயமொழிக் கல்வியை மட்டும் பெற்று வாழ்க்கையில் முன்னேற்றம் காணமுடியாது. முந்திய காலங்களை விடவும் தற்போது ஆங்கில அறிவு இல்லாமல் இன்றைய தகவல் தொழில் நுட்ப யுகத்தில் இளையவர்கள் தொழில் மற்றும் வாழ்க்கை நிலைகளில் தங்களை நிலைநிறுத்திக் கொள்வது முற்றிலும் இயலாத செயலாகிவிடும்.

நாளாக ஆக தகவல் தொழில் நுட்பமும், அது சார்ந்த துறைகளும், தொழில் வாய்ப்புகளும் இப்போதுள்ளதை விட பன்மடங்காகும். தகவல் தொழில்நுட்ப அறிவும், பயிற்சியும் இல்லாதவர்கள் பின்தங்கிய, முன்னேற்றமற்ற சமூகமாக மாறிவிடும் பெரும் ஆபத்து உண்டு. மொத்தத்தில் இன்றைய நவீன உலகில் தகவல் தொழில் நுட்பம் பயிலாதவர்கள் 'படியாதவர்கள்' கூட்டத்திலேயே சேரும் துரதிஷ்டம் உண்டாகும்.

முன்னேறிச் செல்லும் உலகுடன் சேர்ந்து செல்வதற்கும், உயர்ந்து நிற்பதற்கும் தகவல் தொழில் நுட்பத் துறையைக் கற்றுத் தேறுவதற்கு ஆங்கிலம் அடிப்படை மொழியாக, அத்தியாவசிய மொழியாக விளங்குகிறது. ஏனைய மொழிகளில் தகவல் தொழில் நுட்பத்தைப் படிசெய்ய வசதிகள் உண்டு என்பது உண்மையே. எனினும் ஆங்கிலம் பயின்றவர்கள், தெரிந்தவர்கள் எல்லா இடங்களிலும் உயர்ந்தே நிற்பார்கள்.

இதனை மனதிற்கொண்டு, உலக நாடுகள் மிகப் பலவற்றிலும் ஆங்கிலக் கல்விக்கு அதிமுக்கிய இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. எமது நாட்டிலும் அரசாங்க மட்டத்தில் ஆங்கிலக் கல்வி நாட்டின் சகல பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற கோட்பாட்டுடன் கல்வித் திட்டத்தில் சில மாற்றங்கள் ஏற்கனவே கொண்டுவரப்பட்டுள்ளன.

ஆங்கிலக் கல்வியின் தாராள நிலைக்கு, அது நாட்டில் வசதி குறைந்த, வாய்ப்புக் குறைந்த மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்குடன், பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியைப் பரவலாக்கி, பிரபல்யமாக்க வேண்டும் என்ற நோக்குடன் ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான ஜனாதிபதி செயலணிக் குழு ஒன்று இயங்குகிறது.

அந்தக் குழு சேகரித்த பிந்திய புள்ளி விவரங்களின் பிரகாரம், ஆங்கில ஆசிரியர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே அரசாங்கப் பாடசாலைகளில் பணியாற்றுகின்றனர். ஓர் ஆங்கில ஆசிரியர்தானும் இல்லாது மொத்தம் 866 பாடசாலைகள் நாட்டில் இயங்குகின்றன.

இந்த மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மேற் சொன்ன வரிசையில் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பிடித்துள்ளன. முதலாம் இடத்தைப் பிடித்திருப்பது வடமத்திய மாகாணம்.

இதே வேளையில், நாட்டின் ஏனைய பல மாவட்டங்களிலும் சராசரியாக ஆங்கில ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவவே செய்கிறது. எனினும் ஜனாதிபதி செயலணிக் குழு அறிக்கையின் பிரகாரம், கிராமப்புறப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் அதேவேளை, ஏனைய மாகாணங்களில் நகரப் புறப் பாடசாலைகளில் அளவுக்கு அதிகமாக ஆங்கில ஆசிரியர்கள் உள்ளதாகவும் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்த நிலை இல்லை. பாடசாலைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப சேவையிலுள்ள ஆங்கில ஆசிரியர்களை சமச்சீராகப் பணியில் ஈடுபடுத்தவில்லை என்ற குறைபாடும் அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டில் உள்ள மொத்தம் 9,866 பாடசாலைகளுக்கு சேவையிலுள்ள 21,453 ஆங்கில ஆசிரியர்களைத் தேவைக்கு ஏற்ப சமச்சீராகப் பணிக்கு அமர்த்தியிருந்தால், கிராமப்புறப் பாடசாலைகள் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கமாட்டா என்றும் ஜனாதிபதி செயலணிக் குழு வெளிச்சப்படுத்துகிறது.

அரச பாடசாலைகளில் சேவையிலுள்ள ஆங்கில ஆசிரியர்களின் எண்ணிக்கையில் சமச்சீர் இல்லாது போனமைக்கும், கிராமப்புறப் பாடசாலைகள் ஓர் ஆங்கில ஆசிரியர் தானும் இல்லாமல் பாதிக்கப்பட்டிருப்பதற்கும் அரசியல்வாதிகளே காரணம் என்று ஜனாதிபதி செயலணிக் குழு அப்பட்டமாகச் சாடுகிறது.

அரசியல்வாதிகள் தமக்கு ஆதரவான ஆசிரியர்களை, அவர்களின் தேவைப் பிரகாரம் நகரப் பகுதிப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்விப்பதால் இந்த 'வினை'. கிராமப்புற, மற்றும் பின்தங்கிய பகுதி மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியூட்டும் முயற்சிக்கு தடைபோட்டிருக்கிறது. ஆங்கில மற்றும் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கான ஜனாதிபதி செயலணிக் குழு இதனையும் புட்டுக்காட்டுகிறது.

இந்தநிலை தொடருமானால், கிராமப்புற மற்றும் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம் என்பது எட்டாக் கனியாகவே உயரத்தில் இருக்கப் போகிறது.

அரசியல்வாதிகள் புரியும் இத்தகைய செயற்பாடு, பாடசாலைகளில் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர் ஒதுக்கீட்டில் மட்டும் நச்சுச் செடியாக முளைக்கவில்லை. சமூகத்தின் எல்லாத் துறைகளிலும் அரசியல்வாதிகள் காட்டும் பாரபட்சமும், செல்வாக்கும், பழிதீர்ப்பும் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் சுட்டுப்பொசுக் கும் துட்டத்தனமாகப் பரவிக்கிடக்கிறது.

இதனைத தடுப்பவர் யார்? வேலியே பயிரை மேயும் போது காவலாளிதான் என்ன செய்ய முடியும்?

# மறுமணம் செய்யும் விதவைகளுக்கும் ஓய்வூதியம் தொடர்ந்து கிடைக்க வசதி

## விரைவில் சட்டத்தில் திருத்தம் செய்யப்படும்

கொழும்பு,ஜூலை22

பயங்கரவாதச் செயற்பாடுகளின் காரணமாக உயிரிழந்த அரச ஊழியர்களின் விதவை மனைவிமார் மறுவிவாகமொன்றைச் செய்துகொள்ளும்போது அவர்களுக்கும் கூட விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதிய சம்பளக் கொடுப்பனவின் அரைப்பங்கு கிட்டும் விதமாக விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது.

மேற்படி யோசனை மற்றும் மேலும் சில அம்சங்கள் உள்ளடங்கும் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் (திருத்தச்) சட்ட மூலமும் தபுதாரன் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் (திருத்தச்) சட்ட மூலமும் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அரச ஊழியரொருவர் பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக உயிரிழக்க நேருமானால் தற்போது நடைமுறையிலுள்ள சட்ட விதிகளுக்கமைய அவரது முழுமையான சம்பளக் கொடுப்பனவு 55 வயது வரையிலும் அவரது மனைவிக்கு வழங்கப்பட்டு வருவதோடு 55 வயதுக்குப் பின்னர் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் சம்பளக் கொடுப்பனவைப் பெற அவரது மனைவி உரித்துடையவராகிறார்.

ஆனால், அந்தப் பெண் மறுவிவாகமொன்றைச் செய்துகொள்ளும்போது தற்போது நிலவும் சட்ட நடைமுறைக்கு அமைய விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறும் உரிமையை இழக்கிறார்.

கடந்த காலத்தில் பயங்கரவாதச் செயற்பாடுகளின் காரணமாக முப்படைகள் மற்றும் பொலிஸ்துறை உள்ளடங்கலான பெருமளவு அரச ஊழியர்கள் உயிரிழந்துள்ளதோடு, அதன் காரணமாக பெருமளவு பெண்கள் விதவைகளாகியுமுள்ளனர்.

இவற்றைக் கவனத்தில் கொண்டு மறுவிவாகமொன்றைச் செய்துகொள்ளும் விதவைகள் தொடர்பாக விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் சம்பளக் கொடுப்பனவுகளைப் பெறும் உரிமையை அவர்களுக்கு வழங்கும் குறிக்கோளுடன் இச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படுவதாக பொது நிர்வாக மற்றும் உள் நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் அரச சேவையில் பணியாற்றியதன் பின்னர் இடையில் சேவையிலிருந்து விலகிச் சென்ற அரச ஊழியர்கள் மரணமடைந்ததன் பின்னர் அவர்களது விதவை மனைவிமார்களுக்கும் பிள்ளைகளுக்கும் கூட விதவைகள் மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதியச் சம்பளக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு இத்திருத்தத்தின் மூலம் வாய்ப்புக் கிட்டுவதாகவும் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (206)

## கொக்குவில் இந்துவின் நூற்றாண்டு முத்திரை வெளியீட்டு விழா இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை22

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி நூற்றாண்டு முத்திரை வெளியீடும் ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த முத்திரை வெளியீடும் இன்று வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளைத் தலைவர் டாக்டர் கே.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக தபால் மா அதிபர் கே.பி. திசாநாயக்கவும் சிறப்பு அதிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ். ஜெபரட்ணம், கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவரும் ஓய்வுபெற்ற அதிபருமான ஏ.பஞ்சலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாகக் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையின் உப தலைவர், ஏ.பற்குணன், இலங்கை வங்கியின் யாழ். மேற்றரக் கிளை உதவிமுகாமையாளர் ரி.பிரிதிவராஜ் ஆகியோர் கலந்துகொள்வர். (50-201-86)

## யாழ்.நோக்கி வந்த பஸ் மீது கல் வீச்சு

யாழ்ப்பாணம்,ஜூலை 22

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் வந்து கொண்டிருந்த தனியார் பஸ்மீது நேற்று அதிகாலை கல்வீச்சு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அனுராதபுரம் மகாஇலுப்பளம என்ற இடத்திலேயே கல்வீச்சு சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் நடைபெற்றுள்ளது. இதனால் அந்தப் பஸ்ஸின் முன்பக்கக் கண்ணாடி உடைந்து சேதமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14)

## தம்புள்ள பொருளாதார நிலையத்தில் குறைந்த விலையில் மரக்கறி, பழவகை

### நுகர்வோர் விவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

தம்புள்ள பொருளாதார நிலையத்தில் இனிமேல் தரகர்களின் தலையீடுகளின்றி பழவகைகளும், மரக்கறி வகைகளும் விற்பனை செய்யப்படும்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் உள்நாட்டு வர்த்தக, கூட்டுறவு, நுகர்வோர் விவகார அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்ணாண்டோ.

ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் தம்புள்ள பொருளாதார நிலையத்துக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் இடைத்தரகர்களின் தலையீடுகளின்றி மரக்கறி வகைகள், பழவகைகள் நுகர்வோர்களும், விவசாயிகளும் பயனடையக் கூடிய வகையில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தமது அமைச்சின் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

தம்புள்ள வர்த்தக நிலையத்திலுள்ள வர்த்தகர்கள் இவற்றிற்கான விலைகளை ஏகபோகமாக உயர்த்துவதன் பின்னணியிலேயே அமைச்சரின் இந்த விஜயம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## குருநகர் யாகப்பர் ஆலயப் பெருவிழா

கொழும்புத்துறை, ஜூலை 22

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழாவின் நற்கருணைப் பெருவிழா 24ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.15 மணிக்கு முதல் திருப்பலியும், 6.45 மணிக்கு குருமுதல்வர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் திருவிழா கூட்டுத் திருப்பலி யும் இடம்பெறும்.

அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு புனிதரின் தேர்ப்பவனி குருநகர் வீதிகளூடாக நடைபெறும்.

மறுநாள் திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு குருநகர் யாகப்பர் கலைமன்றத்தின் கலைஞர் அந்தோனி பிலிப்பின் நெறியாள்கையில் உருவான 'போருக்குப்பின்' தென்மோடி நாட்டுக்கூத்து நிகழ்வு குருநகர் கலை அரங்கில் நடைபெறவுள்ளதாக பங்குத் தந்தை எவ்.எக்ஸ்.நேசராசா அடிகள் அறிவித்துள்ளார். (50-135)

## வடபகுதியில் தெங்குச் செய்கையை மேம்படுத்தப் புதிய செயற்றிட்டம்

கொழும்புத்துறை,ஜூலை 22

வடபகுதியில் தெங்குச் செய்கையை மேம்படுத்தும் வகையில் புதிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவும் இழப்பீடுகளைப் பெற்று தோட்டங்களை மீளமைக்கவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வடமாகாணத் தெங்கு செய்கையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

தென்னைப் பயிர்ச் செய்கை சபை மண்டபத்தில் கலாநிதி சு.மோகனதாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக உப தலைவர் செ.மார்க்கண்டு தெரிவித்துள்ளார்.

தென்னை உரமானியம், புது நடுகை மானியம் அனுமதிக்கப்படாத காணிகளை பெறச்செய்தல் கண்ணிவெடிகளை அகற்றி காணிகளை துப்புரவு செய்தல், பாதிக்கப்பட்ட இயந்திர சாதனங்கள் மற்றும் இழப்பீடுகளைப் பெறுதல் என்பவற்றுக்கான நடவடிக்கைகளை எடுப்பதோடு இயந்திர சாதனப்பிரிவு ஒன்றை வடமாகாணத்தில் நிறுவ அமைச்சு மட்டத்தில் கோரிக்கை விடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலுமுள்ள தென்னந் தோட்ட உரிமையாளர்கள் அங்கத்துவப் படிவங்களை சங்கச் செயலாளர் சி.துரைராசா, செ.மார்க்கண்டு ஆகியோரிடம் பெற்றுப் பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-135)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 07 | : 23.07.2010 |
| | : வெள்ளிக்கிழமை |
| திதி | : திரயோதசி |
| | பி.இ. 05.11வரை |
| நட்சத்திரம் | : மூலம் |
| | முழுவதும் |
| | பிரதோஷவிரதம் |
| சுபநேரம் | : 06.02 -07.32 |
| ராகுகாலம் | : 10.32 - 12.02 |

## திருத்தப் பணியில் ஈடுபட்ட ஊழியர் மின்தாக்கிப் பலி

யாழ்ப்பாணம்,ஜூலை 22

மின்திருத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் மின்சாரம் தாக்கி அந்த இடத்திலேயே மரணமானார்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் சுழிபுரம் பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

பண்ணாகம் தெற்கைச் சேர்ந்த துரைராஜா வரதராஜா(வயது 42) என்ற மின்சாரப் பணியாளரே குறிப்பிட்ட வீட்டில் திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்தவேளை மின் தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஒ-16-78)

## கல்வியியற் கல்லூரியின் ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 22

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டமும், 'கலாசுரபி' நூல் வெளியீட்டு வைபவமும் இன்று நடைபெறவுள்ளன.

இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்துகொள்வார்.

(சிறப்பு மலர் 6ஆம் பக்கத்தில்)

### வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாசாலையில் புதிதாக அதிபர் நியமனம் பெற்று கடமைபுரியும்

**செல்வி தவறஞ்சினி பொன்னம்பலம்**

அவர்களை வரவேற்பதுடன் அவர் தனது சேவையை சிறப்பாகச் செய்து இறையருளினால் எல்லா நலனும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை.

(10806)

## மீசாலை மேற்குப் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

தென்மராட்சி,ஜூலை 22

மீசாலை மேற்குப் பகுதியில் கடந்த 19ஆம் திகதி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினருடன் மலேரியா தடுப்புப் பிரிவினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சி பிரிவுத் தொண்டர்கள், உலக உணவுத் திட்ட தொண்டர்கள் ஆகியோர் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அத்துடன் அப்பகுதியில் சாவகச்சேரி நகரசபையின் அனுசரணையுடன் புகையூட்டல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-207)

### காணி விற்பனைக்கு

5 பரப்பு தோட்டக் காணி கிணற்றுடன், இராச வீதி, கோப்பாயில் (லைடன் பாமுக்கு அருகில்) விற்பனைக்குண்டு.

தொடர்பு: வே.தேவராசா, மானிப்பாய் றோட், அரசடி, கோப்பாய் மத்தி.
தொ.பே. 0776514776

## இடம்பெயர்ந்தோருக்கு கொமர்ஷல் வங்கியால் வீடுகள் நிர்மாணம்

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு சாவகச்சேரி கோவில்குடியிருப்பு பகுதியில் தங்கியுள்ள நான்கு குடும்பங்களுக்கு கொமர்ஷல் வங்கியினர் வீடுகளை அமைத்து வழங்கவுள்ளனர். கொமர்ஷல் வங்கியின் ஊழியர் பங்களிப்பு நிதியத்தின் மூலம் இந்த வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் தெரிவித்தார்.(ஒ-207)

### சேவை நலன் பாராட்டு



திருமதி

**சிவயோகி தபோதநாயகம்**

(ஆசிரியர் தரம்-I)

எமது பாடசாலையில் 25வருடங்களாகச் சிறப்பாகச் சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் ஆசிரியையை சகல சௌபாக்கியங்களையும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்தும் இதயங்கள்

பாடசாலைச் சமூகம்,
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை,
கொக்குவில்.

(100807)


# SPOT ADMISSION

## இறுதிச் சந்தர்ப்பம்!

**IELTS தேவையில்லை**

**Study in the United Kingdom**
**Sep/ Oct Intakes in Progress**

2011ல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறைகளுக்கு முன்னர் உங்கள் Student Visa ஐ உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

பல கல்லூரிகளின் பல பிரதிநிதிகள் வருகைதந்து IELTS இல்லாமல் ஒரே நாளில் அனுமதிகள் தரவுள்ளனர்.

உங்கள் கல்விசார் ஆவணங்கள், சுயவிபரக்கோவையுடன் சமூகமளித்து இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள்

**இடம் :** Cosy Hotel and Restaurant
இல 15, சிறாம்பியடி ஒழுங்கை,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**காலம் :** 25July 2010 (Sunday)
காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை

Eisc **EXPRESS**
**INTERNATIONAL STUDIES & CONSULTANTS**

30-1/14, W.A. De Silva Mawatha (Above Hotel Saravana Bavan)
Colombo 6. Tel: 2500207 E-mail: eisc_2007@yahoo.com
Robin: 0777 222 422 Selva: 0714 299 935
Web: www.expresslanka.com

FLEX Graphic




## மரண அறிவித்தல்

### பரமேஸ்வரன் ஞானேஸ்வரி (ராசாத்தி)

தச்சன்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரன் ஞானேஸ்வரி 18.07.2010 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தங்கமணி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் சீனிவாசகம் பரமேஸ்வரனின் அன்பு மனைவியும், கஜதீபன் (மாணவன், புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), வினித்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆறுமுகசாமி (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ்.மாநகர சபை), நித்தியானந்தன், கனகேஸ்வரி, இராஜேஸ்வரி, பஞ்சாட்சரம் (பாரின்), செல்வராணி (லண்டன்), நந்தகுமார் (லண்டன்), கண்ணதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(22.07.2010) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தச்சன்தோப்பு,
கைதடி.

(100815)

தகவல்:
பொ. ஆறுமுகசாமி
(சகோதரன்)

# தேர்தல் இடாப்பு மீளாய்வுப் பணிகளின்போது மீளக்குடியமராத வாக்காளர்களின் நிலை என்ன?

## தெளிவுபடுத்துமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 22

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் இடாப்புகள் திருத்தும் பணிகள் முழு வீச்சில் இடம்பெற்று வரும் வேளையில் இதுவரை தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாமல் வேறு பிரதேசங்களில் தங்கியுள்ள வாக்காளர்களின் நிலை பற்றி தெளிவுபடுத்துமாறு மக்கள் கேட்டுள்ளனர்.

சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ள மக்கள் இதுவரை காலமும் தமது சொந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் பிரகாரம் தேர்தல்களில் வாக்களித்தனர்.

தற்போது இடம்பெற்றுவரும் வாக்காளர் இடாப்பு திருத்தப் பிரகாரம் குடும்ப அட்டை வைத்துள்ள பகுதியில் பதிவுகள் மேற்கொள்வதற்குரிய படிவங்கள் அந்தந்த கணக்கெடுப்பு உத்தியோகத்தர்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் தமது பதிவுகளை சொந்த இடத்திற்குரிய பதிவினை மேற்கொள்வதா அல்லது தற்போது வதியும் பிரிவில் பதிவினை மேற்கொள்வதா என மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

இதேவேளை மீளக்குடியமர்வு மேற்கொள்ளப்படாத பகுதிகளைச் சேர்ந்த மக்களின் பதிவு தொடர்பாக எந்தவொரு அறிவித்தலும் கிடைக்கவில்லையென பிரதேச செயலகங்களில் தெரிவிக்கப்படுவதாலும் மக்கள் செய்வதறியாது திகைக்கின்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னர் நஷ்டஈடு பெறுவதற்கு அனுப்பப்படும் விண்ணப்பத்துடன் கடைசியாக பதியப்பட்ட வாக்காளர் நிரலில் பிரித்தெடுகையும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். அவ்விதம் அனுப்புவதாயின் மீளக் குடியமர்ந்த மக்கள் வேறொரு பிரதேசத்தில் பெறப்பட்ட வாக்காளர் நிரலின் பிரித்தெடுகையே அனுப்ப வேண்டிய நிலை ஏற்படும். இந்நிலையில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நட்டஈடுகள் கிடைக்காமல் போகலாம்.

ஏற்கனவே சொந்த இடத்தில் உள்ள பதிவினை நீக்க விரும்பாத இடம்பெயர்ந்த மக்கள் தற்போது மேற்கொள்ளப்படும் தேர்தல் இடாப்பினது திருத்தப் படிவங்களைப் பூரணப்படுத்தி வழங்காமல் வைத்துள்ளனர்.

இந்த மக்களுக்கு ஏற்பட்டுள்ள குழப்பத்தினை தெளிவுபடுத்துமாறு உரிய அதிகாரிகளைக் கோரியுள்ளனர். (50-207)

# கே.கே.எஸ் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி தார்க் கலவை போடப்பட்டு சீர் செய்யப்பட்டு வருகின்றது.

அண்மைக்காலமாக இந்த வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு குழிகள் ஏற்பட்டு சேதமடைந்து காணப்பட்டது. இந்த குழிகள் தற்போது தார்க் கலவை மூலம் நிரப்பப்படுகின்றன.

இதேவேளை கே.கே.எஸ் வீதியின் அகலிப்புப் பணிகளும் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

# இடமாற்றம் வழங்கப்பட்டுக் கடமை ஏற்கத் தவறிய ஆசிரியர்களின் சம்பளம் இடைநிறுத்தப்படும்

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

அச்சுவேலி,ஜூலை 22

யாழ்.கல்வி வலயத்தில் நீண்டகாலம் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர் இடமாற்ற வேலைத் திட்டத்தின் கீழ் இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்கள் உரிய பாடசாலைகளில் தமது கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் சம்பளம் இடைநிறுத்தப்படுவதுடன்மேல் நடவடிக்கைக்கு உள்ளாக வேண்டி ஏற்படும் என யாழ்.கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர் இடமாற்ற வேலைத் திட்டத்தின்கீழ் இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்கள் தமது புதிய பாடசாலைகளில் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். இடமாற்றம் தொடர்பாக மேன்முறையீடு செய்பவர்களின் மேன்முறையீடுகள் இடமாற்றச் சபையினால் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு ஒரு வாரத்தினுள் அதற்கான பதில்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்கள் தமது புதிய பாடசாலைகளில் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிடின் அவர்களுக்கான சம்பளம் இடைநிறுத்தப்படுவதோடு மேல் நடவடிக்கைக்கும் உள்ளாக்கப்படுவார்கள். இந்த விடயத்தில் அதிபர்கள் ஆசிரியர்களுக்கு சாதகமான முறையில் நடந்து கொண்டால் அதிபர்கள் அதற்கு பொறுப்புக் கூற வேண்டும்.

இடமாற்ற வேலைத் திட்டம் உரிய முறையில் பாடரீதியாகவும், ஆரம்பப் பிரிவு கனிஷ்ட இடைநிலை, சிரேஷ்ட இடைநிலை என்ற வகையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை என்பவற்றுக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் ஆசிரியர்களுக்கு 3ஆம் தவணை தொடக்கத்திலிருந்து இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படும். அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (50-11)

# 'யாழ்கோ'வில் பால்பொருள் தேக்கம்; 120 லீற்றர் தயிர் நிலத்தில் புதைப்பு

இணுவில், ஜூலை 22

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் (யாழ்கோ) தேங்கிவரும் பால்பொருள்களினால் அங்குள்ள சுத்தமான பால்பொருள்களும் பழுதடைந்து கிருமித் தாக்கத்துக்கு உள்ளாகும் நிலை தோன்றியுள்ளதாகத் தெரியவருகிறது.

அதிகரித்த உற்பத்தியினால் சந்தைப்படுத்தமுடியாமல்போன 120 லீற்றர் தயிர் பழுதடைந்த நிலையில் கடந்த 14ஆம் திகதி உற்பத்திச் சாலையில் இருந்து அகற்றப்பட்டு நிலத்தில் புதைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இது போன்ற நிகழ்வுகள் அங்கு அடிக்கடி நிகழ்வதாகவும்,மேலும் பல உற்பத்திப் பொருள்கள் இவ்வாறு கழித்து ஊற்றப்படுவதாகவும்இதனால் உற்பத்திப் பகுதிநட்டமடைவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-45)

# தன்னலம் கருதாமல் செயலாற்றிய முன்னாள் அரச அதிபர் கணேஷ்

## யாழ்.வணிகர் கழகம் புகழாரம்

யாழ்ப்பாணம்,ஜூலை 22

மக்கள் இன்னலுற்ற போதெல்லாம் கண் துஞ்சாது, பசி நோக்காது தன்னலம் கருதாது தன்னையே அர்ப்பணித்தவர் முன்னாள் அரச அதிபர் கே.கணேஷ் என யாழ்.வணிகர் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் அரச அதிபராகக் கடமையாற்றிய பின் 01.01.2005 - 13.07.2010 வரை யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றி மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் பொறுமையுணர்வுடனும், அர்ப்பணிப்புடனும் தனது பல வருட நிர்வாக அனுபவத்தின் மூலம் யாழ்.மாவட்டத்தைச் செழுமையுறச் செய்தவர்.

யாழ்.மாவட்டத்தில் அரச அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் ஏற்பட்ட சுனாமி இயற்கை அனர்த்தம், இடம்பெயர்வுகள், தரை வழிப்பாதை மூடப்பட்டமை, வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நிவாரணக் கிராமங்களில் வாழ்ந்த மக்களை நிவாரணத்துடன் மீள் குடியமர்த்தியமை, உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் குறிப்பிட்டளவான மக்களை மீள்குடியமர்த்தல் போன்ற சேவைகளில் தன்னை அர்ப்பணித்ததோடு அல்லாமல் யாழ்.மாவட்டம் அபிவிருத்திப் பாதையில் பயணிப்பதற்காக பல வேலைத் திட்டங்களை பொருத்தமான நேரத்தில் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்று இக்கட்டான சூழ்நிலையிலும் சேவையாற்றிய அவரது செயல் பாராட்டப்படத்தக்கது.

மேலும் அவர் தமது பணிகளை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாடுகளுக்கமைய சேவையாற்றியதுடன் தினமும் காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணிக்கு மேலும் மிகவும் நெருக்கடி மிகுந்த காலகட்டங்களில் கூட தனது அலுவலகத்தில் எல்லா நாள்களும் பணியாற்றிய பெருமை கணேஷுக்கே உரியது.

யாழ்.மாவட்ட அரச அதிபராக இருந்த அவர் கடினமாக உழைத்து யாழ்.மாவட்ட சமூக பொருளாதார கலாசார நிர்வாகத்தைத் திறம்பட நிர்வகிக்கும் மாவட்டமாக திகழ வைத்தமை, வீதிகளை துரித கதியில் திருத்தியமை, யாழ்.மாவட்டத்தை லஞ்ச ஊழல் அற்ற நிர்வாக மாவட்டமாக ஆக்கியமை போன்ற தன்னிகரற்ற பல சேவைகள் மூலம் மக்களின் துன்ப துயரங்களில் பங்கெடுத்து அவர்களின் நிம்மதியான மகிழ்வான வாழ்வுக்கு அல்லும் பகலும் அயராது உழைத்த கணேஷின் அளப்பரிய சேவை களை நினைவு கூர்ந்து எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கி றோம் - என்றுள்ளது. (50-201)

# இரணைமடுக் குடிதண்ணீர் விநியோகம்; அலுவலகம் விரைவில் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 22

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் தொடர்பான அலுவலகம் ஒன்றை விரைவில் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கவுள்ளது.

இந்த அலுவலகத்தை நீர்வழங்கல் வடி காலமைப்புச் சபையின் யாழ்.அலுவலகக் கட்டடத்தில் திறந்து வைப்பதற்கான ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த அலுவலகத்திற்கு பொறுப்பாக பொறியியலாளர் திருமதி ப.சுகன்ஜா நியமிக்கப்பட்டுள்ளார் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த அலுவலகத்தின் மூலம் இரணைமடு குடிதண்ணீர் விநியோக திட்டத்தை விரைவாக மேற்கொள்வதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (50-224)








நீர்வேலி றோ.க.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் கணனிக் கூடத் திறப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்ற போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் பொறியியலாளர் கு.சிவபாலன் கணனி அறையின் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் அதிபர் சி.தர்மரட்ணம் நிற்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களுள் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கோப்பாய்ச் செய்தியாளர்)

# நாங்கள் செய்யும் அனைத்தையும் கடவுளின் செயலாகக் கருதிச் செயற்படுங்கள்

ஒரு தீப்பெட்டி இருக்கிறது. இந்தத் தீப்பெட்டியை தண்ணீரில் வைத்திருந்தால் அது ஈரமாக இருக்கும். தீக்குச்சியை உரசினால் நெருப்பு வெளிவராது. நெருப்பு இருப்பதோ உண்மைதான். ஆனால் எத்தனை தடவைகள் உரசினாலும் தீப்பற்றுவது இல்லை. அதேபோல் மனிதனிடம் தெய்வத்துவம் என்ற நெருப்பும் உயர்நலம் என்ற நெருப்பும் உள்ளடங்கி உள்ளன. இவை வெளிப்படுவதற்குப் பல உயர்ந்த ஆன்மீக அம்சங்கள் தேவைப்படுகின்றன. விரதங்கள் எத்தனை கடைப்பிடித்தாலும் ஜெபம், தியானம் செய்தாலும், பஜனைகள் புரிந்தாலும், பூஜை போன்ற சடங்குகள் செய்தாலும், கீதைபோன்ற நூல்களைப் பாராயணம் செய்தாலும் உள் மறைந்துள்ள தெய்வீக ஆற்றல் வெளிப்படுவதில்லையே. இது ஏன் என்று நாம் ஆராய்தல் வேண்டும்.

மனிதன் இவை அனைத்தையும் வெளிப்புறச் செயல்களாகவே செய்கிறான். அவன் மனது உலக இன்ப நாட்டத்திலேயே தோய்ந்திருக்கிறது. அவன் மனது உலக விடயங்கள் நிறைந்ததாக இருக்கிறது. அவனது இலட்சியம் நிரந்தர உண்மையில் நிலைபெற்றிருப்பதே என்று அவன் அறிந்திருந்தாலும் அவன் மாறுகின்ற நிலையற்ற உலக சுகத்தை நம்பி வாழ்வதால் இத்தகைய ஆன்மீகப் பயிற்சிகள் பலனளிப்பதில்லை. அவன் செயல்கள் அனைத்தும் தண்ணீரில் தன்நிழலைக் கண்டு தண்ணீரைவிட்டுச் விலகிச்செல்லாமல் நிழலுடன் போராடுவது போலாகிறது. தீப்பெட்டி போன்ற தன்னை துறவு (வைராக்கியம்) என்ற பெரிய வெப்பத்தில் வைக்கவேண்டும். துறவு என்ற சூரிய வெளிச்சத்தில் கண்விழித்திருந்தால் தெய்வத்துவம் வெளிப்படும்.

உனது கடமையைச் செய். சிருஷ்டியில் நீயும் பங்குகொள். நீ செய்வது அனைத்தையும் கடவுளின் செயல் என்று நினைத்துக்கொள். அப்போது வேலை வழிபாடாக உயர்மாற்றம் அடையும். ஸ்வாமி வேலையை விட்டு விட்டுக் காட்டுக்குச் செல் என்று ஒரு பொழுதும் சொன்னதில்லை. நீ வேலை செய்யும்போதே காட்டிலிருக்கும் தனியுணர்வுடன் இரு என்று கூறுகின்றார். ஒய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சுவாமி கூறவில்லை. நீ வேலைசெய்யும் போதே உனக்கு ஒய்வு கிடைக்கின்றது. உன்னிடமுள்ள தூசை (Dust) போக்கும்போது உன்னிடமுள்ள துருவை (Rust) போக்குகிறாய். துரு விலகும்போது உனக்கு (Rest) ஒய்வுகிடைக்கிறது. இந்த முறையில் வேலை செய்யும்போது தெய்வத்துவம் ஒவ்வொரு மனிதனிலும் எல்லா நேரத்திலும் பிரகாசிக்கிறது.



## சாயி சிந்தனை

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 22

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மானிப்பாய் பிரதேச சபை நடத்தும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பிரதேச செயலர் திருமதி பு.சிவலிங்கம் தலைமையில் மானிப்பாய் ஸ்ரீசெல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (50-100-201)

## கூறுவிலை கோரல்

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தினால் நடத்தப்படும் பயிற்சிப் பட்டறைகள், பரீட்சைக்கான வினாப்பத்திரங்கள், செய்கைத் தாள்கள் என்பனவற்றினை அச்சுப்பிரதி பண்ணுவதற்கும், பயிற்சிப் பட்டறைகள், விழாக்களுக்கு காலை, மாலை, மதிய உணவு மற்றும் சிற்றுண்டிகள், குளிர்பானம் (சோடா) என்பவற்றை வழங்குவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. எனவே கூறுவிலைகளை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் கூறுவிலைப் படிவங்களை யாழ்.வலயக் கல்வி அலுவலகக் கணக்கு கிளையில் 30.07.2010 இற்கு முன்னர் பெற்று 06.08.2010 இற்கு முன்னர் கூறுவிலைகளைச் சமர்ப்பிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

திருமதி அ.வேதநாயகம்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

## மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடங்கள்

மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் கீழ் குறிப்பிடப்படுகின்ற பதவிகளுக்காக தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி: களஞ்சியப் பொறுப்பாளர் வெற்றிட எண்ணிக்கை : 01
சம்பள குறியீட்டு இலக்கம்: 202/13
சம்பள அளவுத் திட்டம்: 9950-11700 / 85X10-90X10

தகைமைகள்:
அ) கூட்டுறவுப் பணியாளர் 14ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறையிலான பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறையிலான பதவியொன்றில் நான்கு (4) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (சாதாரணதரம்) இல் எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தி உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறை யிலான பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

02. பதவி: எழுதுனர் வெற்றிட எண்ணிக்கை : 02
சம்பள குறியீட்டு இலக்கம்: 302/14
சம்பள அளவுத் திட்டம்: 9700-11350 / 85X10-85X10

தகைமைகள்:
அ) கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு (4) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ) க.பொ.த (சாதாரணதரம்) இல் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தி உள்ளடங் கலாக 6 பாடங்களில் சித்தி.

03. பதவி: தட்டெழுத்தாளர் (தமிழ்) வெற்றிட எண்ணிக்கை : 01
சம்பள குறியீட்டு இலக்கம்: 305/15
சம்பள அளவுத் திட்டம்: 9450-11000 / 75X10-80X10

தகைமைகள்:
அ) க.பொ.த (சாதாரணதரம்) இல் தமிழ் மொழியை உள்ளடக்கியதாக 6 பாடங்களிலான சித்தியும், தமிழ் தட்டெழுத்தாற்றல் நிமிடம் ஒன்றுக்கு 20 சொற்களாக இருத்தல் வேண்டும்.

04. பதவி: காசாளர் வெற்றிட எண்ணிக்கை : 01
சம்பள குறியீட்டு இலக்கம்: 306/15
சம்பள அளவுத் திட்டம்: 9450-11000 / 75X10-80X10

தகைமைகள்:
அ) கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த.(சாதாரண தரம்) இல் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றின் காசாளர் பதவியில் அல்லது வியாபார நடவடிக்கைகளில் ஒரு (1) வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

05. பதவி: சாரதி வெற்றிட எண்ணிக்கை : 01
சம்பள குறியீட்டு இலக்கம்: 312/15
சம்பள அளவுத் திட்டம்: 9450-11000 / 75X10-80X10

தகைமைகள்:
அ) 8ஆம் வகுப்புக் கல்விச் சான்றிதழும், மோட்டார் கார் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் வாகனம் செலுத்துதலில் ஒரு (1) வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

ஏனைய விபரங்கள்:
1. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கு அமைய இதர படிகளும் வழங்கப்படும்.
2. விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். வேறு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. விண்ணப்பப் படிவங்களை மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம், பிரதான வீதி, மானிப்பாய் என்னும் முகவரியில் அமைந்த சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் வார நாள்களில், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
4. விண்ணப்ப முடிவு திகதி: 06.08.2010
5. வயதெல்லை: 18-45
6. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.
7. எழுதுனர், காசாளர் போன்ற பதவிகளுக்கு கணனி அறிவும், க.பொ.த உயர்தர வணிகத்துறையிலான சித்தியும் மேலதிக தகைமையாக எதிர்பார்க்கப்படும்.
8. சங்க எல்லைப்பரப்பில் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தலைவர்,**
**மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ. சங்கம்.**

(ஓ/5693374)

## 12 மாத காலத்தில் சரளமாக English பேச விரும்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

PR Educational Tools PTY LTD - Australia என்னும் நிறுவனம் Australia வில் பதிவு செய்யப்பட்டது. இந்த நிறுவனம் English,Science,Chemistry,Maths & Physics பாடங்களை ஆசிரியர்களின் உதவியின்றி கற்கக்கூடிய முறையில் புதிய வழிமுறைகளை உபயோகித்து DVD மூலம் பல்வேறு நாடுகளில் விற்பனைசெய்து வருகின்றது.

English DVD வெளியீடுகள் யாவும் 13 வருடங்களாக Australia வில் வாழ்ந்து வருகின்ற யாழ்ப்பாணம் மற்றும் Australia பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்புகளை மேற்கொண்டு Australia வில் Science & Chemistry ஆசிரியராகக் கடமையாற்றும் ஆங்கில மொழியைச் சரளமாகவும் அழகாகவும் பேசும் Mr.Poobalu Varathan (B.Biotech B.sc B.Teaching M.sc) என்பவரினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

1. இந்த வெளியீடுகள் அன்றாட நடைமுறைக் காட்சிகளுடன் ஒரு தொடராக வெளிவருகின்றது. இவற்றைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு வருடம் தோறும் இலவசமாக ஆங்கில Audio CD க்கள் வழங்கப்படும்.
2. எமது வெளியீடுகள் ஆங்கிலத்தையும் தமிழையும் தொடர்புபடுத்தி அதன் வேறுபாடுகள் ஒற்றுமைகள் என்பனவற்றைக் கருத்தில் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது.
3. மிக இலகுவான முறையில் உண்மையான காட்சிகளின் மூலம் இவ் DVD க்கள் உருவாக்கப்பட்டுள்ளது.
4. எமது வெளியீடுகள் முழுவதும் நடைமுறை வாழ்க்கைகளில் தமிழர்களும், ஆங்கிலேயர்களும் உரையாடுகின்ற முழு விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. ஒவ்வொரு DVD உடனும் DVD யில் சொல்லப்படுகின்ற வசனங்களைக் கொண்ட ஒரு சிறு புத்தகமும் தரப்படும்.
6. இந்த DVD க்கள் தமிழர்கள் சிறந்த முறையில் ஆங்கிலம் பேச வேண்டும் என்ற எண்ணக் கருவை மையமாக வைத்து உருவாக்கப்பட்டது.

எமது வெளியீடுகளை கற்பதன் மூலம்

1. சிறந்த முறையில் ஆங்கில இலக்கணத்தைக் கற்றுக்கொள்வீர்கள்.
2. சிறந்த முறையில் வசனங்களை அமைத்து அழகாக ஆங்கிலம் பேசுவீர்கள்.
3. சிறந்த முறையில் சொற்களை உச்சரிப்பீர்கள்.
4. 12 மாத காலத்தில் சரளமாகவும் அழகாகவும் எந்த ஒரு சிக்கலும் இன்றி வாழ்க்கையின் எந்தப் பகுதியிலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் சரளமாகவும் அழகாகவும் ஆங்கிலத்தைப் பேசுவீர்கள்.

### எங்கள் DVD&CD மட்டுமே நீங்கள் சிறந்த முறையில் ஆங்கிலத்தைப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் உதவும்

Note: உள்நாட்டிலோ அல்லது ஆங்கில மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிராத நாடுகளில் (உதாரணமாக இந்தியா) உருவாக்கப்பட்ட ஆங்கில DVDக்கள் அல்லது CDக்கள் நீங்கள் சிறந்த முறையில் ஆங்கிலத்தை பேசுவதற்கும், எழுதுவதற்கும் உதவமாட்டாது. ஏனெனில் இவற்றை தயாரிப்பவர்களின் (Spoken English) அறிவு மிகவும் குறைவானது. அத்துடன் இவர்களின் ஆங்கில உச்சரிப்பும் சிறந்ததல்ல.

Note: எமது DVDக்கள் CDகளை COPY செய்வது குற்றமானது. இந்த குற்றச்செயல் செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எமது முதலாவது DVDயை கற்றுக்கொள்வதன் மூலம் சிறந்த முறையில் ஆங்கிலம் பேசுவது, எழுதுவது போன்றவைகளில் மிகச்சிறந்த முன்னேற்றத்தை அடைவீர்கள் என்பதற்கு நாம் உத்தரவாதம் தருகின்றோம். எமது (Sample DVD யை பார்க்க விரும்பின் பின்வரும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்)

கலாசேத்திரா கல்வி, நுண்கலை வளாகம் (Kalashethra Educational Fine Arts Campus)
அம்மன் கோயிலடி, மின்சார நிலைய வீதி, ஊரெழு மேற்கு, ஊரெழு.
தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி எண்: 0217901991, 0779507264
E-mail: chemistry85@rocketmail. compr.edu.tools.english.hb@gmail.com

சிறந்த முறையில் ஆங்கில மொழியைப் பேசவோ அல்லது எழுதவோ விரும்புபவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் அல்லது Phone இல் அல்லது E-mail இல் தொடர்புகொள்ளவும்.

எமது DVD & CDக்கள் வயது வேறுபாடின்றி தொழில் வேறுபாடின்றி பாடசாலை மாணவர்கள் Doctors, Engineers, Accountants, University Students, University Lecturers, Carpenters, School Teachers, Public Servants, Technical College students, Nurses, shop Assistants மற்றும் யாவரும் உபயோகிக்கலாம்.

எமது வெளியீட்டைப் பெற விரும்புவோர் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் எதிர்வரும் ஆகஸ்ட் 07 ஆம் திகதிக்குள் முற்பணம் செலுத்தி உங்களின் பெயர்களை பதிவுசெய்து கொள்ளவும். DVD க்கள் ஆகஸ்ட் 20 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படும்.

விலை DVD+புத்தகம் (DVD இல் சொல்லப்படும் வசனங்கள்)+Free Audio Cds 1100/- மட்டுமே

Note: Free ஆங்கில Audio Cd க்கள் தங்களால் பணம் செலுத்தப்பட்ட DVD யை பெற்றுக்கொண்ட சில வாரங்களில் வழங்கப்படும்.

பெற்றோர்களே, நலன் விரும்பிகளே, நீங்களும் உங்கள் பிள்ளைகளும் சிறந்த முறையில் ஆங்கிலத்தைப் பேச எழுத விரும்பினால் எமது வெளியீடுகளை வாங்கிக்கொள்ளவும். ஒரு வருடத்தில் குறிப்பிட்ட கால இடைவெளியில் 3 DVDக்கள் வெளிவரும்.

ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய DVD க்கள் மட்டும் கையிருப்பில் உள்ளதால் DVD க்களைப் பெற்றுக்கொள்ள முந்துங்கள்.

**PREDUCATIONAL TOOLS PTY LTD- AUSTRALIA ENGLISH DVDs**

## ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 22

கொக்குவில் இந்துக் கல்லூரியின் 2010 உயர்தர மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (50-204)

## கணித செயல்நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 22

''ஆறுதல்'' நிறுவனத்தின் முன்பள்ளி சிறுவர்களுக்கான கணித செயல்நூல் வெளியீடு எதிர்வரும் 28 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் யாழ். கல்விவலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் க.விமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். இதன் மதிப்பீட்டுரையை கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி முதுநிலை விரிவுரையாளர் பா.தனபாலன் நிகழ்த்தவுள்ளார். (50-319)

# இரணைமடுவிலிருந்து குடாநாட்டுக்குக் குடிதண்ணீர்; பணிகள் உடன் ஆரம்பமாகும் என்கிறார் அமைச்சர்

## ஜனாதிபதியின் நேரடி ஒப்புதலும் பெறப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூலை22

ஜனாதிப்தி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் இரணைமடுவிலிருந்து யாழ். குடாநாட்டுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்படும். இதற்கான தீர்மானம் பொறியியலாளர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை அமைச்சர் திணேஷ் குணவர்த்தன இவ்வாறு அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்.குடாநாட்டுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் கொண்டு வருவதற்கு தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் உயரதிகாரியொருவர் முறையான காரணமில்லாது முட்டுக்கட்டையும், தடையும் போட்டுச் செயற்பட்டு வந்த தாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட உயரதிகாரியை இவ்விடயத்தில் இருந்து விலக்கி நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை அமைச்சர் தலைமையில் கடந்த 16 ஆம் திகதி பொறியியலாளர் குழு ஒன்றைக் கூட்டியது

இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தில் துறைசார்ந்த பொறியியலாளர்கள், நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் பொறியியலாளர்கள், தலைவர், பொதுமுகாமையாளர்கள் மற்றும் வடபகுதி உதவிப் பொது முகாமையாளர்கள், முகாமையாளர்கள் இதற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதில் அனைவரது கருத்துக்களையும் அதன் திட்ட செயற்படுத்துகையை நிறைவேற்றுவதில் ஏதேனும் தடங்கல்கள், பிரச்சினைகள் இருப்பின் விரிவாகக் கூறுமாறும் கேட்கப்பட்டது.

அதில் இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்- குடாநாட்டுக்கு குடிதண்ணீர் கொண்டு செல்வதில் எவ்வித இடையூறும் இல்லையெனவும் இத்திட்டத்தினை விரைந்து நடத்தலாம் எனவும் அனைத்துத் தரப்பினராலும் எடுத்துக் கூறப்பட்டது.

இதனையடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நேரடி ஒத்திசைவும் பெறப்பட்டது.

இதன் பிரகாரம் உடனடியாகத் திட்டம் நிறைவேற்றுதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு உலக வங்கியின் நிதிப்பங்களிப்புடன் நிறைவேற்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இக்கலந்துரையாடலில் எதிர்காலத்தில் தென்பகுதியில் இருந்து ஆறு மூலம் குடிதண்ணீர் கொண்டு வருவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

இந்தக் குடிதண்ணீர் விநியோகத்திட்டத்துக்கு இடையூறாக இருந்து வந்த உயரதிகாரி இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. (50-302)

# இன்று மின்வெட்டு

யாழ்ப்பாணம் ,ஜூலை22

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் வீதி அகலமாக்கல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதை அடுத்து மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் இன்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை பின்வரும் இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று சுன்னாகம் மின்சார சபை அறிவித்துள்ளது.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, கரந்தன், நீர்வேலி, கோப்பாய் மற்றும் வடமராட்சி ஆகிய பிரதேசங்களிலேயே மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-1-9)




# நல்லூர் பாலகதிர்காம ஆலயத்தின் ஆடிவேல் வீதியுலா 27 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை22

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தான ஆடிவேல் விழா எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து இரண்டு நாள்கள் நடைபெறும்.

27 ஆம் திகதி காலை 9 மணிக்கு இந்த ஆடிவேல் வீதியுலா ஆரம்பமாகும்.

இந்த வீதியுலா பருத்தித்துறை வீதி வழியாக நண்பகல் 12 மணிக்கு வீரமா காளி அம்மன் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து பிற்பகல் 2 மணிக்கு வீதியுலா ஆரம்பமாகி யாழ். நகர் வீதிகளூடாக மாலை 6.30 மணிக்கு வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலைச் சென்றடையும்.

அடுத்த நாள் 28 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த வீதியுலா காங்கேசன்துறை வீதி வழியாக நண்பகல் 12 மணிக்கு வண்ணை நாச்சிமார் கோயிலைச் சென்ற டையும். அங்கிருந்து புறப்பட்டு மாலை 6.30 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப் பதி ஆலயத்தில் நிறைவடையும்.

மறுநாள் 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்குப் புறப்படும் வீதியுலா திரு நெல்வேலி வழியாக அரசடி சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்தைச் சென்றடைந்து பின்னர் அங்கிருந்து கல்வியங் காடு வீதி வழியாக இரவு 7 மணிக்கு பால கதிர்காம ஆலயத்தை வந்தடையும். (50-224 -111)

# யாழ். வலயக் கல்வி அலுவலகத்துக்கு புதிதாக இரண்டு மாடிக் கட்டடம்

அச்சுவேலி ,ஜூலை 22

யாழ். வலயக் கல்வி அலுவலகத்துக்கு புதிய மாடிக்கட்டடம் அமைக்கப்படுகின்றது. இதன் முதலாவது தளம் 60 லட்சம் ரூபா செலவில் இந்த வருடம் முடிவதற்கு முன்னர் நிறைவு செய்யப்படவுள்ளது.

நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த மிசனரிமாரினால் கட்டப்பட்ட கட்டடத்தில் செயற்பட்டுவரும் யாழ். கல்வி வலயத்துக்கு புதிய கட்டடம் இரண்டு மாடி கொண்டதாக கட்டப்படவுள்ளது.

இரண்டு மாடிக் கட்டடத்தின் கீழ்த் தளம் 60 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப் படவுள்ளது. அடுத்து மாடிக் கட்டடங்கள் 2 ஆவது கட்டமாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

புதிய மாடிக் கட்டடத்தின் கீழ்த்தளம் இந்த வருடம் முடிவதற்கு முன்னர் கட்டி முடிக்கக்கூடிய வரையில் வேல்ல ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (50-11)

# திடீர் பரிசோதனையில் சிக்கிய சுகாதாரமற்ற உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை22

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள உணவு கையாளும் கடைகளில் சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் வகையில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

கடந்த 19 ஆம் திகதி நகர்ப்பகுதியில் திடீர் பரிசோதனை நடத்திய போது அச்சிடப்பட்ட தாள்களில் நேரடியாக வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்களும் திறந்த அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-207)

# பெற்றோரை இழந்த 25 மாணவிகளுக்கு 1000 ரூபா வைப்பிலிட்டு வங்கிக் கணக்கு

## இலங்கை வங்கி சுன்னாகம் மேற்றரக் கிளை வழங்கியது

இணுவில் ,ஜூலை22

பெற்றோரை இழந்த நிலையில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்கும் 25 மாணவிகளுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் வைப்பிலிட்டு வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து வழங்கியுள்ளது சுன்னாகம் இலங்கை வங்கியின் மேற்றரக் கிளை.

கடந்த வாரம் மேற்படி கல்லூரியின் அதிபரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்றரக் கிளையின் முகாமையர்ளர் எஸ்.பி. அரசகுமாரும், ஊழியர்களும் கலந்து கொண்டு மேற்படி 25 மாணவிகளுக்கும் ஒவ்வொரு சீருடைத் தொகுதி, அப்பியாசக் கொப்பிகளின் தொகுதி, கணித பாட உபகரணக் கருவிப் பெட்டி என்பனவற்றை வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு முகாமையாளர் எஸ்.பி அரசகுமார் உரையாற்றுகையில்,

எதிர்காலத்திலும் இதுபோன்ற உதவிகளைச் செய்வதற்கு நாம் தயாராக உள்ளோம். பெற்றோரை இழந்த இப்பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவ விரும்புபவர்கள் சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையுடன் தொடர்பு கொண்டு அதனைச் செய்ய முன்வாருங்கள்.

இதற்காக குறித்த நிதியானது சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையின் ஊழியர் நலன்புரி விளை யாட்டுத் துறையினரால் ஒதுக்கீடு செய்யப் பட்டது- என்று தெரிவித்தார். (50-45)

# யாழ். திறந்தவெளி அரங்கு இடித்து அகற்றப்பட்டது

## புதிய கட்டடம் அமைக்க வசதியாக



யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ். திறந்தவெளி அரங்கின் பழைய கட்டடப் பகுதி முற்றாக இடித்து அகற்றப்பட்டுள்ளது. யுத்த சூழ்நிலையால் முற்றாகச் சேதப்பட்ட இக்கட்டடத்தை மீள்நிர்மாணம் செய்வதற்கு வசதியாகக் கட்டடத்தின் இடிபாடுகள் தற்போது அகற்றப்பட்டு வருகின்றன.

இந்த இடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய திறந்த வெளியரங்கை அமைப்பதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கனரக வாகனங்களின் வசதியுடன் இந்தச் சேதமடைந்த கட்டடம் தற்போது முற்றாக உடைத்து அகற்றப்படுகின்றது.

இந்தக் கட்டட இடிபாடுகளை அகற்றும் பணியை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா , யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா ஆகியோரும் நேரில் சென்று பார்வையிட்டனர். (50-224)





வடமாகாண ஆளுநர் விருது பெற்ற யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் மா. நடராஜசுந்தரத்துக்கு பருத்தித்துறையில் அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளை முகாமையாளர் திருமதி பிரபாகரன் , பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளை முகாமையாளர் மு.சிவநேசன், பிரபல வர்த்தகர் பி. இராசதுரை ஆகியோர் உரையாற்றுவதையும் , நிகழ்வுக்குத் தலைமை வகித்த மூத்த பத்திரிகையாளர் செல்லத்தம்பி மாணிக்கவாசகர், பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படம்-கர்ணன்)

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும்

**யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி அதன் 10ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

கோப்பாய்க் கிராமத்துக்குப் பல துறைகளிலும் வரலாற்றுப் பெருமை உண்டு. யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனுக்கு ஆலோசனை கூறும் மந்திரிமார், கல்வியாளர்கள், சான்றோர் வாழ்ந்த மண். சேனாதிராச முதலியார், சபாபதி நாவலர், வித்தகம் ச.கந்தையபிள்ளை ஆகிய ஆக்க இலக்கிய கல்விச் சான்றோர் கோப்பாய் மண்ணிலே உதித்தவர்கள். சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்களுடைய காணியிலே கோப்பாய் ஆசிரிய கலாசாலை கட்டப்பட்டு இன்றுவரை பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகின்றார்கள். இவ்வாறு பெருமை பூத்த கோப்பாய் நகரில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 2000 ஆம் ஆண்டு மே 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதியாக இருந்த கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் 1999ஆம் ஆண்டிலிருந்தே என்னுடன் தொடர்பு கொண்டு இக் கல்லூரியை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதனும் அன்றைய கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் பா.தனபாலனும் என்னை நேரடியாகச் சந்தித்து கல்லூரியின் ஆரம்பம் தொடர்பான செயற்பாடுகள் பற்றி பல தடவைகள் உரையாடினர். அரசாங்கத்தின் எந்த உதவியும் கிடைக்கமுடியாத அந்த யுத்தகாலத்தில் இக்கல்லூரியை ஆரம்பிக்க பலரிடம் உதவிகளை நாடினோம். கோப்பாய் பிரதேச நலன்விரும்பிகள் உதவினார்கள். கல்வியமைச்சினால் பீடாதிபதியாக நியமிக்கப்பட்ட தனி ஒரு கடிதத்துடன் மட்டும் தற்றுணிவுடன் வந்த கலாநிதி. தி. கமலநாதன் அவர்களுக்கு என்னாலான அனைத்து உதவிகளையும் செய்தேன். ஏனெனில் எமது தமிழர்தம் ஆசிரியர் கல்வி விருத்திக்குத் தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பங்கு முக்கியமானது என்பதாலும் கல்வியில் பின்னடைவைச் சந்தித்த எமது இனம் முன்னேற்றம் அடைய வேண்டும்என்பதாலும் ஆகும். 02.05.2000 இலங்கையில் ஏனைய இதைப் போற நான்கு கல்லூரிகள் ஆரம்பித்த திகதி அன்றே எமது கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு திறந்த வெளிச்சிறைச் சாலையாக இருண்ட நிலையில் யுத்த சூழல் பயங்கரங்களால் உறைந்து போயிருந்த காலம்.... வசதி படைத்தவர்கள், புத்திஜீவிகள், கல்வியியலாளர்கள் கொழும்பு - வெளிநாடு என்று ஓடிக்கொண்டிருந்த அசாதாரண வேளை கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தனது சொந்தவீடு அழிக்கப்பட்ட நிலையில் வசதிவாய்ப்புக்களை விடுத்து, குடும்பத்தை விட்டு தனி ஒருவராக கல்லூரிப் பீடாதிபதி பொறுப்பை ஏற்று வந்தார். பல சவால்கள் பல தடைகள், பல பிரச்சினைகள் எதிர்கொண்டு எமது ஒத்துழைப்புகளுடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஒரு பகுதியில் ஆரம்பித்தார். அன்றைய வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு.எஸ்.அழகரத்தினம், கல்வியமைச்சின் பிரதம ஆணையாளர் நிஹால் ஹேரத், கல்வியமைச்சர் ரிச்சட்பத்திரன, இன்றைய அமைச்சரும் அன்றைய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, அன்றைய கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மு. பரஞ்சோதி, விரிவுரையாளர்கள் பா. தனபாலன், கே.கணபதிப்பிள்ளை, எஸ்.செந்தில்மணி அன்றைய அரசாங்க அதிபர். க. சண்முகநாதன், நான் தலைவராக இருந்த கோப்பாய் புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்திக்கழகம், கோப்பாய் லயன்ஸ் கழகம், யாழ்ப்பாணம் லயன்ஸ்கழகம், கூட்டுறவு அமைப்புக்கள், கிராம சேவகர்கள், பொதுமக்களின் உதவிகளைப் பெற்று 02.05.2000 அன்று ஓய்வுபெற்ற அதிபர் திரு. குமாரசாமி அவர்கள் கல்லூரிப் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்ய கலாநிதி தி.கமலநாதன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கொடியை ஏற்றி மங்கலகரமாகக் கல்லூரியை ஆரம்பித்து வைத்தார்.

பௌதிக மனிதவளப் போதாமைகளுக்கு மத்தியில் பல பிரச்சினைகளுக்கு கலாநிதி. தி.கமலநாதன் முகம்கொடுக்க வேண்டியிருந்தது. அவருக்குப் பக்கபலமாக என்னையே அர்ப் பணித்துப் பல காரியங்களை ஆற்ற வேண்டிய சூழ்நிலைகளுக்கு நான் பல தடவைகள் தள்ளப்பட்டேன். தளராது உதவி செய்தேன். பல சமூகசேவை அமைப்புக்களின் உதவிகளைப் பெற்றோம். கல்லூரி ஆரம்பித்த காலத்தில் திரு.பா.தனபாலன் (உப பீடாதிபதி கல்வியும் தர மேம்பாடும்) திரு.எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை (உப பீடாதிபதி நிதி, நிர்வாகம்) திரு. து.சந்திரபிரகாசம், உப பீடாதிபதி (தொடருறுகல்வி), விரிவுரையாளர்களாக திரு.க.ரட்ணேஸ்வரன். செல்வி.எஸ்.சுகந்தி, செல்வி. எஸ். மீனலோஜினி, திருமதி. வி.நரேந்திரா, திருமதி ஞா.கணேசநாதன், செல்வி.மு.கந்தசாமி, திருமதி. எஸ்.சிவபாதம், திருமதி கௌரி சுரேசன் ஆகியோர் தம்மையே அர்ப்பணித்து பீடாதிபதி கலாநிதி. தி.கமலநாதன் அவர்களுடன் இணைந்து ஊரடங்கு வேளையிலும் இரவு பகலாக உழைத்தார்கள். அவ்வாறே கல்விசாரா ஊழியர்களான பதிவாளர் ப.வைத்தியகுமார், திரு. எஸ். மணிவண்ணன், திரு.ஏ. சந்திரசேகரன், திரு.எஸ்.சோதிரூபன், திருமதி எஸ். நிஷாந்த, திரு.பி.கிருபானந்தா, திருமதி மேரிலோகாம்பிகை, திரு.எஸ்.விஸ்ணுகுமார், திரு.த.சிவபாலன் ஆகியோரும் 2000ஆம் ஆண்டிலிருந்து கல்லூரியை வளர்க்க அரும்பாடுபட்டார்கள். குறிப்பாக பதிவாளர் திரு.பி. வைத்தியகுமார் இரவு பகலாக தனது பணியை அர்ப்பணிப்புடன் செய்தார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களது உயர்வான கட்டுப்பாடு, ஆசிரிய கல்வியியலாளர்களின் கடமையுணர்வு, கல்வி சாரா ஊழியர்களின் கண்ணியமான செயற்பாடுகளால் தேசிய ரீதியிலும், பிரதேச ரீதியிலும் மிக உயர்ந்த மதிப்பைப் பெற்றிருந்தது. இதற்கான அடிப்படைகளைப் பீடாதிபதி கலாநிதி. தி.கமலநாதன் ஏற்படுத்தினார். என் தலைமையிலான கோப்பாய் புனர்வாழ்வுக்கழகம் முன்னைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு.த.சித்தார்த்தனை அணுகி காணியை அன்பளிப்புச் செய்யவேண்டினோம். அவரும் செய்தார். இப்பின்னணியில் உலக வங்கி, கல்வியமைச்சின் பிரதிநிதிகளுடன் பல சந்திப்புக்களை நானும் பீடாதிபதியும் ஏற்படுத்தி பல தந்திரோபாய நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களைக் கல்லூரிக்கு வரவழைத்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன் 14 ஏக்கர் காணியை அன்பளிப்புச் செய்தமையை நேரடியாகக் காட்டி கட்டடத்தின் அவசியத்தை வலியுறுத்தி உலக வங்கியினரை கட்டடம் அமைக்க சம்மதிக்க வைத்தோம். இது கல்லூரி வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். இவ்வேளை காணியை அன்பளிப்புச்செய்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

பல்வேறு சவால்கள், பிரச்சினைகளுக்கும் மத்தியில் தற்காலிகக் கட்டடத்தை அமைத்து 19.01-2003 இல் சொந்தக்காணியில் சொந்தக் கட்டடத்தில் கல்லூரி இயங்க ஆரம்பித்தமை ஒரு வரலாற்றுச் சாதனையாகும். வீரசங்கிலியன் விளையாட்டு மைதானத்திற்கு பெற்றோர்கள் சமூகத்தவர்களின் ஆதரவுடன் தனியான காணி வாங்கப்பட்டது.

வேறு எந்தக் கல்லூரியிலும் இல்லாத ஒரு புதிய வரலாறாக இந்நிகழ்வு இடம்பெற்றது. ஒரு மிகக் குறுகிய காலத்தில் வேறு எந்த ஒரு நிறுவனமுமே சாதிக்க முடியாத சாதனையை எமது ஆதரவுடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர் சாதித்தனர். இதற்கான அச்சாணியாகத் தன்னை அர்ப்பணித் தவர் முதலாவது பீடாதிபதி கலாநிதி. தி.கமலநாதன் ஆவார். 2005ஆம் ஆண்டு அவர் ஓய்வுபெற வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதியான திரு. எஸ்.கே. யோகநாதன் அவர்கள் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாவது பீடாதிபதியாக பெறுப்பேற்றார்.

கல்லூரியை பொறுப்பேற்றது முதல் சுமுகமான முகாமைத்துவ செயலாற்றுகையு டன் திரு. எஸ்.கே.யோகநாதன் அவர்கள் சிறப்பாகக் கல்லூரியை இயக்கி வருகின்றார். 2005ஆம் ஆண்டு காலப்பகுதி கடுமையானயுத்தம்.போக்குவரத்துத் தடைகள், உணவுப் பொருள்களுக்கான கடுமையான தட்டுப்பாடுகள் நிலவிய காலகட்டம். அக்காலத்தில் கல்லூரியை மூட வேண்டிய சந்தர்ப்பங்கள் இருந்தும் என்னுடனும். அரச- அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு இரவு பகலாக செயலாற்றி பல்வேறு உதவிகளைப் பெற்று கல்லூரியை தொடர்ந்து வளர்ச்சியடையத் தன்னை அர்ப்பணித்தார்.கல்வியமைச்சு தேசிய கல்வி நிறுவக அதிகாரிகள் அவரது செயற்பாடுகளைப் பாராட்டினர். இவருடன் இணைந்து தற்போதைய பதிவாளர் திரு.எஸ். சிவநாதன் அவர்களும் கல்லூரிக்காக அளப்பரிய சேவையாற்றி வருகின்றார். கல்லூரியின் 10ஆவது ஆண்டு வளர்ச்சி வரை இக்கல்லூரிக்காகத் தம்மை அர்ப்பணித்து சேவையாற்றிய அனைவரது சேவைகளையும் நாம் கௌரவப்படுத்துகின்றோம்.

திரு.எஸ்.கே.யோகநாதன் முதலாவது பீடாதிபதி கலாநிதி. தி.கமலநாதன் அவர்களின் சேவையைக் கௌரவிக்க மிகச்சிறந்த மணிவிழா ஒன்றை நடத்தியதுடன் மணிவிழாக்குழுத் தலைவராக நின்று "காலத்தை வென்ற கமலம்" என்ற மிகத்தரமான மலர் ஒன்றையும் வெளியிட மூலகாரணமாக இருந்தார். இச்செயலாற்றுகை அவரது உயர் பண்பைக் காட்டுகின்றது.

எமது சமூகத்தின் இயைபாக்கத்திற்கும், மீளாக்கம் செய்வதற்கும், மனித-பௌதிக வளங்களை வலுவுடையச் செய்வதில் கல்விச் செயல்முறைகளே முதலிடம் வகிக்கின்றன. சமூகத்தின் வளமான பராமரிப்புக் காரணியாகவும் தொடர் நிலைவலுவூட்டும் காரணியாகவும் விளங்கும் கல்வி முறைமையின் நெறியாழ்கைக்கு ஆசிரியர்களே பொறுப்பாகின்றனர். கல்வித் தொகுதியின் குறியீடு ஆசிரியத்துவத்தினாலேயே புலப்படுத்தப்படுகின்றது. எனவே புதிதான ஆசிரியர்களை உருவாக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மிக அதிகமான பொறுப்புக்களும், வகை கூறல்களும் உள்ளன. இதை உணர்ந்து கல்லூரிச் சமூகத்தினர் மேலும் பல அர்ப்பணிப்புக்களையும் சேவைகளையும் எமது சமூகத்திற்கு செய்ய வேண்டியது காலத்தின் கடமையாகும்.



டாக்டர் வை.தியாகராஜா

MJF-JP

# கிழக்கு மாகாண அமைச்சு அலுவலகங்கள் திருமலை வரோதய நகருக்கு மாற்றம்

திருகோணமலை, ஜூலை 22

கிழக்கு மாகாண சகல அமைச்சு அலுவலகங்களும் திருகோணமலை வரோதய நகரிலுள்ள மாகாண சபைக்குச் சொந்தமான நிரந்தரக்கட்டடங்களுக்குமாற்றப்படவுள்ளன.

இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் விசேட குழுவொன்றை நியமித்துள்ளார்.

2007ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு மாகாண சபைகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. இதற்குப் பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் உட்பட வடக்கு மாகாண சபைக்குட்பட்ட சகல அமைச்சுகளும் வரோதய நகரிலுள்ள கிழக்கு மாகாணத்திற்குச் சொந்தமான கட்டடத்திலேயே இயங்கி வருகின்றன.

தற்போது கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வடக்கு மாகாணசபைக்கான புதிய கட்டடங்கள் பூர்த்தியாக்கப்பட்டதும் வரோதய நகரில் இயங்கி வரும் வடக்கு மாகாண சபையின் சகல அமைச்சுகளும் அங்கு மாற்றப்படும்.

அதன் பின்னர் தற்போது திருகோணமலை நகரில் இயங்கி வரும் கிழக்கு மாகாண முதலமைச்சர் செயலகமும் அமைச்சுகளும் வரோதய நகரிலுள்ள கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படும்.

கிழக்கு மாகாண முதலமைச்சரின் இத்தீர்மானத்தால் கிழக்கு மாகாண அமைச்சுகளில், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களால் தங்கள் கடமைகளை எளிதில் நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

அத்துடன் முதலமைச்சரையும் இதர அமைச்சர்களையும் ஒரே இடத்தில் சந்திப்பதற்கான வாய்ப்பும் கிட்டும் என மக்கள் திருப்தி தெரிவிக்கிறார்கள். (ஸி)




# மட்டு. மாவட்ட தேசிய பாடசாலைகள் அபிவிருத்தி ஒன்றியம் உதயம்

மட்டக்களப்பு, ஜூலை 22

''மட்டக்களப்பு மாவட்ட தேசியப் பாடசாலைகள் அபிவிருத்தி ஒன்றியம்'' என்ற அமைப்பு அண்மையில் சிவானந்தா வித்தியாலய மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து தேசிய பாடசாலைகளின் அதிபர்களும் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்களும் இந்த ஒன்றியத்தில் அங்கம் வகிக்கிறார்கள்.

இதன் தலைவராக சிவானந்தா வித்தியாலய தேசிய பாடசாலை அதிபர் ரவீந்திரமூர்த்தியும் செயலாளராக ஓட்டமாவடி தேசிய பாடசாலை அதிபர் ஜனாப் எம்.எல்.ஏ.ஜுனைற்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அங்குரார்ப்பண வைபவத்தில் மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். பிரதேச கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஈ போல், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பாஸ்கரன் ஆகியோர் உட்பட பல கல்விமான்களும் கலந்துகொண்டார்கள்.

மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகளின் குறைப்பாடுகளை நீக்குவதற்கும் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கும் ஒன்றியம் முனைப்புடன் செயல்படும். இது தொடர்பாக கல்வி அமைச்சுடனோ தேவை ஏற்படின் ஜனாதிபதியுடனோ இது தொடர்பு கொள்ளும் என கலந்துகொண்ட அதிபர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். (ஸி)

# ஆனைத்தீவு குளத்தைப் புனரமைக்குக

அம்பாறை, ஜூலை 22

ஆனைத்தீவு குளத்தைப் புனரமைத்துத் தருமாறு இப்பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுகின்றார்கள். இக்குளம் தற்சமயம் தூர்ந்துபோய் பராமரிப்பு அற்றுக் காணப்படுகின்றது.

குளம் புனரமைக்கப்பட்டால் இதனை அண்டிய கிரான் வெளியில் சுமார் 90 ஏக்கர்களுக்கும் மேற்பட்ட வயற்காணியில் கோடை காலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளமுடியும் என இப்பகுதி விவசாயிகள் கூறுகிறார்கள்.

இக்குளத்தைப் புனரமைத்து நன்னீர் மீன் வளர்ப்பையும் மேற்கொள்ளலாம். இதனால் மீன்பிடித்தொழிலிலில் ஈடுபட்டு சீவியம் நடத்த இப்பகுதி விவசாயிகளுக்கு வாய்ப்புக் கிட்டும் என்றும் இவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

கிழக்கு மாகாண நீர்ப்பாசன அமைச்சரும், விவசாய அமைச்சரும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி ஆனைத்தீவு குளத்தைப் புனரமைத்து தரவேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுக்கிறார்கள். (ஸி)

# பொதுமக்களை நேரில் அணுகியே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்

## பொலிஸார் நடமாடும் சேவையில் பொலிஸ் அத்தியட்சகர் பேச்சு

திருகோணமலை, ஜூலை 22

''மக்களிடையே நிலவும் பிணக்குகளுக்கும் பிரச்சினைகளுக்கும் அவர்களை அணுகியே பரிகாரம் காணப்படவேண்டும். அதுபோல பொதுமக்களுக்கும் பொலிஸாருக்குமிடையிலான நல்லுறவு எப்போதும் கட்டி எழுப்பப்பட வேண்டும். இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே, பொலிஸாரின் நடமாடும் சேவை இயங்குகிறது.''

- இவ்வாறு திருமலை ஜுமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற பொலிஸாரின் நடமாடும் சேவை நிகழ்வில் பொலிஸ் அத்தியட்சகர் பந்துல விஜேவர்தன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''இந்த நடமாடும் சேவை பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் வழிகாட்டலில் ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் மாவட்டந்தோறும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இங்கு நான் உங்களுக்கு சேவையாற்றவே வந்துள்ளேன். எந்நேரமும் மக்கள் தங்கள் பிரச்சினைகள் தொடர்பாக என்னுடன் பேசலாம்.'' என்றார். அத்துடன் அவர் தமது தனிப்பட்ட 0773136901 என்ற தொலைபேசி இலக்கத்தையும் வழங்கினார்.

திருமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சரித ஏ.பி.ஜயசிங்க தமதுரையில், ''முன்னைய பொலிஸ் - பொது மக்கள் அபிவிருத்திக்குழு தற்போது சிவில் பாதுகாப்புக் குழு எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இன்று யுத்தம் முடிவடைந்து அமைதி திரும்பியுள்ளது. இந்நிலையில் மக்களை அணுகி அவர்களுக்குச் சேவையாற்றவே பொலிஸ் திணைக்களம் காத்திருக்கிறது.'' என்றார். அத்துடன் சிவில் பாதுகாப்புக் குழுவுக்கான அடையாள அட்டைகளையும் அவர் வழங்கினார்.

ஜமாலிய வித்தியாலய நூலகத்திற்கென ஒரு தொகுதி புத்தகங்கள் வித்தியாலய பகுதித்தலைவர் ஏ.கே.எம். சாலியிடம் பொலிஸ் நிலையத்தால் கையளிக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இந்நடமாடும் சேவையில் பயன் பெற்றனர்.

காணி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், பிணக்குகள் ஆகியவை இதில் தீர்க்கப்பட்டன. தேசிய அடையாள அட்டை வழங்கல், புதுப்பித்தல், திருமலை பொது வைத்தியசாலையின் இலவச வைத்தியசேவை, செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவிலான மூக்குக் கண்ணாடி வழங்கல் ஆகிய அம்சங்கள் இதில் இடம்பெற்றன. (ஸி)

# இம்மாதம் 31 இல் வாக்காளர் பதிவு நிறைவு மலையக மக்களுக்கு இ.தொ.கா. அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 22

ஜூலை மாதம் 31ஆம் திகதிவரை மட்டுமே வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பெயரைப் பதிவுசெய்துகொள்ளும் இறுதிச் சந்தர்ப்பம்.

இதனால் மலையக மக்கள் தவறாது தமது பெயர்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என - இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், ஊடகப் பேச்சாளருமான எஸ்.ஜெகதீஸ் வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக இ.தொ.கா. ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

எதிர்வரும் காலங்களில் அரசு தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டு வரவுள்ளது. இதனால் சிறுபான்மைச் சமூகப் பிரதிநிதித்துவங்களில் பின்னடைவை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

எனவே, வரலாற்றுத் தவறுகளை இழைக்காமல் எமது பிரதிநிதித்துவங்களைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

நாம் ஒருபோதும் வரலாற்றுத் தவறுகளை இழைத்தவர்களாகக் கருதப்படக் கூடாது. இதை மனதில் வைத்து, அதற்கான இந்த இறுதிச் சந்தர்ப்பத்தை மலையக மக்கள் நிறைவேற்றி வைப்பார்கள் என்பதில் எஸ்.ஜெகதீஸ்வரன் நம்பிக்கை கொண்டுள்ளார்.

எமது பிரதிநிதித்துவங்கள் கைநழுவிப் போகாத வண்ணம், மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அனைவரும் வாக்காளர் பட்டியலில் தமது பெயர்களைத் தவறாது பதிவுசெய்து கொள்ள வேண்டும்.

இதுவரை காலமும் வாக்களர்களாகத் தம்மைப் பதிவுசெய்து கொள்ளாதவர்கள் வாக்காளர் பதிவு விண்ணப்பத்துடன் சத்தியக் கடதாசி ஒன்றையும் இணைத்து கிராமசேவையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ளாமல் உள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரை இப்பணி நடைபெறுகிறது. வாக்கு என்பது ஒவ்வொரு தனிமனிதனதும் உரிமையாகும்.

பெற்றோர் வாக்காளராக இல்லாவிட்டால் எதிர்காலத்தில் தமது பிள்ளைகளை வாக்காளராகப் பதிவுசெய்வதில் பிரச்சினைகள் ஏற்படும்.

பாடசாலை அனுமதி மற்றும் அரச தொழில் களுக்கு விண்ணப்பிக்கும் போது வாக்காளர் பதிவு அவசியம். இவற்றைக் கருத்திற்கொண்டு கிடைத்த இந்த இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.

இந்தப் பாரிய பொறுப்பு உங்களிடமே தங்கியுள்ளது. - இப்படி ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஸி)

## போதிய பஸ் சேவையின்றி மாவனல்லை மக்கள் சிரமம்

மாவனல்லை, ஜூலை 22

அரணாயக்கா- மாவனல்லை பஸ்சேவை காலை வேளைகளில் போதியதாக இல்லை என பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

காலையில் அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பெருமளவானோர் அரணாயக்காவிலிருந்து மாவனல்லைக்குச் செல்கின்றனர். எனினும், ஒருசில பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன. இதனால் பயணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

இதுபற்றி மானவல்லை பஸ் டிப்போ அதிகாரிகள் கவனம் எடுக்கவேண்டும் - என்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (ஸி)

# வருடாந்த தேர்த்திருவிழா

கொழும்பு, ஜூலை 22

கண்டி, பள்ளேகல ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம் பமாகின்றது.

உற்சவத்தில் 24 ஆம்திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும்-

25 ஆம்திகதி மகேஸ்வர பூஜை இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படும். 26 ஆம்திகதி வைரவர்மடையுடன் உற்சவம் நிறைவடையும். (ஸி)




# கண்டி வைத்தியசாலை சிறுநீரகப் பிரிவில் பத்து வருடங்களில் 523 மாற்றீடுகள்

கண்டி, ஜூலை 22

கண்டி வைத்தியசாலையில் 2000 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சிறுநீரக மாற்றீட்டுப் பிரிவு இதுவரை 523 சிறுநீரகங்களை வெற்றிகரமாக மாற்றீடு செய்து சாதனை புரிந்துள்ளது.

இந்த மாற்றீடுகளுக்கு மூளை செயலிழந்த 23 பேரின் சிறுநீரகங்களும் பெறப்பட்டுள்ளன - என கண்டி சிறுநீரக பாதுகாப்புச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐநூறாவது வெற்றிகரச் சிகிச்சை கடந்த வாரம் நிறைவேறியதாகவும் அது தெரிவித்துள்ளது.

மாதாந்தம் எட்டு சிறுநீரக மாற்றீடுகள் கண்டி வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவுக்கு விசேட சத்திர சிகிச்சை நிபுணர் பீ.கே.ஹரிஸ் சந்திர பொறுப்பாகவுள்ளார். மேலதிகமாக விசேட சத்திர சிகிச்சைநிபுணர் ஏரிக் பெர்னாண்டோவும் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

பேராதனை வைத்தியசாலையில் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட 35 சிறுவர்களுக்கு வெற்றி கரமாக மாற்றீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்சத்திர சிகிச்சைகள் விசேட சத்திர சிகிச்சை நிபுணர் எச்.டீ. லமாவங்சவால் நடத்தப்பட்டன.

கண்டி வைத்தியசாலை சிறுநீரக சிகிச்சைப் பிரிவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள குருதி சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் நாளாந்தம் அறுபது நோயாளிகளின் உயிர்காப்பாற்றப்படுகிறது. இந்த உயிர்காப்பு முற்றிலும் இலவசமாகவே செய்யப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸி)

# மாணவரின் மின்னஞ்சல் முறைப்பாட்டுக்கு பொலிஸ்மா அதிபர் அதிக முக்கியத்துவம்

கண்டி ,ஜூலை 22

கண்டி பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவினர் தன்னை நிந்திக்கும் வகையில் ஏசினர் எனத் தெரிவித்து மாணவர் ஒருவர் பொலிஸ் மா அதிபருக்கு மின்னஞ்சல் மூலம் முறைப்பாடு செய்துள்ளார்.

கண்டி பிரபல பாடசாலை ஒன்றில் 12 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவரொருவரே இவ்வாறு தனது முறைப்பாட்டை அனுப்பியுள்ளார்.

இந்த மாணவர் தனது முறைப்பாட்டைத் தெரிவிப்பதற்காக மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரின் அலுவலகத்துக்குச் சென்றுள்ளார்.

அப்போது பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகள் நிமித்தம் வெளியே சென்றிருந்தார். எனவே, அவர் உடனடி நடவடிக்கையாக பொலிஸ் மா அதிபருக்கு மின்னஞ்சல் முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

மின்னஞ்சல் மூலம் தனக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு பொலிஸ் மா அதிபர் முக்கியத்துவம் கொடுத்தார்.

இதுதொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு அவர், சிரேஷ்ட பொலிஸ் பிரதிமா அதிபர் காமினி நவரத்னவிடம் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய மாணவரின் முறைப்பாடு பற்றிய மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பிரதி பொலிஸ் மா அதிபர் பூஜீத ஜயசுந்தர தெரிவித்தார். (ஸி)



அரச சேவையிலும்-ஆன்மீக சேவையிலும் 35 வருடங்கள் சேவையாற்றி இளைப்பாறிய கி.சி.வரதராசாவுக்கு நவாலி மக்களின் ஏற்பாட்டில் சேவை நயப்பு விழா நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நவாலி மகா வித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார் உரை நிகழ்த்துவதையும், நவாலி ஹோமலதா ஞாபகார்த்த நிறுவனத்தினர் பொன்னாடை போர்த்தி சேவைச்சின்னம் வழங்கிய பின்னர் விருந்தினர்களுடன் ஆன்மீகவியலாளர் நவாலியூர் கி.சி.வரதராசா நிற்பதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள்: இரா.சுதா)*

## கணனிப் பயிற்சி நெறி

கோப்பாய், ஜூலை 22

யாழ்.கல்வி வலயத்தின் அனுசரணையுடன் கோண்டாவில் முறைசாராக் கணனிப் பயிற்சி கோப்பாய் கலைவாணி ஆங்கில மற்றும் கணனி பயிற்சி நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

ஆர்வமுள்ளோர் மேற்படி பயிற்சி நெறியில் இணைந்து பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (1-72)

# மறுசீரமைப்புக்குப் பின் அரசுக்கு சவாலாக ஐ.தே.க. உருவெடுக்கும்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

ராஜபக்ஷ அரசுக்கு சவால் விடுத்து எதிர்வரும் தேர்தல்களில் வெற்றிகொள்ளும்வகையில் ஐக்கிய தேசியக் கட்சி மறுசீரமைக்கப்படும். மறுசீரமைப்புக் குழுவின் சிபார்சுகளை ஐ.தே.கட்சியின் செயற்குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. - இப்படி அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்த லத்தில் நடைபெற்றது. அங்கு திஸ்ஸ அத்தநாயக்க தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் மறுசீரமைப்புக் குழுவின் சிபார்சுகள் அடங்கிய அறிக்கை நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

கட்சித் தலைவர், பொதுச் செயலாளர், தேசிய அமைப்பாளர் உட்பட ஆறு பதவிகளையும் செயற்குழுவின் இணக்கப்பாட்டுடன் தெரிவு செய்வது குறித்து அதிகளவு கவனம் செலுத்தப்படும். இணக்கப்பாடு ஏற்படாவிட்டால் இரகசிய வாக்கெடுப்பு மூலம் இவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

மறுசீரமைப்பு அறிக்கையில் மகளிர் பிரதிநிதித்துவம் குறித்து வழங்கப்பட்டுள்ள சிபார்சுகளையிட்டு செயற்குழுவிலுள்ள பெண் பிரதிநிதிகள் திருப்தி அடையவில்லை. இது தொடர்பான புதிய ஆலோசனைகள் ஒகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு கட்சியின் சட்டதிட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

மறுசீரமைப்பு குழுவின் அறிக்கையில் உள்ள முக்கிய நான்கு விடயங்கள் குறித்து செயற்குழுக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

செயற்குழுவின் பிரதிநிதித்துவத்தை 88இல் இருந்து 92 ஆக அதிகரிப்பது, கட்சியின் பல்வேறு அமைப்புகள், தொழிற்சங்கங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் செயற்குழுவுக்கு மேலதிக பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

கட்சியின் தலைவர், செயலாளர் உட்பட ஆறுபேர் அடங்கிய ஆலோசனைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு இக்குழுவின் மூலமே தொகுதி அமைப்பாளர் போன்ற நியமனங்கள் வழங்கப்படும்.

அரசியல் கொள்கைகளை வகிக்க அரசியல் குழு ஒன்று அமைக்கப்படும். கட்சியின் முக்கியஸ்தர்கள் அறுவர் உட்பட மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 15 பேர் இச்சபைக்கு நியமிக்கப்படுவர்.

கட்சியின் ஒழுக்க நெறியை உயர்ந்த வகையில் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் செயற்குழுவில் வலியுறுத்தப்பட்டது.

கட்சி மறுசீரமைப்புக் குழுவின் சிபார்சு ஆலோசனைகளில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் குறித்து ஒகஸ்ட் முதல்வாரத்தில் நடைபெறவுள்ள செயற்குழுவில் ஆராயப்படும். இச் செயற்குழுவில்தான் கட்சியின் மாநாட்டுக்கான திகதியும் தீர்மானிக்கப்படும்.

- இவ்வாறு அவர் சொன்னார். (ஒ-சி)

## மத்தியஸ்தர் தின விழா

யாழ்ப்பாணம், ஜூலை 22

பருத்தித்துறை பிரதேச மத்தியஸ்தர் சபையின் தேசிய மத்தியஸ்தர்தின விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சபைத் தலைவர் ஆ.வடிவேலு தலைமையில் மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனும், சிறப்பு விருந் தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன், கலாபூஷணம் செல்லத்தம்பி மாணிக்க வாசகர் ஆகியோரும் கலந்துகொள்வர். (50-201)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 22

ஆனைக்கோட்டை, உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் தலைவர் என்.தனபாலசிங்கம் தலைமையில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைலாசபிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசலிங்கமும், சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி சிவலோகநாயகி மார்கண்டும் கலந்துகொள்வர். நிறுவுநர் உரையை எஸ்.ரி. கணேசவேல் நிகழ்த்துவார். (ஒ-323)

## விமர்சனக் கட்டுரைகள் நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்.பல்லைக்கழக வவுனியா வளாக சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய ஈழத்து கலை இலக்கிய உலகு விமர்சனக் கட்டுரைகள் அடங்கிய நூல் அறிமுக விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம்பெறவுள்ளது.

கலாசாலை அதிபர் வே.க.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலந்து கொள்வார். (ஒ-1)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா இரத்தினம்மா



யாழ்ப்பாணம், உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரத்தினம்மா 20.07.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் கந்தையாவின் (சுப்பிரமணிய மாஸ்டர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகம்மா தம்பதியரின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் றொபீந்திரன், சிவயோகநாதன், கேதீஸ்வரநாதன், கோமளகாந்தி, தர்மபூபதி, விஜயலக்சுமி காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் ஜெயந்தி, காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் கிரிதரன் ஆகியோரின் அருமைத்தாயும் திலகரஞ்சினி, செல்வராணி, ராஜேஸ்வரி, செல்வேந்திரகுமார், செல்லத்துரை காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் சக்திரூபன், கல்யாணி ஆகியோரின் அன்பு மாமியும் மிருஷா கிரிஷானி-திலகன்ராஜ் (UK), நிலூகா-பிரிஷானி-ஷாமன் (அவுஸ்திரேலியா), வினோத் (UK), யனாத்(கொழும்பு), கணாத் (கொழும்பு), கீர்த்தன்-சமிலா (UK), பிரஷாந்தி-மஜிந்தன் (அவுஸ்திரேலியா), பவித்திரா (கொழும்பு), தேவகரன் (UK), தேவதர்ஷிகா (விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), அர்ஜனா (விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), ஜனனீ (கல்வியியற்கல்லூரி, யாழ்ப்பாணம்), சுபகௌரி (கொழும்பு, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), சுபதர்ஷனா (கொக்குவில் இந்துக்கல்லூரி), அக்ஷலா (UK), ஆகாஷ (UK), அக்ஷயா(UK) ஆகி யோரின் பாசமிகு பேர்த்தியும் அஸ்வந் (அவுஸ்திரேலியா), ஆகேஷ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2010) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில்.
0213007789 *(100790)*

*தகவல்:*
ஆ.செல்லத்துரை.

## பிரான்சிஸ் கிறிஸ்ரி வேதநாயகம்

(இளைப்பாறிய ஆசிரியர், யா/புனித சாள்ஸ் ம.வி.)



மாதகலைச் சொந்த இடமாகவும், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் கிறிஸ்ரி வேதநாயகம் 16.07.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் (ஓய்வுபெற்ற ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி)- அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை (ஓய்வு பெற்ற நூலகர், யா/புனித பத்திரிசியார் கல்லூரி)-மார்கிறேட் தம்பதியரின் அன்பு மருமகனும் அன்ரனெற் றோஸ்மலரின் (மணி) அன்புக் கணவரும் நாளினி (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), றெறன்ஸ் (பிரான்ஸ்), றோகினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாக்கியம் (அவுஸ்திரேலியா), அருட்திரு.நவரட்ணம் (பிலிப்பைன்ஸ்), காலஞ்சென்றவர்களான மாசிலாமணி (ஆங்கில ஆசிரிய ஆலோசகர்), இராசநாயகம் மற்றும் ஜொய்சி (அமெரிக்கா), அருள்சோதி (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப அதிகாரி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை), ஜெசிந்தா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜூலியன் றவீந்திரன் (ஆசிரியர், யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), சியாமளா (பிரான்ஸ்), மோகன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜோசபின் (ஓய்வுபெற்ற ஆசிரியை), றெஜினோல்ட் (கனடா), D.C.C.சந்தியாப்பிள்ளை (ஆசிரியர், யா/புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் றொஷி, ஜெறி, டாறிக்கா, ஷெரோன், தர்ஷிகா, ஜூட், ஒஸ்ரின் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.07.2010) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு பி.ப. 4.15 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியின் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.07, அச்சக வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
மனைவி- அன்ரனெற் றோஸ்மலர்
(மணி)

# மூன்றாவது ஆண்டில்...



திருமதி
தெய்வேந்திரகுமாரசுவாமி
சிவகாமிப்பிள்ளை

அன்னையின் கரத்தில்
07.11.1931


ஆண்டவன் தாளில்
23.07.2008

எம் அன்புத் தெய்வமே!
ஈராண்டுகள் மறைந்து ஓடினாலும்
இன்னும் எம் நெஞ்சங்களில்
மறையாது வாழ்கின்றீர்.
உமது ஆத்மா சாந்தியடைய
சந்நிதி முருகனை வேண்டுகின்றோம்.

*என்றும் உம் நினைவால் வாடும்:*
பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

*முதலியார் வளவு,*
*கோப்பாய்.*

# விவாத மேடை



**சரியானது**

எல்லா விடயத்திலும் ஒரு நன்மையும் தீமை யும் இருக்கும். அதில் தீமையை விட்டு விட்டு நன்மையை நாம் எடுத்துக் கொள்ளல் வேண்டும். '' பேஸ்புக்'' பாவனையானது பல நண்பர்களையும் வெளிநாடுகளில் இருக் கும் உறவினர்களிடமும் நமது மகிழ்ச்சி, துக்கம், அன்றாட வாழ் வில் நடப்பவை எல்லாவற்றையுமே பகிர்ந்து கொள்ளலாம்.

''பேஸ்புக்'' மூலம் பல தொலைந்த உறவுகள் நன்றாய் சேர்ந் தும் கூட உள்ளது. இதை பிழையானது என்பவர்கள் கூட இந்த ''பேஸ்புக்'' பாவனையை வைத்திருக்கலாம். நீங்கள் ஏன் இதை ஒரு தவறான வழியில் இட்டுச் செல்லும் விடயம் என்று நினைக் கிறீர்கள்? பேஸ்புக்கை ஏன் அப்படி பாவிக்க வேண்டும். ஒரு சிலர் செய்யும் தவறால் ஒட்டு மொத்தமாக குறை சொல்லிவிட முடியாது. அதனை நல்ல வழியில் எத்தனையோ பேர் பாவிக் கிறார்கள்! '' பேஸ்புக்'' பாவனை சரியானதே

ர. இந்துசன்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

**தவறானது**

பேஸ்புக் பாவனையானது எமது சமூகத்தைப் பொறுத்த வரையில் தவறான ஒன்றாகும். பிரிந்தவர்கள் ஒன்று கூடினர் அமெரிக்காவில். யுத்தத்தால் அகதியாகி அலைகிறோம் நம் தேசத்தில். இன்றும் எத்தனையோ உறவுகளைத் தேடி அலைகிறோம். கண்டுபிடித்துத் தந்ததா இந்தப் பேஸ்புக். அந்நிய தேசத்தவரின் ஆக்கிரமிப்புக்கும் தலையீட்டுக்கும் உளவு நடவடிக்கைகளுக்கும் இலகுவில் வழிசமைத்துவிடுகிறது இந்தப் பேஸ்புக்.

நன்மையே செய்கிறது என்றால் ஆங்காங்கே எதிர்ப்புக்கள் ஏன் கிளம்பவேண்டும். அண்மையில் கூட நம்நாட்டில் 50 முறைப்பாடுகள் பேஸ்புக்குக்கு எதிராகக் கிடைத்துள்ளன. பெண்களின் புகைப் படங்களை எடுத்து ஆள் மாறாட்டங்கள் செய்து தப்பான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் சிலர். இதுபோன்ற செய்திகள் முன்னர் எப்போதாவது இடம்பெற்றிருக்கிறதா. இவ்வாறான வக்கிர புத்தி படைத்தவர்களைப் பேஸ்புக் போன்ற இணையத்தளங்களில் வாய்ப்புக்களை வழங்கி வளர்த்துவிடுகின்றது.

பேஸ்புக்கில் நல்ல நண்பர்களைப் பெறுவதென்பது அரிதான விடயமாகவே காணப்படுகின்றது. ஏனெனில் போலியான படங்களையும் போலியான விவரங்களையுமே பேஸ்புக்கில் தெரியப்படுத்துகின்றனர். இதை நம்பி ஏமார்ந்தவர்களே அதிகம். கூட இருக்கிறவங்களையே நம்ப முடியவில்லை இதில முகம் தெரியாதவன் வேற நல்ல நட்பைத் தந்து, நல்லதே செய்கிறது பேஸ்புக் எனில் தங்களுடைய படத்தைவிட்டு, நடிகர், நடிகைகளின் படங்களைப் பிரசுரிப்பது ஏன்? இதன் மூலம் பேஸ் புக்கின் தீமை தெளிவாகின்றது.

சிவதாரணி, செட்டித்தெரு, நல்லூர்.

# எமது இளையோரிடத்தே பெருகியுள்ள 'பேஸ்புக்' பாவனை

# இளவல்கள் வட்டம்

## விவாதமேடை

எமது இளையோரிடத்தே பெருகியுள்ள ''பேஸ்புக் (Facebook) பாவனை.

**சரியானது** **தவறானது**

*உதயனின் இப்புது முயற்சிக்கு இளைய சமூகத்தின் விவாதத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே எமது இளையோரிடத்தே பெருகியுள்ள ''பேஸ்புக் ( Facebook) பாவனை சரியானதா? தவறானதா? என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன் வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் ஐவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.*

# ஏதுந்துவிப்ம் கேளுங்க...



சித்தன்

விருப்பத்துக்கு உரியதாகவும் காணப்படுகின்றன. அதாவது விருப்பத்துக்குரியது என்றால் ஒன்பது பாடங்களும் எடுக்கத்தான்வேண்டும் ஆனால் எடுக்கும்காலப்பகுதியை எமக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ள முடியும். அட நாங்களும் ஏதோ இரண்டு மூண்டு பாடங்களை எடுக்காம விடலாம் எண்டு நினைக்க நீங்க உப்பிடி சொல்லுறீங்க என்றதும். நீங்க நினைக்கிறது அடிப்படைமட்டத்தில இல்ல ஆனா புரபிசனல் மட்டத்தில இருக்கு என்றவளிடம் மறுபடியுமா? என்றதும் விளங்கல எல்லே கொஞ்சம் பொறுங்க. அடிப்படை மட்டத்தை போலவே புரபிசனல் மட்டத்திலேயும் எசன்ரியல் ஒப்சன் என இரண்டு மட்டம் உண்டு ஒப்சனில் உள்ள மூன்று (p1- p3) பாடங்களும் கட்டாயமாகவும் எசன்ரியலில் உள்ள p4- p7 வரை உள்ள நான்கு பாடத்தில் ஏதாவது இரண்டு பாடங்கள் மட்டுமே எடுக்கவேண்டும்.

அதெல்லாம் சரி என்னண்டு பதியிறது எவ்வளவு கட்டணம் என்று செல்லமுடியுமா என்று கேட்டதற்கு நீங்கள் எப்ப வேண்டுமானாலும் பதிவு செய்து கொள்ளமுடியும் பதிவு கட்டணமாக 15000 ரூபா அறவிடப் படுகிறது. யாழ்ப்பாணத்தில் தற்போது பதிவுகட்டணம் உட்பட ஒன்பது பாடங்களுக்குமான கட்டணமாக 250000ரூபா அறவிட்படுகிறது. ஐயோ 250000 என்று வாயை பிளக்காதேங்கோ இரண்டரை வருடத்தில் இலகு தவணைமுறையில் கட்டமுடியும். (தொடரும்)

# இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

எமது இளையோரிடத்தே பெருகியுள்ள
''பேஸ்புக்''(Facebook)) பாவனை

**சரியானது** **தவறானது**

பெயர் :-..............................
முகவரி :..............................
:-..............................
அடையாள அட்டை இல:..............................

உங்கள் தீர்ப்புகளை 29.07.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

## என் அன்னை....



முந்நூறு நாள்கள் முத்துப் போல் - அவள்
கருவறையில் எனக்காய் ஓர் இடம்
உதிரங்களை பாலாக்கிய
தியாகச் செம்மல் பரிவோடு
பிரசவித்த இளம் மொட்டு நான்
மழலைப் பாலின் இனிமை- என்
கடந்து வந்த பாதைகளின் சுவடுகளிலெல்லாம்
அவளின் பெயரைச் சொல்லும் மீண்டும் அவள் கருவறையில் எனக்காய்
ஓர் இடம் கேட்கப் போகின்றேன்.

சி.கம்ஷா,
சங்கத்தானை.

**கவிதை எழுதி அனுப்பும் வாசகர்களில் 3 மாதத்திற்கு ஒருமுறை ஒரு சிறந்த கவிதை தேர்வு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.**

# வாழ்க்கைக்கு நலம் தருபவர்கள் நல்ல நண்பர்களே!

ஆம்பலும் நெய்தலும் கொட்டியும் போல வாழ்விலும் தாழ் வி லும்ஒட்டி உறவாடு தலே நல்ல நட்புறவாகும். நண்பர்களை தேர்ந்தெடுப்பது என்பது இலேசான காரியம் அன்று. அது பூவாகி காயாகி கனியாகும் செயல் ஆகும். உடனேயே உருவாகிவிடுவதும் நட்பாகிவிடாது.

நல்ல நண்பர்களுடன் சேர்ந்து இருப்பது தேய்பிறை வளர்பிறை ஆவது போன்றதாகும். கெட்ட நண்பர்களுடன் கொண்ட நட்பு 'தேன்போல் இனித்து பாகற்காய் போல் கசக்கும்'' (முற்றும்)



அபி, யாழ்ப்பாணம்.

## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# பெரியோர்களையும் வாழ வைத்த சொல் அம்புகள்

**தன் அறிவை மறைக்கத் தெரியாதவன் முட்டாள்**

-பெஞ்சமின் பிராங்கிலிங்-

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



மற்றவர்களை பரிகாசம் செய்து பேச வேண்டாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். பயணங்களின் போது சௌகர்யக் குறைவைச் சந்திக்கலாம். திட்டமிட்ட வேலை ஒன்றை முடிக்க முடியாமல் நாளை என தள்ளிவைக்கலாம். எதிர்பாராத செலவுகளால் சேமித்த பணம் கரையலாம்.

### இடபம்




நல்ல வாய்ப்புகள் தேடி வரும் நாள். உங்களுக்கு நெருக்கமான நண்பர் ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்கலாம். சக ஊழியர்கள் சிலருடன் சேர்ந்து கூட்டாக மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். மனைவி, குழந்தைகள் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள்.

### மிதுனம்



தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். உறவினர் ஒருவர் கேட்ட உதவியை மறுக்காமல் செய்து அவர்களின் மனதில் இடம் பிடிப்பீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். யாரிடமும் வாக்குவாதங்கள் செய்வதைத் தவிர்க்கவும். பல நாள்களாக மேற்கொண்ட முயற்சி ஒன்றுக்கு பலன் கிடைக்கும். அனுகூலமான நாள்.

### கடகம்



நண்பர் அல்லது உறவினர் ஒருவருடன் சேர்ந்து வெளியூர் பயணம் செல்லலாம். உங்களுடன் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காமல் அனைத்தையும் நீங்களே செய்வது நன்மை தரும். உடல் ரீதியாக சில தொந்தரவு இருந்தாலும், அதை வெளிக்காட்டாமல் நடப்பீர்கள்.

### சிங்கம்



குடும்ப உறுப்பினர்கள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். எளிதில் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்று பல மணி நேரத்திற்கு இழுத்தடிக்கலாம். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். சொத்து விவகாரங்களில் நினைத்தது நடப்பது தள்ளிப் போகலாம். வீண் அலைச்சல் உண்டு.

### கன்னி



பெரிய மனிதர்களின் நட்பைப் பெறலாம். நண்பர்கள் சிலர் மீது கோபம் வந்தாலும், அதை வெளிக்காட்டாமல் நடந்து கொள்வீர்கள். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம். மற்றவர்களின் ரகசியம் ஒன்றை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். சில நல்ல விடயங்கள் நடக்கும் நாள்.

### துலாம்



செய்ய மறந்த சில வேலைகளால் ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம். பழைய சம்பவம் ஒன்றை நினைத்து பார்த்து புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள். நீண்ட நாள்களாக செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்லலாம். கட்டண மிகுதிகளை செலுத்துவீர்கள். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம்.

### விருச்சிகம்



மறக்க முடியாத சம்பவங்கள் நடக்கலாம். சக ஊழியர்கள் சிலரின் வேலைகளையும் நீங்கள் சேர்த்து செய்யலாம். வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். தொழில் ரீதியாக அனுபவப் பாடம் ஒன்றை கற்றுக் கொள்வீர்கள். உறவினர்கள் சிலரை நம்பி ஒப்படைத்த வேலைகள் நல்ல விதமாக முடிவுக்கு வரலாம்.

### தனுசு



வழக்கமான வேலைகளில் சில மாற்றங்கள் ஏற்படலாம். முக்கியமான விடயமாக உறவினர் ஒருவர் உங்களிடம் யோசனை கேட்கலாம். தெரியாமல் சில தவறுகளைச் செய்து விட்டு வருத்தம் அடைவீர்கள். மாமன், மைத்துனர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். மருத்துப் பொருள்கள் வாங்கலாம். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

### மகரம்



பணவரவுகள் வந்தாலும், அதில் ஒரு பகுதியை மற்றவர்களுக்கு கடனாக கொடுப்பீர்கள். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சிலரிடம் வாக்குக் கொடுத்து விட்டு, அதை நிறைவேற்றாமல் சாக்கு போக்கு சொல்லி சமாளிப்பீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும் நாள்.

### கும்பம்



தொட்ட காரியங்கள் தங்கு தடையின்றி, துரிதமாக நடக்கும் நாள். மற்றவர்களை நம்பி ஒப்படைக்க முடியாத சில வேலைகளால் அவதிகளுக்கு ஆட்படலாம். விருந்தினர்களை உபசரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த கடன் மிகுதிகளை ஒன்று வசூலாகும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் உண்டாகும்.

### மீனம்



சில வேலைகளுக்காக நீங்கள் மட்டுமின்றி, உங்களுடன் சேர்ந்து மற்ற சிலரும் அலையலாம். எந்த விடயத்தை பற்றியும் பெரிய அளவில் கற்பனை செய்ய வேண்டாம். பல நாட்களாக திட்டமிட்ட வெளியூர் பயணம் செல்லலாம். நண்பர்களுக்காக அல்லது முன்பின் பார்த்திராத நபர்களுக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம்.


## முக்கிய அறிவித்தல்

கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்- கிளிநொச்சி

கிளைகள் ரீதியாக அங்கத்தவர்களின் விவரங்களைத் திரட்டுதலும் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளலும்

கடந்தகாலப் போர்ச்சூழல் காரணமாக, வன்னியில் ஏற்பட்ட இடப்பெயர்வினால் எமது சங்கம் பல இடங்களுக்கு இடம் பெயர்ந்து சகல ஆவணங்களையும், சொத்துக்களையும் இழந்த நிலையில், தற்போது தனது சொந்த இடத்தில் மீண்டும் செயற்பட்டு வருகின்றது.

எமது சங்கத்தின் எல்லைப் பரப்பிற்குள் தற்போது பெருமளவு மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். எனவே, எதிர் காலத்தில் சங்கத்தின் பொதுச்சபையினையும் இயக்குநர் சபையினையும் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்வதற்கான முன்னோடி நடவடிக்கைக்காக, கிளைகள் ரீதியாக அங்கத்தவர்களின் விவரங்களைத் திரட்ட வேண்டியுள்ளது. மேலும் புதிய அங்கத்தவர்களையும் சேர்த்துக்கொள்ளமுடியும். அங்கத்தவர் விவரங்களைத் திரட்டுவது தொடர்பில் ஏற்கனவே சங்கத் தில் அங்கத்தவர்களாக இருந்தவர்கள் பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொண்டு செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

★ தாங்கள் சங்கத்தின் ஏதாவது கிளையொன்றில் ஏற்கனவே, அங்கத்தவராக இணைந்திருப்பின் அதற்கு ஆதாரமாக, பங்குப்பணம் செலுத்திய பற்றுச்சீட்டு அல்லது சேமப்புத்தகத்தில் பங்குப்பணம் செலுத்தியமைக்கான அல்லது ஆதாரப்படுத்தக்கூடிய சான்றளிக்கக்கூடிய விவரமிருப்பின் அதனைச் சங்கத்தின் தலைவரிடம் அல்லது செயலாளரிடம் சமர்ப்பித்து உறுதிப்படுத்தி இரண்டு அங்கத்துவ விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

★ ஏற்கனவே, அங்கத்தவராக இணைந்து ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாதவர்கள் ரூபா 100 பங்குப்பணத்தைச் செலுத்தி இரண்டு அங்கத்தவ விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து செயலாளரிடம் அதனை சமர்ப்பிப்பதுடன், தாங்கள் பழைய அங்கத்தவர் என்பதை உறுதிப்படுத்தக் கூடிய சத்தியக் கடதாசி ஒன்றைத் தயாரித்து, முறைப்படி பூரணப்படுத்தி விண்ணப்பப்படிவத்துடன் ஒப்படைக்கவும். (எதிர்காலத்தில் பழைய கணக்கு விவரம் கிடைக்கும் பட்சத்தில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பங்குப்பணம் தற்போது செலுத்தப்படும் பங்குப்பணத்துடன் சேர்த்துக் கணிப்பிடப்படும்).

★ ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100.

★ புதிய அங்கத்தவர்கள் வழமையான நடைமுறைக்கமைய ரூபா 100 பங்குப் பணத்தைச் செலுத்தி இரண்டு அங்கத்துவ விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்திச் சங்கத்தின் செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

திரு.ச.மோகனபவன்,
தலைவர்,கரைச்சி தெற்கு
ப.நோ.கூ.சங்கம்- கிளிநொச்சி.

திரு.செ.ம.ஜெயரத்தினம்,
செயலாளர்,கரைச்சி தெற்கு
ப.நோ.கூ.சங்கம்- கிளிநொச்சி.

(101140)


## பம்பலப்பிட்டியில் தற்கொலைக்கு முயன்ற பல்கலை மாணவி ஆஸ்பத்திரியிலிருந்து மாயம்!

கொழும்பு, ஜூலை 22

பம்பலப்பிட்டிக் கடலில் குதித்து தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த பெண், களுபோவில வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்ட நிலையில், அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று வைத்தி யசாலையின் பணிப்பாளர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

ஜா-எலயைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவியான இந்தப் பெண் கடந்த திங்கட்கிழமை பம்பலப்பிட்டிக் கடலில் குதித்து தற்கொலை செய்துகொள்ள முயற்சித்துள்ளார். அவ்வேளை பாதுகாப் புத் தரப்பினரால் அவர் காப்பாற்றப்பட்டு களுபோவில வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டதுடன் அவருக்கு சிகிச்சையும் வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், இந்தப் பெண் கடந்த திங்கட்கிழமை மாலை வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறு வைத்தியசாலையிலிருந்து தப்பிச் செல்வதற்கு மேற்படி மாணவியின் தாயார் உதவி செய்துள்ளார் என்று குற்றம் சாட்டிய டாக்டர் அனில் ஜயசிங்க, சம்ப வம் தொடர்பாக வைத்தியசாலை பொலி ஸாருக்கு தாம் அறிவித்திருப்பதாகவும் தெரிவித்தார். (சி)

## இரும்புக் குவியலை அப்புறப்படுத்துமாறு 'சிவப்பு' ஸ்ரிக்கர்!

தென்மராட்சி, ஜூலை 22

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பழைய இரும்புப் பொருள்களை உடனடியாக அப்புறப்படுத்துமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

பழைய இரும்புப் பொருள்கள் குவிக்கப்பட்டிருக்கும் இடத்தை டெங்கு நோய் பரப்பும் பகுதியாக அறிவிக்கப்பட்டு அவ்விடத்தில் 'சிவப்பு' ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளது. இந்தப் பொருள்களை அப்புறப்படுத்தத் தவறின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-207)


### வீட்டுடன் காணி விற்பனைக்கு

நல்லூர், மூத்த விநாயகர் வீதி, கடுகாட்டு லேன் சந்திக்கு அண்மையில் 5 பரப்புக் காணி யில் அமைந்த மூன்று அறை, குசினி மற்றும் தண்ணீர் வசதிகளுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0777200083, 0213007562

(101183)



### யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

குறை நிரப்பு வரவு செலவுத்திட்டம்- ஜூலை 2010

யாழ்.மாநகர சபையின் குறை நிரப்பு வரவு செலவுத் திட்டம் பொது மக்கள் பார்வைக்காக 22.07.2010ஆம் திகதி தொடக்கம் மாநகர சபைச் செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்படுமென மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் (252), பிரிவு 214(2b) இன் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்பட்டுள்ளது.

திருமதி யோ.பற்குணராஜா,
முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(சி/569369)



### ஈராண்டு நினைவலைகள்

மலர்வு
11
.
12
.
1971



உதிர்வு
22
.
07
.
2008

### அமரர் ஞானேந்திரம் பார்த்தீபன்

திதி: சங்கடஹர சதுர்த்தி (29.07.2010)

எத்தனை யுகங்கள் சென்றாலும்- எப்போதும்
உன் நினைவுகள் தானடா பார்த்திபா!
நீ இருந்த நாள்கள் அத்தனையும்
எம் வாழ்வில் வசந்தமான நாள்கள் தானடா!
நீ பிரிந்து எப்போது சென்றாயோ- அன்றுடன்
எமக்குக் கண்ணீர் மட்டுமே சொந்தமடா!
எம் வீட்டுப் பூங்காவில்- நீ
நட்டுக் குலுங்கிய அழகைப் பார்த்துத்தான்
இறைவனும் உன்னைப் பறித்து விட்டானோ- பார்த்திபா!
ஈராண்டுகள் கடந்தோடினாலும்
காலமெல்லாம் உன் நினைவினிலே வாழ்கின்றோம்.

"கற்பக வில்லா",
மீசாலை வடக்கு, வேம்பிராய்.

என்றென்றும் கண்ணீருடன்:
குடும்பத்தினர்.

(100774)

# அச்சுவேலி காட்டுமலைக் கந்தசாமி கோவில்



(சென்றவாரத் தொடர்ச்சி)

ஆலய உற்சவம் பூசை வழிபாடுகளின் போது கதிர்காமத்தில் இருந்து எடுத்து வரப்பட்ட மந்திரக்கோல் பூசகர்கள் கையில் எடுத்துவருவதும் தீர்த்தமாடும்போது மந்திரக்கோலையும் உட்படுத்தி தீர்த்தம் ஆடுவதும் குறிப்பிடத்தக்கது. ஆலயத்தின் உட்கட்டுமானங்கள் தூண்கள் திராவிட சிற்பமரபுசார்ந்த கட்டடக்கலை அம்சங்கள் கொண்டு விளங்குகின்றன.

2004ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் நாள் (கார்த்திகைத் திருவிழா) அன்று சிவகுரு ஐயர் சிவபதம் அடைய அவரின் மூத்த புத்திரனும் மூன்றாவது தலைமுறை வாரிசுமாகிய சிவசுப்பிரமணிய ஐயரும் இளையபுத்திரன் பாலசுப்பிரமணியம் (சீனியன்) ஐயரும் ஆலயக்கிரியைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மூன்றாவது தலைமுறையிலான ஆரம்பிக்கப்பட்ட இராஜ கோபுரத் திருப்பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. கணிசமான அளவு வேலை நிறைவடைந்துள்ளது. இது தொடர்பாக சிவசுப்பிரமணிய ஐயர் கருத்துத் தெரிவிக்கையில் திருப்பணிக்கு உதவ விரும்புவோர் அச்சுவேலி இலங்கை வங்கி 9248301 சேமிப்புக் கணக்கு இலக்கத்துக்கு வழங்கி உதவலாம் எனத் தெரிவித்தார்.

இராஜ கோபுரத் திருப்பணி தொடர்பான கணக்குகள் சிவசுப்பிரமணிய ஐயரின் தனிப்பட்ட கணக்காக இருப்பதை தவிர்த்து திருப்பணிச் சபை ஒன்றை நிறுவி கொடுப்பனவுகளுக்கு உரிய முறையில் பற்றுச் சீட்டுக்களை வழங்கி நிதியை வசூலிப்பது இராஜகோபுர திருப்பணியை விரைவு படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும் என ஆலயம்சார் சமூகம் அபிப்பிராயம் தெரிவிக்கின்றன.

காட்டுமலைக் கந்தன் மீது காலத்துக்குக் காலம் பலநூல்கள் பாடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அந்தவகையில் பிரபல சங்கீத வித்துவான் க.தம்பிமுத்து பாவலர் பாடிய திரு ஊஞ்சல் பாடல் தொகுப்பு, காட்டுமலைக்கந்தன் தேர்த்திருப்பணிமலர், திருமஞ்சத் திருப்பணிமலர், சி.அருளானந்தம் வெளியிட்ட பழனி ஆண்டவர் பிரதிஷ்டாமலர், ஆசிரியர் இ.சிவலிங்கம் தம்பதிகள் பாடி காட்டுமலைக் கந்தன் பிள்ளைத் தமிழ், கு.கணேசன் (கனடா) காட்டுமலைக்கந்தன் புகழ்கவிதைத் தொகுப்பு, சி.பாலமுரளி பாடிய காட்டுமலைக்கந்தன் கவிதை, திருமதி உமாராணி பிரேமச்சந்திரன் இயற்றிய ரி.எம்.எஸ்.செல்வக்குமாரால் பாடி வெளியிட்ட இறுவட்டு என்பன குறிப்பிடத்தக்கன.

(முற்றும்)




# புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி

தொகுப்பு : ஞானஆதவன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

கல்லூரியில் கல்வி அடைவு மட்டம் தொடர்பாக நகரப் பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது சராசரிக்கு குறைவாக இருப்பது கருத்தில் கொள்ளப்பட்ட போதிலும் முகாமைத்துவத்தால் காணப்பட்ட குறைபாடுகள்தான் காரணம் என கல்வி நிர்வாகத் தரப்பால் குறை கூறப்பட்ட போதிலும் கல்வி நிர்வாக மட்டத்திலும் அதற்கு சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என பாடசாலைச் சமூகத்தினால் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. இதற்கு எடுத்துக் காட்டாக 2007ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவை தரம் 2 : Iஐ சேர்ந்த பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவரை கல்லூரிக்கு அதிபராக நியமித்தது எடுத்துக்காட்டப்பட்டு குற்றஞ் சாட்டப்படுவதோடு கல்லூரியின் வீழ்ச்சிக்கு வழிசமைத்ததாகவும் கல்லூரியின் பாரம்பரியத்துக்கே முரணான செயற்பாடு எனக் கூறப்படுகின்றது.




கல்லூரியின் சமகால நிலை தொடர்பாக ஓய்வுபெற்ற வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் ''கொட்டு இடிந்த பசுமாடு நல்ல சாப்பாடு வைத்து பராமரித்தால் பழைய நிலைக்குக் கொண்டு வரலாம்'' எனப் பேச்சு வழக்கில் நகைச்சுவையாகக் கூறினார்.

கல்லூரியின் புதிய அதிபர் ஆர்.இராசமனோகரன் கல்லூரியின் எதிர்கால முன்னெடுப்புக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் ''கல்லூரியின் நிலைப்பாடு தொடர்பாக கல்லூரிச் சமூகம் உயர் நிலையில் வைத்து மதிப்பீடு செய்கின்றது. வெளிப் பார்வையில் காணப்படும் போலித் தோற்றம் தொடர்பான உண்மைநிலை பாடசாலைச் சமூகத்துக்கு உணர்த்த வேண்டியுள்ளது. உண்மைநிலை உணர்த்தப்பட்டு கல்லூரிச் சமூகத்தின் பூரண ஒத்துழைப்புடன் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும்'' எனத் தெரிவித்தார்.

கல்லூரிக்கான தர்மசாதனம் செய்த சொத்துக்கள் உரிய முறையில் பரிபாலனம் செய்யப்பட்டு உரிய வருவாய் நிறுவுநரின் குறிக்கோளுக்கு ஏற்ப கையாளப்படவில்லை என்ற கருத்து பாடசாலை சமூகத்தில் புரையோடியுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக கூறும்போது யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள கடை ஒன்றுக்கு தற்பொழுதும் மாதாந்தம் 150 ரூபா வாடகை செலுத்தப்படுவதாக நிறுவுநரின் வழித்தோன்றல் ஸ்ரீ புருசோத்தமன் மழவராயர் கூறி கவலை தெரிவித்தார். நிறுவுநருக்கு சிலைவைத்து நினைவுநாள் ஆண்டுதோறும் கொண்டாடும் அதேநேரம் அவரது தர்மசாதனத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவது தர்மசாதன பரிபாலன சபையின் முக்கிய கடமையாகும்.

''கல்லூரி மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் பழையநிலைக்கு உயர்ந்து வலி.கிழக்கில் மீண்டும் துலங்கவேண்டும்.''

(முற்றும்)

# கல்வி, பொருளியல் சார்ந்த பல்வேறு விடயங்களை அறிய உதவிய பயணம்

(நான்காம் பகுதி)

சிறப்பான தங்ககம் அவ்வேற்பாட்டுக் குழுவினராலேயே மாத்தளை நகரிலிருந்து வெளியேறும் வரை உணவு தேனீர் ஏற்பாடுகள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. கண்டி குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் ஆரம்பித்த ஆறாவது நாள்ப் பயணம் மாத்தளை பாதிரிகள் இல்லத்தில் நிறைவடைந்தது.

தொடர்ந்து ஏழாவது நாளும் நிறைவு நாளுமாகிய பயணம் ஆரம்பமானது. காலையில் அனைவரும் மாத்தளையில் புகழ் பெற்ற மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்துக்குச் செல்கின்றோம். விசேட பூசை வழிபாடுகளில் கலந்து கொள்கின்றோம். ஐந்து தேர்கள் பவனி வரும் சரித்திரப் புகழ் பெற்ற ஓர் ஆலயம். காலை வேளை வெள்ளிக்கிழமை எமது களப் பயணத்தின் முழு வெற்றியும் இறைவழிபாட்டில் தங்கியுள்ளது என்ற நம்பிக்கையுடன் அங்கிருந்து வெளியேறி அருகிலுள்ள கதிர் வேலாயுத சுவாமி கோயிலுக்குச் செல்கின்றோம். அமைதியான, அடக்கமான ஆலயம். இலங்கையில் முதன் முறையாக எதிர்வரும் 26.07.2010 இல் ஆடிவேல் திருவிழா அன்று வெள்ளித் தேர் திருப்பணி நடைபெற்று உற்சவம் நடைபெற ஏற்பாடாகிக் கொண்டிருக்கின்றது. காலை உணவும் ஆலயத்திலேயே வழங்கப்பட்டது. அதனை நிறைவு செய்து கொண்டு மாத்தளை வீதிப் போக்குவரத்து பொலிஸாரின் அணிவகுப்புடன் பஸ்வண்டி மாத்தளை சாஹிரா தேசிய பாடசாலையை நோக்கி நகருகின்றது. அங்கு எங்களுக்கு ஓர் ஒன்று கூடல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாடசாலை வாயிலின் இரு பக்கமாக இஸ்லாமிய மாணவர்கள் நிற்க, மிகுந்த கரவொலியுடன் பயணக்குழுவினராகிய நாம் வரவேற்கப்பட்டு பாடசாலையின் பிரதான மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுகின்றோம். கல்விச் சுற்றுலாவின் முக்கிய அங்கம் எமது மாணவர்கள் வெளியே சென்று பல்லின கலாசார பண்புகளைக் கொண்ட மாணவர்களுடன் பழகுவதும் பாடசாலைகளின் அமைப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை தெரிந்து கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது. அரங்கினுள் அரங்க நிகழ்வுகள் மாணவத் தலைவர்கள் மூலம் நடைபெற்றன. ஆங்கிலத்திலும் தமிழிலும் வரவேற்புரைகள் நடைபெற்றன. கலை நிகழ்வுகள் இரு பாடசாலை மாணவர்களும் மேற்கொண்டனர். எமது பாடசாலை ஆசிரியைகள் பாடல்களையும், கருத்துரைகளையும் வழங்கினர். இரு பாடசாலை அதிபர்களும் கருத்துரை வழங்கினர். குறிப்பாக சாஹிரா கல்லூரி தமிழ்ப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் யாழ்ப்பாணத்தினதும் அதன் கல்வியினதும் சிறப்பையும் தமிழின் சிறப்பையும் உணர்த்தும் வகையில் நல்ல பேச்சு ஒன்றினை வழங்கினார். இரு சமூகங்களின் மனதிலும் அவலங்களும் அழிவுகளும் கொண்ட வாழ்க்கையை முற்றுப் பெறவைத்து சகோதரத்துவத்துடன் சம உரிமையுடன் அனைவரும் வாழ வேண்டும் என்பதே அனைவரது பிரார்த்தனையாக இருந்தது. தொடர்ந்து கல்லூரி அதிபர் பாடசாலை பற்றிய அறிமுகத்தை வழங்கினார். மாத்தளை நகரில் பிரபல்யமான பாடசாலையாக விளங்கும் இக்கல்லூரி 11 ஏக்கர் நிலப்பரப்பில் போதுமானளவு கட்டடத் தொகுதியைக் கொண்டுள்ளது. 1800 மாணவர்கள் கல்விகற்கின்றனர். இரு மொழிமூலமும் (தமிழ், ஆங்கிலம்) கற்றல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. வருடாந்தம் சராசரியாக 15 பேர் பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றனர். தனவந்தர்களும் பழைய மாணவர்களும் பெற்றோர்களுமே இப்பாடசாலையின் பௌதீகத் தேவைக்கான நிதியீட்டத்தை வழங்குகின்றனர். மேலும் ஹொக்கி விளையாட்டு இப்பாடசாலையின் முதன்மையான விளையாட்டாகும். பல மாவட்ட, மாகாண, தேசிய விருதுகளை பெற்றுள்ளனர். சகல ஆசிரிய பௌதீக வசதிகளையும் தன்னகத்தே கொண்டு சிறப்பாக இயங்கி வருவதை அவதானிக்க முடிந்தது. சாஹிரா கல்லூரியின் ஒன்றுகூடலிலிருந்து விடுபட்டு எமது பயணம் டயான சொக்கலேட் உற்பத்தி செய்யும் நிறுவனத்தை நோக்கி நகருகின்றது. மாத்தளை நகரில் கைத்தொழில்பேட்டைகளில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சொக்கலேட் உற்பத்தி நிறுவனம் இதுவாகும். உற்பத்தி செயன்முறைகள் பற்றிய முழுமையான விளக்கங்களைப் பெற்றுக் கொண்டு தொடர்ந்து பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்துக்கு எமது பயணம் நீள்கின்றது.



மனித உணர்வுகளை அடக்கி மனதை சமாதானப்படுத்தி நல்வாழ்க்கைக்கான வழியைக் காட்டுவது தியானமாகும். இத்தியானத்துக்குரிய இடமாக பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம் திகழ்கின்றது. தியான மண்டபத்தினுள் திரு.சிவஞானம் என்பவரால் இறைவனின் செய்தி பற்றிக் கூறப்பட்டது. அசரீரியான பரமாத்மாவும் அவருடைய திவ்ய குணங்கள் பற்றியும் சகல ஆத்மா[illegible]ளுக்கும் தந்தை பரமாத்மா ஒருவ[illegible]எனவும் மூன்று உலகங்கள் காணப்படுகின்ற அதாவது பௌதீகமனித உலகம்,சூட்சும தேவதை உலகம், பிரம்மலோகம் என்பனவையே அவை என்பதையும் கடவுளின் மூன்று தெய்வீக செயல்களாக சிருஷ்டிப்பவர், இயக்குபவர், அழிப்பவர் என்பது பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டது.



மனதை ஒடுக்கித் தியானப் பயிற்சியில் சற்று ஈடுபட்டதன் பின்னர் மதிய உணவை அங்கே உண்டுவிட்டு பயணம் தொடர்கின்றது.

## கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் கல்விச் சுற்றுலா மீள்பதிவுகள்

தொடர்ந்து எமது பயணம் மாத்தளை வைத்தியசாலையை நோக்கி நகருகின்றது. ஏன் வைத்தியசாலை செல்லுகின்றீர்கள் என நினைப்பீர்கள். கழிவுப் பொருள்களை பயனுறுதிமிக்க செயற்பாடாக மாற்றும் ஒரு செயன்முறை இங்கு நடைபெறுகின்றது. மாத்தளை வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் எமக்கு விளக்கமளிக்கின்றார்.

மாத்தளை நகரின் முக்கிய வைத்தியசாலை, 21 வார்ட்டுக்கள் காணப்படுகின்றன, 800 உத்தியோகத்தர் கள் பணியாற்றுகின்றனர். எம்மிடையே தமிழ், சிங்கள, முஸ்லிம் இனவேறுபாடு கிடையாது. மாத்தளை வாழ் மக்கள் என்றே செயற்படுகின்றோம். வைத்தியசாலையில் ஏராளமான கடதாசிகள், பிளாஸ்ரிப் பொருள்கள் கழிவாக வரும் அவற்றை மீள் உற்பத்திக்கு பிறிதொரு இடத்துக்கு ஏற்றுமதி செய்கின்றோம். குறிப்பாக எஞ்சுகின்ற உணவுப் பொருளை மாத்திரம் எடுத்து உயிர்வாழ (Biogas) உற்பத்தி நடைபெறுகின்றது. நாளாந்தம் 300Kg உணவுகள் எஞ்சுகின்றன. அவற்றை எடுத்துத் கொள்கலன்களில் இட்டு செயன்முறையினூடாக உயிர்வாயு உற்பத்தி நடைபெறுகின்றது. அவற்றைப் பார்வையிட்டோம். உயிர் வாயு மூலமாக. எமது வைத்தியசாலைச் சமையல் வேலைகள் நடைபெறுகின்றன. மாதாந்தம் 20,000 /- - 30,000/= வரையான வருமானம் கிடைக்க வழிவகுக்கின்றது. எஞ்சிய கழிவு பசளையாகப் பயன்படுத்தப்படுகின்றது என விளக்கமளித்தார். இவ் உயிர்வாயு உற்பத்திக்கு எஞ்சிய உணவும் நீருமே பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. உயிர்வர்யு கரு நீல நிறமாகவும் ஒரு வகையான மணம் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது.

தொடர்ந்து வைத்தியசாலையில் இருந்து விடுபட்டு சிகிரியா மலைக்குன்று நோக்கிப் பயணம் ஆரம்பமாகின்றது. காசியப்ப மன்னனால் தற்பாதுகாத்துக் கொள்வதற்கு அமைக்கப்பட்ட இம்மலையில் பல நூறு வருடங்களுக்கு முன்பே வரையப்பட்ட சிகிரியா ஓவியங்கள் இக்காலத்திலும் நிலைத்து நிற்பது பெருமைக்குரிய விடயம். சிகிரியா மலை ஏறி இறங்கியவுடன் எமது களப்பயணம் முற்றுப் பெறுகின்றது. சிகிரியாவில் இருந்து மீண்டும் எமது பாடசாலை நோக்கி பயணம் தொடர்கிறது. நள்ளிரவைத் தாண்டி பாடசாலை வளாகத்துக்கு 70 பேருடன் 7 நாள்கள் பயணித்த வெற்றிகரமான களப்பயணம் நிறைவெய்துகிறது.

சுமார் 48 வகையான வரலாற்றுப் பொருளாதார, அரசியல், கலை அம்சம் பொருந்திய, ஆன்மீக மற்றும் கல்வி நடவடிக்கை சார்ந்த பல விடயங்களை கிளிநொச்சி,

**அபராஜிதன்**
**(ஆசிரியர்,கச்சாய் அ.த.க. பாடசாலை)**

வவுனியா, அநுராதபுரம், புத்தளம், கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, நுவரெலியா, கண்டி, மாத்தளை ஆகிய 10 மாவட்டங் களுடாக பயணித்து பார்க்கக் கூடிய வாய்ப்பு எமக்குக் கிடைத்தமை ஒரு பேறாகவே அமைந்தது. இச் செயற்பாட்டுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு.ஈ.சரவணபவன், திரு.சி.சிவஞானம் ஆகியோர்களதும் மாத்தளை நகர சமூக சேவையாளர்களான திரு.பண்டாரநாயக்கா, திரு.ஜோசப் அவர்களது பங்களிப்பும் இன்றியமையாதவையாகவிருந்தன. அத்துடன் ஒரு களப்பயணம் வெற்றியளிக்க பயணிக்கின்ற வாகனமும் அதனைச் செலுத்துகின்ற சாரதியும் முக்கியமானவை. அதுவும் எமக்குச் சாதகமாக அமைந்ததன் காரணமாக் வெற்றிகரமான களப்பயணம் முற்றுப் பெற்றது.

(முற்றும்)



# சோதனைகளைச் சாதனையாக்கிய மகத்தான வீரன் முரளிதரன்

கிரிக்கெட் உலகில் பந்துவீச்சில் தனக்கென தனி முத்திரையைப் பதித்து முடிசூடா மன்னனாக வலம் வரும் முத்தையா முரளிதரன் இன்றுடன் சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.

1972 ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி பிறந்த முரளி கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் கல்வி கற்றார். பாடசாலைக் காலத்தில் வேகப்பந்து வீச்சாளராகத் மிளிர்ந்த முரளிதரனை பயிற்சியாளர் சுனில் பெர்ணான்டோ சுழல் பந்து வீச்சாளராக மாற்றினார்.

அதன்பின்னர் 1992ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம்



வீரர்கள் கௌரவம் அளித்தபோது

திகதி கொழும்பு பிரேமதாஸ அரங்கில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார்.

இதுவரை 134 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியுள்ள முரளிதரன் 797 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். தொடர்ந்து ஒரு நாள் போட்டிகளில் இவர் பங்கேற்கவுள்ளார். 337 ஒரு நாள் போட்டிகளில் 515 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சாதனைகள் பல படைத்த முரளிதரன் அச்சாதனைகளால் இலங்கை அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றதுடன் நட்சத்திர நாயகனாகவும் வலம் வருகின்றார்.

அதுமட்டுமல்லாது ஐ.நா. சபையின் உலக உணவுத் திட்டத்தின் தூதுவராக இருந்து மக்களுக்கு சேவையாற்றி வருகின்றார். சுனாமி அனர்த்தத்தின் போதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியிருந்தார். 2005 ஆம் ஆண்டு திருமண பந்தத்தில் இணைந்தார்.

### சோதனைகளைக் கடந்து...

முத்தையா முரளிதரனின் கிரிக்கெட் வாழ்வு பல சோதனைகளைச் சந்தித்ததாகவே இருந்தது. அவரின் கிரிக்கெட் வாழ்வுக்கு சவால் மிக்க 3 சோதனைகளை அவர் எதிர்கொண்டிருந்தார்.

1995ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய நடுவரான டெரல் ஹெயார் அவர் முறைகேடான முறையில் பந்து வீசுவதாகக் குற்றஞ் சாட்டினார். தனது கிரிக்கெட் வாழ்வு இத்தோடு முடிந்து போகுமோ? என்று அஞ்சிய முரளிக்கு இலங்கை அணியின் அப்போதைய அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க பக்கபலமாக நின்று சோதனையைச் சாதனையாக்க உதவினார்.

மீண்டும் 1999 ஆம் ஆண்டு நடுவர் எமர்சனும், 2004ஆம் ஆண்டும் முரளியின் பந்துவீச்சுத் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இதனையடுத்து ஐ.சி.சியின் பயோ மெக்கானிக்கல் சோதனைக்குத் தன்னை உட்படுத்தி தனது தகுதியையும், தனது பந்துவீச்சு ஐ.சி.சியின் விதிக்கு உட்பட்டதே என்றும் முரளிதரன் நிரூபித்தார்.

அவுஸ்திரேலிய ரசிகர்களும் இவர் பந்துவீசிய போது பந்தை எறிவதாகக் குற்றஞ்சாட்ட அவுஸ்திரேலியாவுக்குச் சென்று விளையாடுவதைச் சிறிது காலம் தவிர்த்தார்.

### வாழ்நாள் சாதனையாளர் விருது

முரளிதரன் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதை அறிவித்த நிலையில் காலி டெஸ்ட் போட்டியின் ஆரம்பத்தில் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க வாழ்நாள் சாதனையாளர் விருதை வழங்கிக் கௌரவித்தார்.

### தங்கநாணயம் வெளியீடு

ஓய்வு பெறவுள்ள முரளிதரனின் மகத்தான சாதனையையும், அவரையும் பாராட்டும் வகையில் இலங்கை கிரிக்கெட் சபை முரளிதரனின் தலை பொறித்த தங்கநாணயம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

காலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 18 ஆம் திகதி ஆரம்பமான டெஸ்ட் போட்டியில் இந்த நாணயமே நாணயச் சுழற்சியின் போது பயன்படுத்தப்பட்டது. தொடர்ச்சியாக இனிவரும் போட்டிகளின் போதும் இந்த நாணயத்தையே நாணயச் சுழற்சிக்காக பயன்படுத்தப் போவதாக இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் டி.எஸ்.டி.சில்வா அறிவித்துள்ளார்.

### சாதனை நாயகன்

அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக தனது முதலாவது டெஸ்ட் பயணத்தை ஆரம்பித்த முரளிதரன்



பயோ மெக்கானிக்கல் பரிசோதனையின்போது...

இன்று 134 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 797 விக்கெட்டுகள் என்ற இமாலய சாதனையைப் படைத்துள்ளார்.

முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் பலரையும் தனது பந்துவீச்சினால் திணறடித்த முரளி இலங்கை அணி பல வெற்றிகளைப் பெற மூலகாரணமாகவும் விளங்கினார்.

அதிகூடிய விக்கெட்டுகள் என்ற சாதனையைத் தாண்டிய முரளிதரனின் சாதனைகளைப் பார்ப்போம்.

* டெஸ்ட் போட்டிகளில் 10 விக்கெட்டுகளுக்கு மேல் அதிக தடவைகள் (22 தடவைகள்) கைப்பற்றிய ஒரேஒரு வீரர்.
* டெஸ்ட் போட்டிகளில் 5 விக்கெட்டுகளுக்கு மேல் அதிக தடவைகள் (67 தடவைகள்) கைப்பற்றிய வீரர்.
* விளையாடிய அனைத்து நாடுகளுக்கு எதிராகவும் 50 விக்கெட்டுகளுக்கு மேல் கைப்பற்றிய வீரர்.
* டெஸ்ட், ஒருநாள் போட்டிகளில் 1000 விக்கெட்டுகளுக்கு மேல் (1,313 விக்கெட்டுக்கள்) கைப்பற்றியவர்.
* அனைத்து நாடுகளுக்கு எதிராகவும் ஒரு போட்டியில் 10 விக்கெட்டுகளுக்கு மேல் கைப்பற்றியுள்ளார்.
* நான்கு டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியாக 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றியவர். இந்த சாதனையை முரளி இரு தடவைகள் படைத்துள்ளார்.
* டெஸ்ட் போட்டிகளில் 153 விக்கெட்டுகளை நேரடியாக ஆட்டமிழப்புச் செய்துள்ளார்.
* சிறந்த களத்தடுப்பு ஜோடியாக முரளி - மஹேல ஜெயவர்த்தனா ஜோடி உள்ளது. முரளியின் பந்துவீச்சில் மஹேல 63 பிடிகளை எடுத்துள்ளார்.



ஐ.நா.வின் உலக உணவுத் திட்டத்தின் தூதுவராக...

* இன்னிங்ஸ் ஒன்றில் 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ள முரளி போட்டி ஒன்றில் 16 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

முரளியின் பெரும்பாலான சாதனைகள் முறியடிக்கப்பட நீண்ட காலம் செல்லும் என்று கிரிக்கெட் வல்லுநர்களால்



**இன்றுடன் தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்வில் இருந்து சுழல் மன்னன் முரளிதரன் ஓய்வுபெறுகிறார். அவர் கடந்து வந்த பாதையை ஒரு தடவை மீட்டிப் பார்ப்போம்.....**

கணிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் பெரும்பாலும் முரளியின் சாதனைகள் முறியடிக்க முடியாததாகவே கணிக்கப்படுகின்றது.

ஏனெனில் ருவென்ரி-20 போட்டிகளின் ஆதிக்கத்தினால் டெஸ்ட் போட்டிகளின் நிலைத்திருப்பு கேள்விக் குறியாகி வருகின்றது. ஆகையால் முரளியின் சாதனைகள் பெரும்பாலும் முறியடிக்கப்படாமல் இருப்பதற்கான சாத்தியமே உண்டு என்றே நம்பலாம்.

முரளிதரனின் ஓய்வு அறிவிப்பு பலருக்கும் அதிர்ச்சியையும் வியப்பையும் ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும் அவர் ஒருநாள் போட்டிகளிலும், ருவென்ரி-20 போட்டிகளிலும் தொடர்ந்து களமிறங்குவார் என்பது மகிழ்ச்சியான விடயமே.

முரளிதரன் தனது ஓய்வுகாலத்தை சிறந்த முறையில் கழிக்கவும் ஒருநாள், ருவென்ரி-20 போட்டிகளில் புதிய சாதனைகளைப் படைக்கவும் நாமும் வாழ்த்துவோம். ✱



தொகுப்பு: தமிழரசன்

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | முத்தையா முரளிதரன் |
| பிறந்த திகதி | : | 1972.04.17 |
| விளையாடும் அணிகள் | : | இலங்கை, ஆசியா 11, சென்னை சுப்பர் கிங்ஸ், ஐ.சி.சி. உலக பதினோருவர் அணி, கண்டுரத்த, கென்ற், லங்கா ஷெயர், தமிழ் யூனியன். |
| விளையாட்டில் பங்கெடுக்கும் முறை | : | பந்துவீச்சாளர். |
| துடுப்பாட்ட முறை | : | வலதுகை துடுப்பாட்ட வீரர். |
| பந்து வீசும் முறை | : | வலது சுழல் பந்து, தூஷ்ரா. |
| உயரம் | : | 5 அடி 7 அங்குலம். |
| கல்வி | : | கண்டி புனித அந்தோனியார் கல்லூரி. |
| டெஸ்ட் போட்டியில் அறிமுகம் | : | 1992.08.28 அவுஸ்திரேலியாவுக்கு எதிராக |



# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10 ஆவது ஆண்டு சிறப்பு மலர்

## தனித்துவமான பணியில் ஒப்பற்ற நிறுவனம்



யாழ்.குடாநாட்டிலுள்ள உயர்கல்வி ஸ்தாபனங்களில் முதன்மை நிலையில் ஆசிரியர்களை உருவாக்கும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி தனித்துவமானது. கடந்த பத்தாண்டுகளாக நல்லாசிரியப் பெருமக்களை உருவாக்கிய ஒப்பற்ற நிறுவனத்திற்கு ஆசி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன்.

கல்லூரி அமைவதற்கு நிழல்கொடுத்த அமரர் வி.தர்மலிங்கம் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்) குடும்பத்தினரின் பேருபகாரச் செயலை நீள நினைந்து வணங்குகின்றேன். கமலநாதன் அவர்களின் அர்ப் பணிப்பான சேவையை நன்றியோடு வாழ்த்துகின்றேன். இன்று கல்வியியற் கல்லூரியை உன்னதமான நிலையில் வளர்த்து வருகின்ற மதிப்பார்ந்த பீடாதிபதி உயர்.திரு எஸ்.கே.யோகநாதன் அவர்களின் சேவையை வாழ்த்து கின்றேன். கல்வியியற் கல்லூரி ஆரம்பித்த நாள் முதல் அதன் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்த கல்வியியலாளர்கள் அனைவரையும் வாழ்த்தி என் ஆசிகளை வழங்குகின்றேன்.

திரு.ஆறு.திருமுருகன்
*தலைவர் - ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்*
*அதிபர் - யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி.*

## ஒரு தசாப்த கால கல்விப் பயணம்



அழகான ஆசிரியர்,அழகான நாளைக்கான பெரு முதலீடாகும்.

எங்கள் கல்விப் புலத்தின் அழகினை காத்தும், கரந்தும் நிமிர்ந்துள்ள யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தன் 10 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் செய்தி பெறுமதி யானது.

ஒரு தசாப்தகால கல்விப் பயணம்.

தெளிந்த கல்வியியலாளர்கள், கல்விசாரா ஊழியர்களின் அயரா உழைப்பு. கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி கமலநாதன் முதல் இன்றைய பீடாதிபதி எஸ்.கே யோகநாதன் மற்றும் மாணவ சமூகத்தின் அர்த்தமுள்ள கல்விப் பணி போற்றுதலுக்குரியது.

என்றென்றும் விரிந்து செல்லும் எண்ணத்தை, செயலை வசமாக்கும் கல்வியியல் கல்லூரியின் பணி என்றென்றும் மேன்மைபெற எல்லையிலாத என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர். கலாநிதி.நா.சண்முகலிங்கன்
*துணைவேந்தர்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

## பதிவாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியி யற் கல்லூரியின் 10 வது ஆண்டுப் பூர்த்தி ஒரு வரலாற்றுச் சாதனையாகும். பல இக்கட்டான சூழ்நிலைகளுக்கு மத்தியில் மிக விரைவாக வளர்ந்த தேசிய கல்வியியற் கல்லூரியாகத் தன்னை இனங்காட்டும் இக் கல்லூரியின் முகிழ்ப்பு எமது மண்ணில் ஆசிரிய கல்விப் பாரம்பரியத்தில் உயர்வான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளிலேயே அதிகமான 13 பாடநெறிகளைக் கொண்டு தமிழ் ஆங்கில மொழி மூலமாக ஆசிரியப் பயிற்சி வழங்குவது அடுத்த சிறப்பம்சமாகும். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் சிறந்த ஆசிரியர் பயில்வைப் பெற்று இலங்கை முழுவதும் கற்பிக்கும் ஆசிரியர்கள் இளம் சந்ததியினரான மாணவர்களுக்குத் தமது அர்ப்பணிப்பான சேவையை வழங்கி கல்லூரியின் பெருமையை நிலைநாட்டி வருகின்றனர். இவ்வேளை இக்கல்லூரிக்கு இரவு பகலாகத் தம்மை அர்ப்பணித்த அனைவரையும் நினைவு கூர்ந்து தொடர்ந்து கல்லூரி மேலும் பல வளர்ச்சிக் கட்டங்களை அடைய இறையாசியை வேண்டி வாழ்த்துகின்றேன்.

சி.சிவநாதன்,
*பதிவாளர்*
*யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி.*

## ஆசிரியரை உருவாக்கும் உன்னத பணியில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி

ஒரு சமூகத்தின் கல்விக் களஞ்சியங்கள், பொக்கிஷங் களாம் ஆசிரியர்களை உருவாக்குவதையே தனது ஓர் உன்னதமான நோக்காகக் கொண்டு, பல்வேறு விதமான தடைகள், கஷ்டங்கள், துன்பங்கள், கசப்பான அனுபவங்களைத் தாண்டி இன்றும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி தலை நிமிர்ந்து பயணித்துக் கொண்டிருக்கின்றது.

ஆரம்ப இயக்குனர், விருட்ச மாம் கல்வியின் கர்த்தா திரு கமல நாதனின் அர்ப்பணிப்பும், ஆரம்ப வழிகாட்டல்களுமே இன்றும் இக் கல்வியியற் கல்லூரிக்கு ஒரு உந்துதலாக அமைந்துள்ளது. பல்வேறு வழிகாட்டுனர்கள், இயக்குனர்களின் கல்விப் பணி வாழ்வின் வரிசையில் தற்போது திரு யோக நாதன் அவர்கள் தமது பணியை செவ்வனே செய்வதை யிட்டு மனம் மகிழ்ந்து எதிர்கால சமூகத்துக்கும் தமது உயர்வான பணியை இக் கல்வியியற் கல்லூரி செய்து ஆசிரியர்கள் பலரை உருவாக்கிட வாழ்த்துகிறேன்.

அருட்கலாநிதி பஸ்ரின் ஞானப்பிரகாசம்
குருமுதல்வர்,ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## தற்போதைய பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளை வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

ஆரோக்கியமான ஆசிரியர் கல்விச் சூழலை எமது கல்லூரியில் அமைத்து சிறந்த நல்லாசிரியர்களைக் கடந்த பத்து வருடங்களாக உருவாக்கி வருகின்றோம். இதற்காக நாம் பட்ட கஷ்டங்கள், அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள், இழப்புக்கள் ஏராளம். ஆசிரியர்கள் உயர்ந்த ஒழுக்கத்தையும், மனித விழுமியங் களையும் கைக்கொள்ளும்போது மாணவர்கள் அவர்கள் வசம்லயித்து கற்றலில் உயர்ந்த ஆர்வம் காட்டுவார்கள். இன்றைய எமது கல்லூரியின் 10 ஆவது ஆண்டு நிறைவில் கலந்துகொள்ள உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன்.

எமது கல்லூரியைச் சிறப்பாக இயங்க கடந்த பத்து வருடங்களாக உதவிய அனைவருக்கும் இவ்வேளை நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எஸ்.கே.யோகநாதன், பீடாதிபதி.
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி*

## முன்மாதிரியாகத் திகழும் யாழ்.கல்வியியற் கல்லூரி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவுக்கு எனது ஆசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையின் ஆசிரியர் கல்வி வரலாற்றில் தேசிய கல்வியியற் கல்லூரிகள் முன் சேவைப்பயில்வை வழங்கி பெரும் சாதனைகள் செய்துள் ளன. இன்றைய சமகால உலகில் தொழில் வாண்மைக் கற்கைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. அவ்வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கடந்த பத்து வருடங் களாக சிறந்த முறையில் இயங்கி வருகின்றது. பல இக்கட்டான நெருக்கடிகள், பிரச்சினைகள் நிகழ்ந்த போதும் அவற்றை எல்லாம் தாங்கி - தாண்டி சிறந்த நல்லாசிரியர்களை உருவாக்கும் இலட்சிய நோக்குடன் செயற்பட்டு வருகின்றது. இக்கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதனும் தற்போதைய பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும் மிகச் சிறந்த முறையில் ஏனைய தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு முன்மாதிரியாக யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியை இயக்கியமை அவர்களது சிறந்த முகாமைத்துவ ஆர்வமேயாகும்.இக் கல்லூரி மேலும் பல வளங்களுடன் வளர்ச்சிகாண எனது வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

Y.A.N.D.யாப்பா, பிரதம ஆணையாளர்
*தேசிய கல்வியற் கல்லூரிகள் பிரிவு*
*கல்வியமைச்சு - இசுறுபாய, பத்திரமுல்ல.*

## கல்லூரியின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களுக்கு வாழ்த்துக்கள்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

உலகளாவிய ரீதியில் இன்று புதிய கல்வியியற் சிந்தனைகளும், திருத்தங்களும் நடை முறைப்படுத்தப்படும் நிலையில், நாமும் எமக்குப் பொருத்தமானதை உள்வாங்கி அப்புதிய போக்குடன் செல்வது காலத்தின் தேவையாகும். எம் எதிர்காலச் சிற்பிகளான இன்றைய மாணவர்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்ற திட்டமிட்ட முறை யில் கல்விச் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

யாவருக்கும் கல்வி என்ற கோட்பாட்டின்படி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய முன்சேவைச் செயற்பாடுகளை மேற்கொண்டு வாண்மை விருத்தியுள்ள ஆசிரியர்களைத் தொடர்ந்து உருவாக்க வேண்டும். இதுவரை காலமும் இக் கல்லூரிக்காய் பாடுபட்ட அனைவரது சேவைகளையும் நினைவு கூர்ந்து எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

திருமதி.இமெல்டா சுகுமார்.
*அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.*

## எதிர்காலத்தில் புதிய பாடநெறி: அனைவர் ஆதரவும் தேவை



கோப்பாய் மண்ணில் பல் வேறு தடைகளுக்கும், சவால் களுக்கும் மத்தியில் 02.05.2000 ஆம் ஆண்டு இக் கல்லூரி கோப்பாய் ஆசிரிய கலாசாலை யின் ஒரு பகுதியில் ஆரம்பிக் கப்பட்டது.

இன்று முதலாவது பீடாதிபதி Dr.கமலநாதன் வழியில் இன்றைய பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் சிறந்த முறையில் நவீன முகாமைத்துவ அணுகுமுறை களினூடாகக் கல்லூரியைச் சிறப்பாக இயக்கி வருகின்றார். இங்கு வட மாகாணத்திலுள்ள அனைத்து ஆசிரியர்களும் பயிலும் வகையில் B.Ed. பாடநெறி சனி,ஞாயிறு தினங்களில் நடைபெறுகிறது. இம்முறை முதன்முறையாக ஆங்கில மொழிமூல B.Ed பாடநெறியை அறிமுகம் செய்துள்ளோம். எதிர்காலத்தில் தேசிய கல்வி நிறுவக M.Ed பாட நெறியையும் ஆரம்பிக்கவுள்ளோம். இதற்கு உங்கள் அனைவரது ஆதரவும் தேவை.

*வைத்தியகலாநிதி. லயன்.வை.தியாகராஜா MJF.JP*
*சிரேஷ்ட ஆலோசனைச் சபை உறுப்பினர்*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*

## முதலாவது பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி வெளிவரும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதை இட்டு பேருவகை அடைகிறேன். இக் கல்லூரியின் தோற்றமும் பெரு வளர்ச்சியும் மிக விரை வானதாகும். இவ்விரைவான வளர்ச்சிக்கு தம்மை அர்ப்பணித்த அனைவரையும் நினைவு கூருகின்றேன்.

உயர் செல்வமான கல்வியை வழங்குவோராக ஆசிரியர்களே உள்ளனர். இவர்களை வதிவிட முன் சேவைப் பயில்வினூடாக உருவாக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கடந்த பத்து வருடங்களாக நல்லாசிரியர்களை உருவாக்கி வருகின்றது. இக்கல்லூரியை ஆரம்பித்த காலத்திலிருந்து என்னுடன் தோள்கொடுத்த வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜாவிலிருந்து இன்றைய பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் வரையுள்ள அனைவரது அர்ப்பணிப்புக் களையும் போற்றுகின்றேன். ஆசிரியர் கல்வியின் இலட்சியக் கோயிலாக, ஒழுக்கத்தின் உறைவிடமாக, சமூக நீதியின் பிறப்பிடமாக இக்கல்லூரி தொடர்ந்து வளர இறையருளை வேண்டுகின்றேன்.

கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
*முதலாவது பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி (அவுஸ்திரேலியாவிலிருந்து)*




கலாசுரபி 10 ஆவது இதழ்
நயப்புரை திரு.ச.லலீசன்
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

மலர் அமைப்பு: பா.தனபாலன்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10 ஆவது அணி முகிழ்நிலை ஆசிரியர்களுடன் பீடாதிபதி, உப பீடாதிபதிகள், கல்வியியலாளர்கள்.

# புன்னை நீராவி, கல்லாறு பகுதி மக்கள் அவலம்; ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்படாததால்!

கண்டாவளை, ஜூலை 22

புன்னை நீராவி, கல்லாறு பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்காமையால் மக்கள் அவதி நிலைக்குள்ளாகியுள்ளனர். கிளிநொச்சி புன்னை நீராவி, கல்லாறு பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு பல வாரங்கள் கழிந்தும் ஆரம்ப சுகாதார நிலையம் சம்பந்தப்பட்டவர் களால் ஆரம்பிக்கப்படவில்லை.

பிரமந்தனாறு, விசுவமடு மயில்வாகனபுரம் , தம்பிராசபுரம், கல்லாறு, புன்னை நீராவி போன்ற பிரதேசங்களில் உள்ள நோயாளர்களும் கர்ப்பிணித் தாய்மார்களும் இதனால் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

யுத்த காலத்திலும் அதற்கு முன்னரும் இவ்விரு ஆரம்ப சுகாதார நிலையங்களும் மக்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றி வந்துள்ளன.

நோயாளர் 'அம்புலன்ஸ்' சேவையும் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து நடத்தப்பட்டது. தற்போது மக்கள் மீளவும் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்காமையால் பெரும்அவதி நிலைக்குள்ளாகியுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிகவும் கஷ்டப் பிரதேசமான இப்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்மீளவும் இயங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (1-432)

## பூநகரி கறுக்காய்த்தீவு ம.வியில் ஆசிரியர் பற்றாக்குறையால் கல்வி நிலை பாதிப்பு

பூநகரி, ஜூலை 22

பூநகரி கறுக்காய்த்தீவு ம.வி இயங்க ஆரம்பித்த போதும் ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதால் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின்னரும் கிளி/ கறுக்காய்த்தீவு ம.வியில் கல்வி கற்பதில் மாணவர்கள் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

ஆங்கிலப் பாடம் உட்பட முக்கிய பாடங்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமிக்கப்படாமையால் ஆரம்பக் கல்விக்கு மேலே கற்கும் மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

இந்த நிலைக்குத் தீர்வுகாணுமாறு கல்வி அதிகாரிகளை மாணவர்கள் கோருகின்றனர். (1-420)

## கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கம் அங்குரார்ப்பணம்

கண்டாவளை, ஜூலை 22

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் அதிபர் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கத் தின் நடப்பு வருட உத்தியோகத்தர் களாக ச. பூலோகராஜா (தலைவர்), அ.பங்கையற்செல்வன் (செயலாளர்), எஸ். பாலச்சந்திரன் (உபசெயலாளர்), மீ.இதயசிவதாஸ் ( உபதலைவர்), எஸ் வரதராஜன் (பொருளாளர்), ச. புண்ணியமூர்த்தி ( உறுப்பினர்),ஸ்ரீ. முருகசோதி (உறுப்பினர்), க. குணபாலசிங்கம் (உறுப்பினர்), சி. வதனராசா (உறுப்பினர்)ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (1-432)

## விசுவமடுச் சந்தை புதிய இடத்தில் கடந்த வாரம் இயங்கத் தொடங்கியது

கண்டாவளை, ஜூலை 22

விசுவமடுச் சந்தை புதிய இடத்தில் கடந்த வாரத்தில் இருந்து இயங்க ஆரம்பித்துள்ளது.

விசுவமடுப் பகுதியில் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு பல நாள்களாகியும் சந்தை ஆரம்பிக்கப்படாமல் வர்த்தகர்களும், பொதுமக்களும் வீதியோரங்கள், மரநிழல்கள் போன்ற இடங்களில் ஆங்காங்கே வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந் நடவடிக்கையை நிறுத்தி புதிய சந்தை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் ச. சத்தியசீலன், கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் ஆகியோர் எடுத்த தீவிர முயற்சி காரணமாக புதிய சந்தைக்கு காணி அடையாளப்படுத்தப்பட்டு வர்த்தக நடவடிக்கைகள் கடந்த வாரத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விசுவமடுச் சந்தை ஏற்கனவே இயங்கிய பகுதி இன்னமும் மீள்குடியேற்றம் செய்யப்படாத பகுதி என்பதாலும் சந்தை இயங்கிய காணியும் வேறு ஒரு நிறுவனத்திற்குச் சொந்தமானது என்பதாலும் புதிய இடத்தில் சந்தை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (1-432)

## நாடாளுமன்ற உறுப்பினரின் ஏற்பாட்டில் சைக்கிள்,மூன்று சில்லு சைக்கிள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி, ஜூலை 22

நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கும், நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தையை சிகிச்சைக்கு கொண்டு செல்வதற்குத் தாய் ஒருவருக்கும் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியா இன்பத் தமிழ் வானொலியின் பணிப்பாளர் பா.பிரபாகரனின் நிதி உதவியில் கிளிநொச்சி விவேகானந்த நகரைச் சேர்ந்த மதிவண்ணன் மதுசா என்பவருக்கு சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. நரம்பியல் மற்றும் மூளை நோயினால் பாதிக்கப்பட்ட இவரது குழந்தையை உடற்பயிற்சிக்காக வைத்தியசாலைக்கு நாள்தோறும் கொண்டு செல்ல வேண்டும். மூன்று வயதான அந்தக் குழந்தையை நாள்தோறும் தூக்கிச்சென்று வந்ததயார் கோரியதற்கு இணங்க சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டுள் ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மேற்படி உதவியைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்.

அதேவேளை நோய் வாய்ப்பட்டு கால் இயங்காத முதியவர் ஒருவருக்கு மூன்று சில்லுச் சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஊற்றுப்புலத்தில் தனியாக வசிக்கும் குறித்த முதியவர் நாள் தோறும் பேருந்தில்கிளிநொச்சிச் சந்தைக்குச்சென்று மீன்வெட்டிக் கொடுக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தார். கால் இயங்காத நிலையில் பேருந்தில் சென்று வருவதில் பல சிரமங்களை எதிர்கொண்டார்.

பேருந்தில் இடமின்மை,ஏற முடியாமை, பயணம் செய்ய முடியாமை என்ற நிலையில் தனக்கு ஒரு மூன்று சில்லுச் சைக்கிள் வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் கோரிக்கை விடுத்ததை அடுத்து இந்து மாமன்ற நிதி உதவியில் அவருக்கு மூன்று சில்லுச் சைக்கிள் வழங்கப்பட்டது. (1)

## கிளிநொச்சி - இராமநாதபுரம் இடையிலான போக்குவரத்துச் சேவையை அதிகரிக்கக் கோரிக்கை

கண்டாவளை, ஜூலை 22

கிளிநொச்சி-இராமநாதபுரம், கல்மடுநகர் இடையிலான (இ.போ.ச) போக்குவரத்துச் சேவையை விஸ்தரிக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கிளிநொச்சிக்கும் இராமநாதபுரத்திற்கும் இடையில் இ.போ.ச. போக்குவரத்துப் பேருந்து ஒன்று மட்டுமே சேவையில் ஈடுப்பட்டுள்ளது. அச்சேவையும் 5.30 மணியுடன் நிறுத்தப்படுகின்றது.

இப்பாதையூடாக இரண்டு தனியார் பேருந்துகள் சேவையிலீடுபட்டாலும் பயணிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றியபடியே செல்கின்றன. இதனால் விபத்துகள் ஏற்படவும் சாதகமான நிலையுள்ளது.

இரவு நேரங்களில் இப்பகுதிக்கு பிரயாணம் செய்யும் பயணிகள் அதிக பணத்தைச் செலவு செய்து தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தியே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இராமநாதபுரம், கல்மடுநகர் வரை நடைபெற்ற போக்குவரத்துச் சேவை தருமபுரம் ஊடாக விசுவமடுவரை நடத்தப்படுவதால் பேருந்துகளில் பயணிகள் அளவுக்கு அதிகமாக அடையப்பட்டு பலத்த சிரமத்தின் மத்தியில் குன்றும் குழியுமான வீதிகளினூடாகப் பயணம் நடக்கிறது.

இவ் வேதனைகளைக் கணக்கில் எடுத்து உரிய அதிகாரிகள் இப்பாதையினூடாக இ.போ.ச. போக்குவரத்தை விஸ்தரிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (1-432)

## முழங்காவில் பிரதேசத்துக்கான பஸ் சேவையை நீடிக்கக் கோரிக்கை

பூநகரி, ஜூலை 22

பூநகரி ஊடாக முழங்காவிலுக்கு இடம்பெறும் சேவைகளை மக்கள் நலன்கருதி விஸ்தரிக்குமாறு அப்பிரதேச மக்கள் போக்குவரத்து அமைச்சைக் கேட்டுள்ளனர்.

வேறு பிரதேசங்களிலிருந்து பூநகரியூடாக முழங்காவில் நோக்கிச் செல்லும் பயணிகள் பேருந்து 31 ஆம் கட்டை அன்புபுரம் பகுதி வரையும், கௌதாரி முனைக்குச் சென்று வரும் பேருந்துகள் நெற்புலவூடாகவும்-

பரந்தன்- பூநகரி (வாடியடி) வீதியூடாகச் செல்லும் பயணிகள் பேருந்துகள் கறுக்காய்த்தீவு, ஞானிமடம் ஊடாகவும்- சென்று தமது சேவையை மேற்கொள்ளுமாறு போக்குவரத்து அமைச்சிடம் மக்கள் வேண்டி நிற்கின் றனர்.

இவ்வாறு பயணிகள் பேருந்துகள் தமது பயணத்தை மேற்கொள்வதன் மூலம் மக்கள் பெரும் பயனை அடையமுடியும் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது. (1-420)




## வட்டக்கச்சி, இராமநாதபுரத்தில் திருடர்கள் குறித்து அவதானமாக இருங்கள்! ஒலி பெருக்கி மூலம் படையினர் அறிவிப்பு

கண்டாவளை, ஜூலை 22

வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் திருடர் தொல்லை அதிகரித்துள்ளபடியால் பொதுமக்களைத் தமது பொருள்களையும் உடைமைகளையும் பாதுகாப்பாக வைத்தி ருக்கும்படி இராணுவத்தினர் கேட்டுள்ளனர்.

வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் திருடர்களின் தொல்லைகளில் இருந்து தம்மைப் பாதுகாக்க தமது உடைமைகளையும் சொத்துக்களையும் பாதுகாப்பாக வைத்திருக்கும் வண்ணம் இராணுவத்தினரால் ஒலிபெருக்கி மூலம் பகிரங்க அறிவித்தல் விடுக்கப்பட்டு வருகின்றது.

அண்மைக்காலமாக இப்பகுதிகளில் இரவுத் திருடர்கள் தொல்லை அதிகரித்திருப்பதைத் தொடர்ந்தே இராணுவத்தினரால் இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (1-432)





வன்னியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால் சைக்கிள், மூன்று சில்லுச் சைக்கிள் என்பன வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி விவேகானந்த நகரைச் சேர்ந்த மதிவண்ணன் மதுசாவுக்கு சைக்கிளும், கிளிநொச்சி ஊற்றுப் புலத்தைச் சேர்ந்த முதியவருக்கு மூன்றுச் சில்லு சைக்கிளும் சிறிதரன் எம்.பியினால் வழங்கப்படுவதைப் படங்களில் காணலாம். (1)

"புகைப்படக்கலைஞர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஓர் நற்செய்தி."

PRIYANKA Digital Colour Lab

பிரியங்கா
டிஜிற்றல் கலர் லாப்

பருத்தித்துறை வீதி. நெல்லியடி. 021 5 670 210

வடக்கு கிழக்கில் முதன் முறையாக
NORITSU QSS-37HD (High Definition) 640 DPI, எனும் இயந்திரத்தை
அறிமுகப்படுத்தியவர்கள் பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப்பினரே!

எம்மிடம் 3R-தொடக்கம் 12X36 வரையான அளவில்
புகைப்படங்களை பிரதியாக்கம் செய்துகொள்ளவும், பாஸ்போட்,
NIC, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் அனைத்து அளவிலான
புகைப்படங்களையும் உடன் பெற்று கொள்ளவும்
உட்புற வெளிப்புற படப்பிடிப்பு, வீடியோ எடிற்றிங்,
போட்டோ டிசைனிங் & ஸ்கானிங்
Cool&Hot லெமனேற்றிங், அல்பம்மேக்கிங்,
டியூறோபிறேம் ஆகிய சேவைகளையும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்...



பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

# மரண அறிவித்தல்



## திருமதி மார்க்கண்டு இராசம்மா

பருத்தித்துறை வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு இராசம்மா 17.07.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலு - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சரவணை - முத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லம்மா, இரத்தினம், சிவசுப்பிரமணியம், சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் விமலாதேவி, நவரத்தினராசா (வயறிங் நவம்), இராஜேஸ்வரி, கனகராசா (பிரான்ஸ்), தவமணிதேவி, தர்மராசா (வயறிங்), ஸ்ரீகாந்தராசா (நோர்வே), கலாதேவி (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புத் தாயும் பரமராசா, கிருஷ்ணன், கோபாலசிங்கம், சண்முகராசா (பெல்ஜியம்), காலஞ்சென்ற புஷ்பராணி, ரஞ்சி (பிரான்ஸ்), கிரிஜா, மாலினி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும் ஜெசிந்தன் (பிரான்ஸ்), சுதாநந்தினி (பிரான்ஸ்), வசந்தன் (வயறிங்), கீதா, உஷாநந்தினி (சுவிஸ்), சாருஜன் (ஜேர்மனி), சிந்துஜன் (ஜேர்மனி), நிரோஜன் (கொனிக்கா கலர்லாப்), நிசாளினி, நிலானி, ஐஸ்வரியா (பிரான்ஸ்), சஞ்ஜீப் (பிரான்ஸ்), விஜயகுமார் (வயறிங்), ராயூ (லண்டன்), கிரிகான்சி (ஆசிரியை), தீபன், சோபிகா, நூபன், தட்சாயினி, தேனுகா, விதுசன் (நோர்வே), கம்சிகா, ஆகாஷ், வேனுசன் (நோர்வே), பிரணவன், பிரவீனா, பிரவின் (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.07.2010) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 3.30 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82/10, 3ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்: மா.நவரத்தினராசா (வயறிங்),
மா.தர்மராசா, மா.ஸ்ரீகாந்தராசா (நோர்வே).

# யாழ். சென்றல் - கொக்குவில் இந்து 'த்ரில்' ஆட்டம் இரண்டு ஓட்டங்களால் சென்றல் அசத்தியது!

## சதயனின் சதம் வீண் போனது

யாழ்ப்பாணம், ஜூலை 22

சர்மிகனின் நிதானமான ஆட்டத்தால் யாழ். மத்திய கல்லூரி அணி இரண்டு ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

பாடசாலை துடுப்பாட்ட சங்கத்தினால் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 15 வயதுக் குட்பட்ட அணிகளுக்கு இடையேயான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றது.

சர்மிகன் 77 ஓட்டங்களையும், சௌமிதரன் 36 ஓட்டங்களையும், தனசியஸ் 33 ஓட்டங்களையும், யூலியஸ் கலிஸ்ரன் 24 ஓட்டங்களையும், ஜெயந்திரன் 17 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 43 ஓட்டங்கள் கிடைத்தன.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வீரர்களான பார்த்தீபன் 10 ஓவர்கள் பந்து வீசி 41 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், தனுலக்ஸன் 7 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், பபிதரன் 9 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், லிங்கநாதன் 10 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், விதுஸயன் 7 ஓவர்கள் பந்து வீசி 47 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 259 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 256 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

சதயன் 107 ஓட்டங்களையும், தனலக்சன் 29 ஓட்டங்களையும், பார்த்தீபன் 19 ஓட்டங்களையும், லிங்கநாதன் 11 ஓட்டங்களையும், பவன் 10 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 56 ஓட்டங்கள் கிடைத்தன.

யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர்களான சௌமிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி, 42 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், நிரூபன் 10 ஓவர்கள் பந்து வீசி 45 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், நிறோசன் 10 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், யூலியஸ் கலிஸ்ரன் 10 ஓவர்கள் பந்து வீசி 41 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், ஜெயந்திரன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (1-23)

# இரத்ததானத்தை ஊக்குவிக்க மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியுடனும், யாழ். மருத்துவபீட சமுதாய மருத்துவத்துறையுடனும் இணைந்து யாழ். மருத்துவபீட மாணவர்கள் (29 ஆம் அணி) சர்வதேச குருதிக் கொடையாளிகள் தினத்தை முன்னிட்டு, இளைஞர்கள் மத்தியில் குருதி வழங்கல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் குருதி சேகரிக்கும் முகமாகவும் மாபெரும் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளனர்.

இச்சுற்றுப் போட்டியானது நான்கு பெரும் பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது. வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலக பிரிவுகள் என்ற ரீதியில் இச்சுற்றுப் போட்டி நடத்தப்படும்.

பின்னர் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் இரண்டு அணிகள் தெரிவு செய்யப்பட்டு, காலிறுதி, அரையிறுதி, இறுதியாட்டங்கள் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும். போட்டியில் பங்குபெறும் ஒவ்வொரு அணி சார்பாகவும் ஆகக் குறைந்தது ஐந்து குருதிக் கொடையாளிகள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். விளையாட்டு வீரர்கள் குருதிக் கொடையாளிகளாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

தொடர்புகளுக்கு வடமராட்சி (0772 247896), தென்மராட்சி (0777531378), வலிகாமம் (0772223807), யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச செயலக பிரிவுகள் (0773 072069) (1)

# தம்பாட்டியில் பத்து 'ஓவர்'துடுப்பாட்டம்; காந்திஜி வெற்றிக்கிண்ணம் சுவீகரித்தது!



ஊர்காவற்றுறை, ஜூலை 22

தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகத்தின் 59 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தீவக ரீதியாக நடைபெற்று வந்த 10 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் தம்பாட்டி காந்திஜி (ஏ) விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

கடந்த சனிக்கிழமை தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில் செட்டிபுலம் ஜயனார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி (ஏ) அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய செட்டி புலம் ஜயனார் விளையாட்டுக்கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 28 ஓட்டங்களைப் பெற்றது. குரு 12 ஓட்டங்களைத் தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். ஏனைய வீரர்கள் இரட்டை இலக்க ஓட்டங்களைக் கூட பெற வில்லை.

பந்து வீச்சில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக (ஏ) அணி வீரர்களான அருண், 4 விக்கெட்டுக்களை யும், கதீசன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

29 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களமிறங்கிய தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக (ஏ) அணி 4.3 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றது.

எம்.குணதாஸ் 13 ஓட்டங்களையும், எஸ்.சுகந்தன் 10 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

யூகன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். 3 பேர் 'ரன்' அவுட்முறையில் ஆட்டம் இழந்தனர். (1-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# தன்ஜீகனின் அதிரடி கை கொடுக்க மகாஜனாவை 9 விக்கெட்டுக்களால் வென்றது யாழ்ப்பாணக் கல்லூரி!

வலி.வடக்கு, ஜூலை 22

இலங்கை பா சாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 17 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியின் ஆட்டமொன்றில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 9 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும், யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் க ்லூரி 38.3 ஓவர்களில் அனைத்து விக் ( டுக்களையும் இழந்து 117 ஓட்டங்களைப பெற்றுக் கொண்டது.

மேசிகீரன் 25, சங்கீதன் 21, வேந்தன்14, மதுசன் 11, திலக்ஷன்10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 24 ஓட்டங்களும் கிடைக்கப்பெற்றன.

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த பென்டில்ஹரன் 9 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சோபிநாத்சுவான் 8.3ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும்,

குருநாத் 6 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், மதுசன் 5 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

118 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி 22.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து இலக்கை அடைந்தது.

தன்ஜீகன் 11 பௌண்டறிகள், இரண்டு சிக்ஸர்களுடன் 74 பந்துகளில் 77 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார், பெஞ்சமின் நிரோசன் 28 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 11 ஓட்டங்களும் கிடைக்கப்பெற்றன.

மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த டிலோசன் 2.4 ஓவர்கள் பந்து வீசி, 27 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். (1-86)

# மானிப்பாய் இந்துவை யாழ்.சென்றல் 75 ஓட்டங்களால் வென்றது!

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்.மத்திய கல்லூரி அணி 75 ஓட்டங்களால் மானிப்பாய் இந்துக் கல்லூரிஅணியை வெற்றி கொண்டது.

பாடசாலை துடுப்பாட்ட சங்கத்தினால் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 17 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையேயான 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த திங்கட்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றது.

கபிலன் 32 ஓட்டங்களையும், நிசாந்தரூபன் 30 ஓட்டங்களையும், நிசாந்தன் 20 ஓட்டங்களையும், லக்சன் 18 ஓட்டங்களையும், டார்வின்,கோகுலன், வதூசனன் ஆகியோர் முறையே 13 ஓட்டங்களையும், நிறோஜ் 10 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 34 ஓட்டங்கள் கிடைத்தன.


பந்து வீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வீரர்களான யூலியன் 8 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், அபராஜன் 10 ஓவர்கள் பந்து வீசி 44 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், வினோதராஜ் 10 ஓவர்கள் பந்து வீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 44.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

சபேசன் 44 ஓட்டங்களையும், பன்வென் 13 ஓட்டங்களையும், சுபர்சன் 15 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 29 ஓட்டங்கள் கிடைத்தன.

யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர்களான வதூசனன் 10 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுக்களையும், டார்வின் 8 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், கோகுலன் 10 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், லக்சன் 7 ஓவர்கள் பந்து வீசி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (1-23)





யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்ற தெல்லிப்பழை பிரதேச செயலகம், யாழ்.பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கான வெற்றிக்கிண்ணங்களை யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம், மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் பி.கே.ஆனந்தராசா ஆகியோர் இணைந்து வீரர்களிடம் வழங்குவதைப் படங்களில் காணலாம்.

(படங்கள் : தமிழினியன்)

# முத்திரை வெளியிட்டு கௌரவிக்கப்படுகிறார் கொக்குவில் இந்துவின் முன்னாள் அதிபர் ஹன்டி பேரின்பநாயகம்



நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அதன் ஓர் அம்சமாக முன்னாள் அதிபர் ஹன்டி பேரின்பநாயகத்தின் பன்முக சேவையைக் கௌரவித்து அரசாங்க சார்புடன் அவர் பற்றிய ஞாபகார்த்த முத்திரையை இன்று (22.07.2010) வெளியிடுகின்றது. இந்நேரத்தில் திரு.பேரின்பநாயகத்தின் கல்லூரிக்கான பங்களிப்பையும், சமூக சேவையினையும் நினைவு கூருவது வரலாற்றுக் கடமையாகும்.

ஹன்டி பேரின்பநாயகம் மானிப்பாயில் புகழ் பெற்ற குடும்பத்தில் ஆசிரியர் சரவணமுத்து தம்பதியினருக்கு மகனாக 1899 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி பிறந்தார். ஆரம்பக் கல்வியை மானிப்பாயிலும், இடைநிலைக் கல்வியையும், பல்கலைக்கழகக் கல்வியின் ஒரு பகுதியையும் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.

1924 ஆம் ஆண்டில் தமது பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட பேரின்பநாயகம் அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையேற்றார். 1933ல் சட்டப் படிப்பை மேற்கொள்வதற்காக கொழும்பு சட்டக் கல்லூரியில் சேர்ந்து அடுத்த ஆண்டு மீண்டும் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகப் பதவியேற்றார். 1944 ஆம் ஆண்டில் வழக்கறிஞராகத் தொழில் புரிவதற்காக ஆசிரியர் பணியிலிருந்து விலகினார். இத்துறையில் நிலைத்து நிற்க முடியாததால் அத்தொழிலுக்கு முழுக்குப் போட்ட ஹன்டி ஈழகேசரி என்னும் பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

### ஹன்டியின் அரசியல் பிரவேசம்

1924 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் முறைப்படி அவரது வழிகாட்டலின் கீழ் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்றிலிருந்து 1934 ஆம் ஆண்டு வரை வடபகுதி அரசியலில், சமூக சீர்திருத்த நடவடிக்கைகளில், இலங்கையர் தேசியத்தை உருவாக்கலில் இந்த அமைப்பு முக்கியமான இடத்தைப் பெற்றுக்கொண்டது. 1934-1938 ஆண்டுக் காலப்பகுதியில் பலமிழந்த நிலையில் காணப்பட்ட இந்த அமைப்பு 1939 -1950கள் வரை மீளவும் குறிப்பிடத்தக்க செல்வாக்கைப் பெற்றுள்ளது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் எழுச்சியோடும், சிங்கள இனவாத சக்திகளின் எழுச்சியோடும், இளைஞர் காங்கிரசின் முற்போக்கு இலட்சியங்கள் பின்னடைவை எதிர்நோக்கின.

1948 ஆம் ஆண்டில் பேரின்பநாயகம் சுதந்திர இலங்கையின் முதலாவது தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டுத் தோல்வி கண்டார். அடுத்த ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபராக விரும்பி வரவேற்கப்பட்டார். 1949 - 1960 வரை அதிபர் பதவியை மிகத் திறம்பட வகித்து அக்கல்லூரியை சகல துறைகளிலும் சிறந்த கல்லூரியாக மாற்றினார். தனது அயரா முயற்சியினால் மூன்று மாடிக் கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுத்து கல்லூரியின் பௌதிக வளத்திற்கு அணி செய்தார். தமது பெறுமதி மிக்க சேவைகளின் பின்னர் 1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் திகதி உலக வாழ்வை நீத்தார்.

### கல்விக் கொள்கை

ச.பேரின்பநாயகம் அவர்கள் இந்து மதத்திலும் தமிழர் பண்பாட்டிலும் மிகுந்த அக்கறை கொண்டவர். எமது பண்பாட்டு விழுமியங்களுடன் நவீன வாழ்வியலுக்கு உகந்ததான கல்வி முறையை ஏற்படுத்துவதற்கு பல திட்டங்களை வகுத்துக் கொண்டார். ஆசிரியர் கூட்டங்களில் தனது கல்வித் திட்டங்களை எடுத்து விளக்கி நடைமுறைப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார். "கல்வியானது மாணவர் மையக் கல்வியாகவும் அத்துடன் தொழிற்கல்வியும் அழகியற் கல்வியும் உள்ளடக்கியதாகவும் இருத்தல் வேண்டும". என்ற அவரது கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்த தொழில்நுட்ப பாடங்களான உலோக வேலை, மரவேலை, மட்பாண்ட வேலை, விவசாயம், தையற்கலை ஆகியவற்றையும், அழகியற் பாடங்களான சித்திரம், சங்கீதம், நடனம் என்பனவற்றையும் உரிய ஆசிரியர்களை நியமித்து நடைமுறைப்படுத்தினார். அதிபர் அவர்களின் கல்விக்கொள்கை 1972களில் ஏற்பட்ட கல்விச் சீர்திருத்தத்தில் அறிமுகம் செய்து கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**து.தர்மானந்தசிவம்**
ஆசிரியர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

ஹன்டி பேரின்பநாயகம் (22 ஆம் பக்கம் பார்க்க)


## நன்றி கலந்த வாழ்த்துக்கள்



யாழ்.மாவட்ட அரச அதிபர் சேவையினை அர்ப்பணிப்புடன் ஆற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் உயர் திரு.கே.கணேஷ் உத்தமரை நவாலி வடக்கு, தேற்றாமரத்தடி ஸ்ரீ ஞானவைரவர் குடிகொண்டிருக்கும் ஆலயத்தில் இரு தடவை நடைபெற்ற கும்பாபிஷேகம், ஒரு தடவை நடைபெற்ற 1008 சங்காபிஷேகம், திருக்குட நன்னீராட்டுத் திருவிழாவை முன்னிட்டு வெளியிட்ட சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்கி, வாழ்பவரை, மேம்பாட்டிற்கு உழைத்த உத்தமரை, நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.
வளர்க வளர்கவே!

**சிவக்கொழுந்து இராஜேஸ்வரன் குடும்பம்,**
**பரம்பரை அறங்காவலர்,**
**நவாலி வடக்கு, தேற்றாமரத்தடி,**
**ஸ்ரீ ஞானவைரவர் கோயில்.**

(100795)



මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

20.07.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2268

வெற்றி எழுத்து: F
வெற்றி எண்கள்: 7 4 7 7 7 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | F | 7 | 4 | 7 | 7 | 7 | 3 | ரூபா.14,252,156/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 7 | 4 | 7 | 7 | 7 | 3 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 4 | 7 | 7 | 7 | 3 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | | | | 7 | 7 | 7 | 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் 123 |
| 4 பரிசுகள் | | | | | 7 | 7 | 3 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1315 |
| 5 பரிசுகள் | | | | | | 7 | 3 | ரூபா. 100/= | பரிசுகள் 13102 |
| 6 பரிசுகள் | | | | | | | 3 | ரூபா. 20/= | பரிசுகள் 128557 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 7 | 4 | 7 | 7 | 7 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 14 |
| 8 பரிசுகள் | | 7 | 4 | 7 | 7 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 127 |
| 9 பரிசுகள் | | 7 | 4 | 7 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1348 |
| 10 பரிசுகள் | | 7 | 4 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12831 |
| 11 பரிசுகள் | F | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 51501 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை **Rs. 13,799,710.00**

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு **Rs. 14,428,587.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


## வவுனியாவில் புலிச் சந்தேச நபர் விடுவிப்பு

வவுனியா இடம்பெயர்ந்தோர் முகாமில் இருந்து கைதுசெய்யப்பட்ட ஒருவரை உயர்நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத நிலையில் செல்வன் அன்டன் ஜூட் என்ற இளைஞரே நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார். அன்டன்ஜூட் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை பிரதம நீதியரசர் தலைமையிலான மூவர் அடங்கிய நீதியரசர் குழு விசாரணை செய்தது.

ஏற்கனவே கைதுசெய்யப்பட்டிருந்த தாம் 1998 ஆம் ஆண்டு குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத நிலையில் விடு விக்கப் பட்டார் என தமது மனுவில் குறிப்பிட்டிருந்த மனுதாரர், 2009 ஆம் ஆண்டு வவுனியா இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து, தான் கைதுசெய்யப்பட்டார் எனத் தெரிவித்திருந்தார்.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம் ,ஜூலை22

மோட்டார் சைக்கிள் விபத்துகளில் சிக்கி இருவர் காயமடைந்தார்கள். நேற்று முன்தினம் இடம் பெற்ற சம்பவங்களில் மீசாலைப் பகுதியில் குரங்கு மோட்டார் சைக்கிள் மீது பாய்ந்ததில் தடுமாறி வீழ்ந்ததில் இதே இடத்தைச் சேர்ந்த கே.பாஸ்கரா ( வயது 25) என்பவரும்,

சங்கத்தானைப் பகுதியில் சைக்கிளும், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இதே இடத்தைச் சேர்ந்த எம். கிருஷ்ண மூர்த்தி (வயது 46) என்ப வரும் காய மடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

(50-207)


உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - (வ-து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் உள்ள கீழ்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகைமை உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*01. பதவி பொதுமுகாமையாளர் - 101 - 05*
*சம்பளத்திட்டம் (66/2006ன்படி) : 12450 - 190 x 10 - 210 x 10 = 16450/=*

**தகைமைகள்:**

1. கூட்டுறவு ஊழியர் 6 ஆம் சம்பளத்திட்டத்தில் அமைந்த பதவியொன்றில் பெற்றுள்ள மூன்றுவருட அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 7 ஆம் சம்பளத் திட்டத்தில் அமைந்த பதவியொன்றில் பெற்றுள்ள ஆறுவருட அனுபவம்.

அல்லது

2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுள்ள பட்டம் அல்லது சமனான தகுதிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டம் பதவியில் பெற்றுள்ள பத்துவருட அனுபவம். இதில் மூன்று வருடங்கள் சிரேஷ்ட முகாமை மட்ட பதவியில் உள்ளதாக இருத்தல் வேண்டும்.

அல்லது

3. கூட்டுறவு ஊழியர் உயர்தரப் பத்திரம் / க.பொ.த. உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில்நிறுவனம் ஒன்றில் முகாமைமட்டப் பதவியொன்றில் பெற்றுள்ள 12 வருட அனுபவம். இதில் மூன்று வருடங்கள் சிரேஷ்ட முகாமைமட்ட பதவியில் உள்ளதாக இருத்தல்வேண்டும்.

01. வயதெல்லை18-45வயதுக்குஉட்பட்டவர்களாகஇருத்தல்வேண்டும்.
02. கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது என்பதுடன் அவர்கள் தமது விண்ணப்பத்தை தாம் பணிபுரியும் சங்கத்தின் ஊடாகவே அனுப்பிவைத்தல் வேண்டும்.
03. கணனித் தகைமை அறிவு அவசியம்.
04. தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் பிணையை செலுத்தத் தயாராக இருத்தல்வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை சங்கத்தில் ரூபா 10 செலுத்திப் பெற்று பூரணமாக்கி சான்றிதழ்களின் நிழல்பிரதியுடன் தலைவர், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் உடுப்பிட்டி என்ற முகவரிக்கு 05.08.2010 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ பதிவுத் தபாலிலோ அனுப்பி உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

விண்ணப்பத்தின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்' எனக் குறிப்பிடவும்.

தலைவர்,
உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்.

19.07.2010 (சி/569377)

# மரண அறிவித்தல்கள்

## பிரம்மஸ்ரீ தியாகராஜக் குருக்கள் செந்தில்நாதசர்மா



காரைநகரைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வாழ்விடமாகவும் கொண்டு தற்போது ஏழாலை மேற்கு, சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ தியாகராஜக் குருக்கள் செந்தில்நாதசர்மா நேற்று (21.07.2010) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் புஸ்பகாந்தி அம்மாவின் அன்புக் கணவரும் அமரத்துவமடைந்த தியாகராஜசர்மா மற்றும் ரவிச்சந்திரக் குருக்கள் (லண்டன்), சுகுமாரக்குருக்கள் ஆகியோரின் அன்புச் தந்தையும் கிரிஜாம்பாள், ஜெயகௌரி, சிவகௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கர்ஷணா, அபிவருஷன், ஸ்ரீஜனனி, மேருஜசர்மா, ஸ்ரீதுர்க்கா, சங்கவி, மதுர்ஷ்வினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஏழாலை மேற்கு, சுன்னாகத்தில் (சைவ சன்மார்க்க வித்தியாசாலை அருகில்) நடைபெறவுள்ளன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.ரவிச்சந்திரக்குருக்கள்
செ.சுகுமாரக்குருக்கள் (மகன்மார்)

*ஏழாலை மேற்கு,*
*சுன்னாகம்.* (100823)

## திருமதி அப்புத்துரை வள்ளி



வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி அப்புத்துரை வள்ளி நேற்று (21.07.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்பு மனைவியும் தர்மலிங்கம், திலகவதி, செல்லம்மா, தவமலர், மங்கையர்க்கரசி, யோகேஸ்வரி, பரஞ்சோதி, சின்னத்தம்பி, புவனேஸ்வரி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகராணி, தெய்வேந்திரம், திரவியம், பற்குணம், இராசகுமாரன், தங்கராசா(சவூதி), கேதீஸ்வரி, இந்திராதேவி, கடாற்சகரன் (பிரான்ஸ்), ஆகியோரின் மாமியும் கௌஜி, இதயகாந், தினேஸ்காந், துளசிகா, ஜார்சிகா, விமலகாந், தர்சிகா, கோகுலவர்மன், ரிலக்சி, றஞ்சினி, பிறின்சி, சஜிநிக்கா, கஜானா, லோஜனா, டதீஸ்காந் (மலேசியா), டினேஸ்காந், தாட்சாயினி, விக்காஸ், ஆக்காஸ், திரிஷா, சாரங்கன், சாதுரியா (பிரான்ஸ்), பாஸ்கரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் கொற்புலவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வெள்ளாம்போக்கட்டி,*
*கொடிகாமம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

# நவாலி வடக்குக்கு முதியோர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வலி.தென்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நவாலி வடக்குப் பகுதிக்கு முதியோர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு இடம் பெறும்.

பிரதம அதிதியாக வலி.தென்மேற்குப் பிரதேச செயலக சமுக சேவை அதிகாரி வே அருந்தவராசாவும், சிறப்பு விருந்தினராக நவாலி வடக்கு கிராம அலுவலர் அ.தனபாலரத்தினமும் கலந்து கொள்வர்.

இன்று புதிய நிர்வாகிகள் தெரிவு இடம் பெறவுள்ளதால் அனைத்து முதியவர்களையும் நவாலி வடக்கு புலவர் முகாம் மண்டபத்திற்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-302)

# போதையில் மோ.சைக்கிள் செலுத்திய நபருக்கு ரூ.6,500 அபராதம்

தென்மராட்சி, ஜூலை 22

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபர் ஒருவருக்கு சாவகச்சேரி நீதிவான் 6 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார்.

சாவகச்வேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழங்கை விசாரித்த நீதிவான் சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை, மதுபோதையில் வாகனம் செலுத்தியமை ஆகிய குற்றங்களுக்காக 6 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததுடன் அபராதத் தொகையை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

(ஒ-207)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூர், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை நேற்று (21.07.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கிருஸ்ணாநந்தமூர்த்தி(முன்னாள் வர்த்தக சங்கத் தலைவர் - தர்சினி ஸ்ரோர்ஸ்), யோகராஜா (பலசரக்குக் கடை), இரத்தினராஜா(ஜேர்மனி), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சூரியகுமாரி, சிவஞானதேவி, விமலாதேவி, கனகபூரணம்(அமரர்), சரோஜினிதேவி (அமரர்), நல்லையா(டோகா), தெய்வேந்திரம்(பூரணம் மில்) அமரர் இராஜரட்ணம்(பிள்ளையார் லேனர்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மா.தம்பு, செல்லையா, மா.செல்லத்துரை, மா.தங்கராசா, மா.இராஜதுரை, திருமதி வேலுப்பிள்ளை தங்கரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் நந்தகுமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், Forut), கோமதி, தச்சினிக்குமார், ஜெகதீஸ்வரி, இராஜ்குமார்(டோகா), சர்மிளா, விஜயகுமார், தர்சினி, கஜீவ்குமார்(தொழில்நுட்ப உத்தியோகத்தர்) துஷிகன், மிதுயா, பிரகாஷ், பிரஷா(ஜேர்மனி), பவிதா, இந்துஷா, சனோஜா ஆகியோரின் பேரனும் துஷ்யந்தன், வேணுஷன், கரிஷன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2010) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்:
கிருஷ்ணாநந்தமூர்த்தி(தர்சினி ஸ்ரோர்ஸ்),
யோகராசா(பலசரக்குக்கடை),
இரத்தினராஜா(ஜேர்மனி).

(100822)

# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் கணேசலிங்கம்
## (எரிக்கணேஸ்)

(உரிமையாளர், எரிக்கணேஸ் பல், மூக்குக் கண்ணாடி அகம்)

பொன்னையா லேன், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கணேசலிங்கம் நேற்று (21.07.2010) புதன்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் சித்திராங்கதேவியின் அன்புக் கணவரும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி உயர்தர மாணவிகளான பிரியங்கா, யுரேக்கா, யாழ். இந்துக் கல்லூரி மாணவன் துவாரகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னையா லேன்,*
*ஆனைக்கோட்டை.* (சி/569384)

தகவல்:
குடும்பத்தினர்.
T.P.: 0212222486

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியினில்
05 ★ 04 ★ 1941



ஆண்டவன் அடியினில்
22 ★ 06 ★ 2010

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்
7ஆம் வட்டாரம், ஊரதீவை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் நல்லம்மா சுப்பிரமணியம்

(கண்ணையா)

அன்பின் இருப்பிடமாய்
அறிவின் பெரும் சுடராய்
களங்கமற்ற அன்பால்
கருணை உள்ளம் கொண்ட அம்மாவே
ஆறாது நம் துயரம்
அன்புடன் எமை வளர்த்து
பாரினில் உயரத் தவமிட்டாய்
எத்தனை எண்ணங்கள் கனவுகள்
கனவிலும் நினைவிலும் எம் எண்ணமே
அம்மா தன்னலமற்ற ஆசியால்
அவை நிறைவடைந்ததம்மா
அம்மா நீங்கள் எம் இதயத்தில் நிலைத்து நிற்கின்றீர்கள்
அம்மா உம் நினைவை மறக்கமுடியவில்லை
முத்தான உங்கள் நினைவுகள் நித்தமும்
எம் நெஞ்சில் நிழலாய்த் தொடரும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நி.மு.: *7ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.*

த.மு. *131/1 A, பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
தொ.பே. 0776209960

பிரிவால் துயருறும்
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(100821)


## முத்திரை வெளியீடு....

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாய் மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்த அதே வேளையில் ஒன்றுபட்ட இலங்கையில் சிங்களா, தமிழ் மக்கள் இணைந்து வாழ்தல் என்ற இன ஐக்கியக் கொள்கையும் கொண்டவராக விளங்கினார். சிங்களவர் தமிழ் மொழியையும், தமிழர் சிங்கள மொழியையும் கற்றல் வேண்டும் என்ற இன சமத்துவக் கோட்பாடுகளையும் செயற்படுத்த விரும்பினார். அவருக்கு அன்றைய அரசியல் தலைவர்கள் பலர் நட்புடையவர்களாகவும் விளங்கினர். கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல் நிகழ்வுகள், உயர்தர மாணவர்கள் இரவு ஒன்றுகூடல் நிகழ்வுகள் என்பவற்றுக்குச் சிங்களத் தலைவர்களை அழைத்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். எதிர்கால ஆசிரியர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார். இத்தகைய பண பாளரின் சேவையைப் பாராட்டி கொக்குவில் இந்து கல்லூரி தனது மூன்று மாடிக் கட்டடத்துக்கு ஹண்டி பேரின்பநாயகத்தின் பெயரைச் சூட்டி அவரைக் கௌரவித்துள்ளதுடன், அவரது ஞாபகார்த்தமாக அரசாங்க அனுசரணையுடன் அவரது படம் பொறித்த முத்திரையையும், முதன் நாள் தபால் உறையையும் வெளியிட்டு கௌரவப்படுத்தியுள்ளமை ஆசிரியர் சமூகத்திற்கும், அதிபர் சமூகத்திற்கும், பாடசாலைக்கும் கிடைத்த கௌரவமாகும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 22 |
| ★ | ★ |
| 02 | 06 |
| ★ | ★ |
| 1931 | 2010 |



வேலணை, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரம், இல.309 இல் வசித்தவரும் தற்போது இந்தியாவில் வசித்தவருமான

அமரர்

### சிவசிதம்பரம் குலசேகரம்பிள்ளை

கடந்த 22.06.2010 இயற்கை மரணமடைந்த எமது அன்பு அப்பாவின் மரணச் செய்தி கேள்வியுற்று தாய் நாட்டில் இருந்தும், புலம்பெயர் நாட்டிலிருந்தும் ஆறுதல் கூறியவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (22.07.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இந்தியாவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:

பிரான்ஸ். (100868) எஸ்.கே.பாரா (மகன்).


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1209

மீனம் 01 03 15 45 20-07-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 6,814,950/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 220,194 | 20/- | 4,403,880/- |
| 2 இலக்கங்கள் | 20,193 | 40/- | 807,720/- |
| 1 இல. + லக்கினம் | 20,047 | 60/- | 1,202,820/- |
| 2 இல. + லக்கினம் | 1,873 | 200/- | 374,600/- |
| 3 இலக்கங்கள் | 547 | 1000/- | 547,000/- |
| 3 இல. + லக்கினம் | 52 | 10,000/- | 520,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 6,814,950/- | |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,456,020/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 588 | | 592,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 263,497 | | 9,048,520/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 7,306,825/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

04 23 38 53 ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 2 இலக்கங்கள் | 585 | 500/- | 292,500/- |
| 3 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 3 இல. + லக்கினம் | - | 300,000/- | |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 588 | | 592,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.400,000/-


## தவறிவிட்டது

இல.22, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வராஜா ஜயந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (742421465 V) மாநகரசபை எல்லைக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும். தொடர்பு : 071 8349728

## வாடகைக்கு

கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும் 125 அடி நீளம், 25 அடி அகலம் கொண்ட கடை வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு : 077 4404231, 077 4685157

## தவறிவிட்டது

வரப்பிரகாசம் ஆரோக்கியநாதர் என்பவரின் செட்டியார் தோட்டம், நாயாறு, முல்லைத்தீவு எனக் குறிப்பிட்ட உறுதி மற்றும் bag உடன் 20.07.2010 அன்று குருநகர் புனித யாகப்பர் ஆலய பஸ்தரிப்பிடத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 6108665, 0776365733 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## வீடு, காணி விற்பனை

கொக்குவில், பிரம்படி லேனில் யாழ். மாநகர எல்லையில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம் என்பவற்றுக்கு மிக அண்மையில் 7 அறைகளுடன் சகல வசதிகளுமுடைய வீடு விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 5504608, 077 6569652

## வீடு வாடகைக்கு உண்டு

நல்லூரில் இருந்து 2 1/2 Km தூரத்தில் 3 அறைகளுடன் கூடிய வீடு நிறுவனங்களுக்கு/ தனியாருக்கு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 2454575

## விற்பனை ஆள் தேவை

வாகன உதிரிப்பாக விற்பனைக் கடைக்கு உதிரிப்பாக விற்பனையில் அனுபவம் உள்ள (ஆங்கில அறிவும்) ஒருவர் வடமராட்சிப் பகுதிக்கு தேவை. உடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:

விளம்பர இல. 4046

மே.பா. உதயன்

## விற்பனைக்கு

அரிந்த கல், பாலியாற்று மணல், கருங்கல் சல்லி (சகல அளவுகளிலும்), அத்திபாரக் கல், உள்ளூர் சல்லி அனைத்தும் விற்பனைக்குண்டு. எங்கள் வாகனங்களில் உங்கள் இல்லம் நாடி வந்து தரப்படும்.

**பிள்ளையார் ரான்ஸ்போட்**

தொடர்பு: 077 3588212

## பொறியியல் உயர்தேசிய டிப்ளோமா பாடநெறி

யாழ்ப்பாணம், ஜூலை22

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவன பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDE) பாடநெறிக்கான மாணவர் அனுமதிக்கு (கல்வியாண்டு - 2010/2011) விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இக்கற்கை நெறி குடிசார் (சிவில்) பொறியியல், மின் பொறியியல், இயந்திரப் பொறியியல் ஆகிய மூன்று விசேட துறைகளை இப்பாடநெறி உள்ளடக்கியதாகும்.

யாழ்ப்பாண மாணவர்களின் நன்மை கருதி யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இல.625/2, பீச் றோட், குருநகரில் அமைந்துள்ள யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க அலுவலகத்தில் இக்கற்கை நெறிக்கான விண்ணப்பம் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது.

மேலதிக விவரங்களை பழைய மாணவர் சங்க இணையத்தளமான www.jatialumni.org இலும் நிறுவன விளம்பரப் பலகையிலும் பார்வையிடலாம் என யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க செயலாளர் வி.தயாபரன் அறியத்தந்துள்ளார். (ஓ)

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### வெற்றுப் பொருள்களுக்கான கூறுவிலை கோரல்

| வெற்றுப் பொருள்கள் | எண்ணிக்கை |
|---|---|
| மா பை | 7000 |
| அரிசிபை | 20000 |
| சீனி பை | 7850 |
| 25 கிலோ பை | 3650 |
| சாக்கு | 43 |

மேற்படி கூறுவிலைகள் மீளளிக்கக் கூடிய வைப்பாக ரூபா 1000 ம், மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா.100 ம் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது கூறுவிலைகளை அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் 2010.07.27 ஆம் திகதிக்கு முன்னதாக, தலைவர், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இல.127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுப் பொருள்களுக்கான கூறுவிலை கோரல்" என எழுதப்பட்டு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

*க.தேவேந்திரன்*

*யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். (வ-து)*

*2010.07.21*

## முதலாம் மாத நினைவலைகள்

அமரர்

### கந்தன் செல்லையா



திதி: பூர்வபக்க ஏகாதசி (22.07.2010)

மலர்வு 10.07.1940 — உதிர்வு 22.06.2010

மண்ணை விட்டு மறைந்து
மாதம் ஒன்று ஆனதையா! - எம்
கண்முன் இல்லையே என
கலங்குகின்றோம் உமை நினைத்து.....

எங்கள் குடும்பத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம் இங்ஙனம்...

ஓம் சாந்தி!

செல்வா வீதி, கைதடி வடக்கு, கைதடி. (100798)

என்றும் உங்கள் நினைவுகளுடன், மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### இராசதுரை (பத்தர்) இராசரத்தினம்மா



வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை இராசரத்தினம்மா நேற்று (21.07.2010) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - கண்ணம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - கனகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராசதுரை பத்தரின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, கணேசராசா (மயூராஜினி யுவல் கவுஸ்), தவராசா (காமாட்சி அம்பாள் நகை மாடம், Lanka Cement VMS), ஜெயராசா ஆகியோரின் அன்புத் தாயும், வரதராஜா, ரவீந்திரன் (அனித்தா மோட்டர் வேர்க் - நெடுங்கேணி), காலஞ்சென்ற நவராணி (பொன்னுமணி) மற்றும் தயாநிதி, குமுதினி ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், பாலாம்பிகை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2010) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

52/20, சபாபதி லேன்,
தலையாழி, கொக்குவில்.
தொ.பே.: 077 5086330, 077 9592845 (100796)

தகவல்: குடும்பத்தினர்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அமரர்

### ஆறுமுகம் சுப்பிரமணியம்

தோற்றம் 1933.01.02

மறைவு 2010.06.22

2010.06.22 ஆம் திகதி இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (2010.07.22) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலையில் நடைபெறும். அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளிலும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விரகத்திப் பிள்ளையார் கோயிலடி,
இடைக்காடு மேற்கு,
உடுப்பிட்டி. (96217)

குடும்பத்தினர்.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலை நிர்வாகம் திறம்பட இயங்குவதற்கு உதவுங்கள்

## விரிவுரையாளர்கள், மாணவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 22

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அலுவலகக் கதவு மூன்று மாத காலமாகப் பூட்டப்பட்ட நிலையிலே உள்ளது. இதனால் கலாசாலையின் நிர்வாகம் திரிசங்கு நிலையில் உள்ளது. முன்னாள் அதிபரிடம் இருந்து திறப்பைப் பெற்றுத் திறந்து கல்விச் செயற்பாடுகள் திறம்பட இயங்குவதற்கு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபர் செல்வி மலர் சின்னையா புதிய அதிபரிடம் நிர்வாக விடயங்களைக் கையளிக்காது, அலுவலகத்தைப் பூட்டி வைத்து விட்டு மூன்று மாதங்களாக திறப்பைக் கையளிக்காமை-

அதனால் கலாசாலையின் நிர்வாகச் செயற்பாடுகள் முடங்கியுள்ளமை தொடர்பாக எடுத்துக் கூறும் வகையில் செய்தியாளர் மாநாடொன்றை விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் நேற்று நடத்தினர்.

அந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது கலாசாலையில் முன்னர் அதிபராக இருந்த செல்வி மலர் சின்னையா அந்தப் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டு



கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் விரிவுரையாளர், மாணவர்களுடன் கலந்துரையாடும் போது.....

மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் அவர் இதுவரை புதிய அதிபரிடம் நிர்வாகப் பொறுப்புகளையும், அலுவலகத் திறப்புகளையும் கையளிக்கவில்லை.

இதனால் நிர்வாகச் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளன. அத்துடன் போட்டோ பிரதி இயந்திரம், கணனி இயந்திரங்கள் மற்றும் ஆசிரிய மாணவர்களின் கோவைகள், நிர்வாகச் செயற்பாட்டுக்கான பதிவுகள் மற்றும் உபகரணங்கள் அந்த அலுவலகத்தினுள் முடங்கியுள்ளன.

ஆசிரிய மாணவர்கள் தமது கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது விடயம் தொடர்பான பிரச்சினைகளை கல்வியமைச்சிடமும் மற்றும் உயர்கல்வி அமைச்சு அதிகாரிகளிடமும் தெரியப்படுத்தியுள்ளோம்.

இருப்பினும் இந்தப் பிரச்சினைக்கு சாதகமான எந்த முடிவுகளும் எமக்குக் கிடைக்கவில்லை.

அலுவலகத்தை கடந்த மூன்று மாத காலமாக பூட்டி வைத்துவிட்டு அதன் திறப்பை உரிய முறையில் ஒப்படைக்காமல் முன்னாள் அதிபர் தன்னிச்சையாக மௌனமாக உள்ளார்.

தற்போதைய அதிபர் வி.கே.கணபதிப்பிள்ளையின் முயற்சியால் ஆசிரிய மாணவர்களது கற்றல் செயற்பாடுகள் மட்டும் ஓரளவு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

எனினும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மீண்டும் திறம்பட செயற்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.- என்றனர். (ஒ-9)

## வன்னிச் சிறார்களுக்கு உடைகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா மாணவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்கினார்.

இடைக்காடு மகாவித்தியாலய ஜி.சீ.ஈ. உயர்தர மாணவன் செல்வன் ரவீந்திரன் தேனுஜனுக்கு சாரதாதேவி பலமைப் பரிசிலும், வன்னியில் உள்ள இளம் சிறார்களுக்கு அமெரிக்காவில் இருந்து ஓர் அன்பர் வழங்கிய ஆடைகளையும் சுவாமி சித்ரூபானந்தா வழங்கினார். (ஒ-323)

## டெங்கு எதிர்ப்பு கிருமிகள்

## 2 வாரத்திற்குள் பகிர்ந்தளிப்பு

கொழும்பு, ஜூலை 22

கியூபா நாட்டிலிருந்து முதற்கட்டமாக இறக்குமதி செய்யப்படவிருக்கும் டெங்கு எதிர்ப்புக் கிருமிகளுக்காக இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்கள் செலுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக 10,000 அலகு டெங்கு எதிர்ப்புக் கிருமிகள் இறக்குமதி செய்யப்படும். இன்னும் இரு வாரங்களுக்குள் வந்து சேரும் இவை அமைச்சினால் பகிர்ந்தளிக்கப்படவிருக்கின்றன.

இது முற்றுமுழுதாக ஒரு பரீட்சார்த்த முயற்சி என்றும் இதன் வெற்றியைப் பொறுத்தே எதிர்கால நடவடிக்கைகள் அமையும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க)



*அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான இராஜாங்கச் செயலாளர் ரொபர்ட் ஓ பிளேக் நேற்றுக்காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்தார். இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் பட்ரீஷியா புட்டேனிஸூம் படத்தில் காணப்படுகிறார்.*

# தச்சன்தோப்பில் தூக்கில் தொங்கிய பெண்ணின் மரணத்தில் சந்தேகம்

## சடலத்தை அடக்கம் செய்யுமாறு நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 22

கைதடி, தச்சன்தோப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட பரமேஸ்வரன் ஞானேஸ்வரி என்பவரின் மரணம் தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் தொடர்பாக சாவகச்சேரி பதில் நீதிவான் எஸ்.கணபதிப்பிள்ளை விசாரணை நடத்தினார்.

மரணத்தில் மர்மம் இருப்பதாகச் சந்தேகிக்கிறோம். அவரது கணவருக்கும் அவருக்கும் இடையில் அடிக்கடி சச்சரவு இடம்பெறுவது வழக்கம். சம்பவதினம் சச்சரவு உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. அதன் எதிரொலியாக கொலை இடம்பெற்றுள்ளது என்று மரணமானவரின் மைத்துனர் நீதிவானிடம் தெரிவித்தார்.

சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை கிடைத்தபின் தீர்ப்பு வழங்குவதாகத் தெரிவித்த நீதிவான், சடலத்தைப் புதைக்குமாறு உத்தவிட்டார். (ஒ-1)

# பல்கலை. கல்விசார் ஊழியர்களின் சம்பளம் கணிசமாக உயர்த்தப்படும்

## நாடாளுமன்றில் உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

பல்கலைக்கழக கல்விசார் பணியாளர்களுக்கு கணிசமான அளவு சம்பள உயர்வு வழங்குவதற்கான திட்டங்களை அரசு உருவாக்கியுள்ளது என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் பிரகாரம் கனிஷ்டதர விரிவுரையாளர்களின் சம்பளம் ரூ.70,750 இல் இருந்து ரூ. 72, 000வரை அதிகரிக் கப்படவிருக்கின்றது என்று அமைச்சர் கூறினார்.

சிரேஷ்ட பேராசிரியர்களின் சம்பளமாக ரூ. 57, 750 இல் இருந்து ரூ. 200, 000 வரை உயர்த்தப்படலாம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸ்ஸநாயக்க எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்ட தகவல்களைத் வெளியிட்டார்.

நமது விரிவுரையாளர்களுக்கு வேறு நாடுகளில் அதிக வாய்ப்புகள் இருந்த போதும் அவர்கள் குறைந்த வருமானத்தில் இங்கு பணியாற்றுகின்றார்கள். எனவே அவர்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டியது அவசியம் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ப)

## பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 22

ஜி.சீ.ஈ. சாதாரணதர, உயர்தர பாடசாலை அதிபர்களுக்கான பாடசாலை மட்ட செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் அதிபர்கள்ளைக் கலந்துகொள்ளுமாறும், அதன்போது கணனிப் படிவங்களும், புள்ளிவிவரமும் வழங்கப்படும் எனவும் யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (50-17)

## நுணாவில் கள்ளுத் தவறணைக்கு 'சீல்'; முகாமையாளர் கைதாகி விளக்கமறியலில்

தென்மராட்சி, ஜூலை 22

நச்சுத் தன்மை கலந்து இருந்ததாகக் கூறப்படும் கள் விற்பனை செய்த சாவகச்சேரி நுணாவில் கிழக்கு தவறணை, பொலிஸாரால் 'சீல்' வைக்கப்பட்டதுடன் அதன் முகாமையாளரும் கைது செய்யப்பட்டார்.

பிரஸ்தாப முகாமையாளர் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார். அவரை ஓகஸ்ட் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை உத்தரவிட்டார்.

சந்தேக நபரை பிணையில் விடக் கோரி சட்டத்தரணி ச.சிவரூபன் சமர்ப்பித்த மனுவைப் பரிசீலித்த நீதிவான், கள் அருந்தியதால் ஒருவர் மரணமானதுடன் மேலும் எட்டுப் பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதால்-

பிணை மனுவை ஏற்றுக் கொள்ள முடியாது என அறிவித்து அதனை நிராகரித்தார். (ஒ-207)

## இலங்கை அரசுக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டு:

# சாட்சிகளின் பாதுகாப்புக் கருதி சர்வதேச மட்டத்தில் விசாரணை

## உலகத் தமிழர் பேரவை கோருகிறது

இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்ற ஆதாரங்களையும், சாட்சிகளையும் பாதுகாக்க சர்வதேச மட்டத்தில் செயல் திட்ட முறைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழர் பேரவை கோரி உள்ளது.

அரச படையினர் - தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்று முடிந்த யுத்தத்தில் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள், சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் ஆகியன மீறப்பட்டமை தொடர்பாக ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ - மூனுக்கு ஆலோசனை கூற நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளமையை வரவேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே பேரவை இக்கோரிக்கையை முன்வைத்துள்ளது.

அந்த அறிக்கையில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்த நிபுணர் குழுவின் நியமனம் அங்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் தரப்பினர்கள் அனைவருக்கும் குறிப்பாகத் தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான முதற்படியாக அமையும் என்று நம்புகிறோம்.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான இந்த முதற்கட்ட நடவடிக்கையின் முன்னெடுப்புகளில் ஐ.நா சபை, சர்வதேச சமூகம் ஆகியன தமிழ்த் தலைவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போதே பாதிக்கப்பட்ட தரப்பினரின் நலன்களைப் பேண முடியும். இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்ற ஆதாரங்களையும், சாட்சிகளையும் பாதுகாக்க செயல்திட்ட முறைமை ஒன்றை சர்வதேச சமூகம் உருவாக்க வேண்டும். ஆயிரக் கணக்கான தமிழர்கள் இந்த யுத்தக் குற்றங்களுக்கு சாட்சிகளாக உள்ளனர்.

ஆனால் அவற்றை வெளிப்படுத்துகின்ற பட்சத்தில் இதே யுத்தக் குற்றங்களைப் புரிந்திருக்கும் இராணுவத்தினரால் தாம் கொல்லப்படலாம் என்று அஞ்சுகின்றனர். எனவே அவர்கள் அச்சமற்ற வகையில் யுத்தக் குற்றச் சாட்சியங்களை முன் வைக்கின்றமைக்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண் டும்.

இல்லையெனில், அவர்கள் சாட்சியம் கூற ஒரு போதும் முன் வரவே மாட்டார்கள். தமிழ் மக்கள் மட்டுமல்ல, தமிழ்த் தலைவர்கள் கூட இலங்கையில் தமது கருத்துகளை சுதந்திரமாக வெளிப் படுத்த முடியாத அடக்குமுறைச் சூழ்நிலையே காணப்படுகி றது.

நிபுணர் குழு இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு செயற்பட்டு சர்வதேச மட்டத்தில் யுத்தக் குற்றப் புலனாய்வு விசாரணை நடைபெற வேண்டும் என்று சிபார்சு செய்யவேண்டும்.

அந்தப் புலனாய்வு விசாரணை பாதிக்கப்பட்ட தரப்பினரான தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும். அப்போது தான் நாட்டில் தேசிய நல்லிணக்கத்தையும், உண்மையான சமாதானத்தையும் நிலைநாட்டுவது சாத்தியமாகும் - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

# பொன்சேகாவின் சிறப்புரிமையை உறுதிப்படுத்த நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜூலை 22

நாடாளுமன்ற அமர்வுகள் மற்றும் ஆலோசனைக் கூட்டங்கள் போன்றவற்றில் கலந்துகொள்வதற்கு ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு உள்ள சிறப்புரிமைகளை உறுதிப்படுத்துமாறு கொழும்பு புறக்கோட்டை நீதிவான் நீதிமன்றம், சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு நேற்று உத்தரவிட்டது.

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் நீதிவான் எழுத்துமூலம் இந்த உத்தரவை சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு அனுப்பிவைத்தார்.

சரத் பொன்சேகா நேற்று முன்தினம் இந்தப் பிரச்சினையை நாடாளுமன்றில் கிளப்பினார். 16ஆம் திகதி நாடாளுமன்றில் இடம்பெற்ற அமைச்சுகளின் ஆலோசனைக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்குத் தயாரானபோது தான் படையினரால் தடுக்கப்பட்டார் என்று பொன்சேகா சபாநாயகரிடம் முறையிட்டார்.

சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பி உரையாற்றிய பென்சேகா, நாடாளுமன்றத்துக்குத் தன்னை அழைத்துவர சிறைச்சாலை ஊழியர்கள் தயாரானபோதும் இராணுவத் தளபதி அதற்கு அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவித்து படையினர் தன்னை நாடாளுமன்றம் வரவிடாமல் தடுத்தனர் என்று கூறினார்.

இது தொடர்பாக இராணுவத் தளபதியை நாடாளுமன்றத்துக்கு அழைத்து சிறப்புரிமைக் குழு விசாரணை நடத்தவேண்டும் என்று பொன்சேகா சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்தே கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் மேற்படி உத்தரவை நேற்று சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு விடுத்தது. (அ-சி)

## போரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனோஜா வீரசிங்க இவர்களுக்கு நடனப் பயிற்சியளித்து வருகிறார். நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனும் கிரிக்கெட் பயிற்சி அளிக்க முன்வந்துள்ளார்.

சரணடைந்த புலிப்போராளிகளில் 2,000 பெண்களும் அடங்குவர். இவர்களில் 600 பேருக்குத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு ஆடைத் தொழிற்சாலைகளில் தொழில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டவர்களில் 364 பேர் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற உள்ளனர். கொழும்பில் உள்ள பிரபல ஆசிரியர்கள் இவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகளை நடத்துகின்றனர். பரீட்சைக்குப் பின்னர் இம்மாணவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவர். - இவ்வாறு அவர் சொன்னார். (அ-சி)

## தர்சிகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கு ஊற்றல் மயானத் துக்கு பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

அதேவேளை -

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்றும் மரண விசாரணை இடம்பெற்றது. பலரின் வாக்குமூலங்கள் நேற்றுப் பதிவு செய்யப்பட்டன.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கைதடி தெற்கில் உள்ள தர்சிகாவின் வீட்டுக்குச் சென்று துக்கம் விசாரித்தார்.

இந்த மரணம் தொடர்பாக நீதியான விசாரணை இடம்பெறவேண்டும் என்றும், நஷ்டஈடு பெற்றுத் தரவேண் டும் என்றும் தர்சிகாவின் உறவினர்கள் கோரினர்.

ஜனாதிபதியுடன் கலந்துரையாடி இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார். (ஒ-1-288)

## யுத்தத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்ட செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அமைச்சர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

எமது நடமாடும் சேவைகளுக்கு 8ஆயிரத்துக்கு மேற்பட்ட விதவைகள் உதவி கோரி வந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் இளம் விதவைகள். இளம் பெண்களைப் புலிகள் போராட்டத்தில் இணைத்துக் கொள்வார்கள் என்ற அச்சத்தில் பெற்றோர் சிறு வயதிலேயே இவர்களுக்குத் திருமணம் செய்து வைத்துள்ளனர். 21 - 22 வயது இளம் விதவைகள் இரண்டு மூன்று குழந்தைகளுடன் அநாதரவாக உள்ளனர். இது மாபெரும் சமூகப் பிரச்சினையாகும். புலிகளின் தலைவர்களான பாலகுமார், யோகி ஆகியோரின் மனைவிமாரும் எம்மிடம் உதவி கோரி வந்தனர். இந்த விதவைகள் அனைவரும் சமூகத்தின் அடிமட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களுக்குத் தொழில் பயிற்சி வழங்கி வருமானம் ஈட்டிக்கொள்ள வழி செய்யப் படும். - இவ்வாறு அவர் தெரிவித்தார். (அ-சி)

# சட்டவிரோதமாக ஆள்களை அனுப்புவோர் மீது கடும் நடவடிக்கை என்கிறது கனேடிய அரசு

கொழும்பு, ஜூலை 22

சட்டவிரோதமான முறையில் கனடாவுக்கு ஆட்களை அனுப்புவோருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கனடா அறிவித்துள்ளது.

இலங்கையர்கள் 219 பேரைக் கொண்ட கப்பல் ஒன்று கனடா நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது என வெளியான தகவல்களை அடுத்து கனடா அரசு இந்த எச்சரிக்கையை விடுத் துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் அடங்கிய கப்பலொன்றே கனடாவுக்குள் பிரவேசிக்கும் நோக்கில் பயணத்தை ஆரம்பித்துள்ளது என்று அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மெலிஸா லான்ட்ஸ்மான் தகவல் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த சட்டவிரோதக் குடியேறிகள் கும்பலில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருந்தால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை எனக் கனேடிய பாதுகாப்பு ஆய்வாளர் ஜூனியா கட்சொயு தெரிவித்துள்ளார். (இ-10)

## பிச்சையெடுத்த குற்றத்திற்காக ஐவருக்கு தலா 10 ரூபா அபராதம்

கொழும்பு, ஜூலை 22

பொது இடங்களில் பிச்சையெடுத்த குற்றத்திற்காக ஐந்து பிச்சைக்காரர் களுக்கு கொழும்பு கோட்டை நீதவான் தலா பத்து ரூபா அபராதம் விதித்தார்.

கொழும்பு லேக்ஹவுஸ் அருகில் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தபோது இந்த ஐந்து பிச்சைக்காரர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். முதன் முறையாக சகல குற்றங்களையும் ஏற்றுக் கொண்ட இவர்களுக்கு கோட்டை நீதி வான் தலா பத்து ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

## மாத்தறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றை இந்த சிப்பாய் மாத்தறைப் பகுதியில் ஒரு பைக்கற் 100 ரூபா வீதம் கொள்வனவு செய்ததாக பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (சி)

## போர்க் குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோற்கடிக்கப்பட்டதை அமெரிக்கா வரவேற்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றிகள் இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அரிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளன.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது சமாதானத்தின் முக்கிய சக்தியாக விளங்கும்.

கடந்த இரண்டு வருடங்களில் நாம் இலங்கைக்கு 14 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளோம்.

நல்லிணக்கத்தின் அடுத்த பகுதி, தவறுகள் சீர்செய்யப்படுவதற்கான பொறுப்பை உறுதிப்படுத்தும் வாக்குறுதிகளைக் கொண்டிருக்கும். இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு அவற்றை நிறைவேற்றுமென நம்புகிறோம்.

மாகாணங்களிடையே அதிகாரங்களைப் பகிரும் நடவடிக்கை, அரசமைப்பின் 17 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தல், அதனூடாக மனித உரிமைகள், பொலிஸ் மற்றும் லஞ்ச - ஊழல் ஆணைக்குழுக்களை நிறுவுதல், ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல் போன்றவை இலங்கையர்களுக்கான சமாதானம் மற்றும் நம்பிக்கை போன்றவற்றை உறுதிப்படுத்த முக்கிய பங்காற்றும்.

பான்கீ - மூன் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமித்துள்ள நிபுணர்கள் குழுவை இலங்கை சாதகமாகப் பயன்படுத்த முடியும். ஐ.நாவுக்கு இது தொடர்பில் நீண்ட அனுபவம் உண்டு. இவ்வாறான பல குழுக்களை ஐ.நா. நியமித்துச் செயற்பட்டிருக்கின்றது.

ஊடக சுதந்திரம், மனித உரிமை மீறல்கள் மற்றும் இறுதிப்போரில் நடைபெற்றவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கைக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்துள்ளது.

இலங்கை அரசு, தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்தியங்கி அந்தக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளும் அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும்.

அகதிகளை மீள்குடியமர்த்தும் விடயத்தில் இலங்கை அரசு துரிதமாகச் செயற்பட்டிருக்கின்றது. இது விடயத்தில் எம்மால் மகிழ்ச்சியடைய முடியும். இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதைப் பற்றி அமெரிக்காவிற்குக் கவலையில்லை.

என்று அவர் கூறினார். (அ-சி)

## டெங்கு ஒழிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதம் டெங்கு நோய்க்கான காரணம் என ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

அத்துடன் ஒகஸ்ட் மாதத்தில் முதலாம், இரண்டாம் திங்கட்கிழமைகளிலும், மூன் றாம் நான்காம் சனிக்கிழமைகளிலும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடைபெறும்.

இவ்வருடம் 158 பேர் டெங்குநோய்க் குப் பலியாகியுள்ளனர். இதுவரையில் 21ஆயி ரம் டெங்குநோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)


Rotaract Club of Jaffna

யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகத்தினரால் நடத்தப்படும் க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான முற்றிலும் எதிர்பார்க்கை பரீட்சை வழிகாட்டலும்

மாபெரும் இலவசக் கருத்தரங்கும்

A/L 2010

இடம்: புதிய உயர் கல்லூரி மண்டபம் (ஆரியகுளம்)

வர்த்தகப்பிரிவு

| வணிகக்கல்வி: | பொருளியல்: | கணக்கீடு: |
|---|---|---|
| திரு.P.S.பஸில் (DMI)<br>23.07.2010, 26.07.2010<br>காலை 9மணி | திரு.S.S.சிறி (DMI)<br>27.07.2010<br>K.உதயன் {B.BA (Spl)}, {B.A (Econ)} கொழும்பு<br>28.07.2010 காலை 9மணி | திரு.D.Sam (DMI)<br>29.07.2010<br>30.07.2010<br>காலை 9மணி |

கீழ்வரும் பாடங்களின் கருத்தரங்குகள் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

| புவியியல்: | இணைந்த கணிதம்: | அரசறிவியல்: |
|---|---|---|
| திரு.பாபு<br>23.07.2010<br>காலை 9 மணி | திரு.S.சிவகுமார் (BSc.Dip.Ed) (கொழும்பு)<br>25.07.2010 காலை 9 மணி | திரு.V.K.செல்வா (கொழும்பு)<br>24.07.2010<br>காலை 9 மணி |

பிரதான அனுசரணையாளர்கள்

கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தின் ஓர் கல்விச் சாம்ராஜ்யம் IIS CITY CAMPUS

NSB National Savings Bank Hospital Road, Jaffna.


## மரண அறிவித்தல்

### வரதராசா துரைராசா

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வரதராசா துரைராசா நேற்று (21.07.2010) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வரதராசா (இளைப்பாறிய ஆசிரியர்) - சிவக்கொழுந்து தம்பதியரின் இளைய மகனும் அமரர் சத்தியமூர்த்தி - அம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணிதேவியின் (அரசினர் வைத்தியசாலை - பண்டத்தரிப்பு) அன்புக் கணவரும் சிவராசா (அவுஸ்திரேலியா), சுசீலா, கோகிலா (ஜேர்மனி), தேவகி (கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகுணவல்லி (அவுஸ்திரேலியா), காலகாலன் (வவுனியா), அசோக்குமார், அமரர் கருணாநந்தன் (மூளாய்) மற்றும் சாரதாமணிதேவி (கனடா), ருக்குமணிதேவி, நடராசமூர்த்தி (பிரான்ஸ்), சத்தியதேவி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.07.2010) வியாழக்கிழமை பி.ப.ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்.


உதயன் ஊடக அனுசரணையோடு

2010 - தரம் : 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான

மாபெரும் இலவசக் கருத்தரங்கு

காலம்: 25.07.2010(ஞாயிறு)

காலை: 08.00மணி முதல் மாலை: 01.00 மணிவரை
வடமராட்சி, வலிகாமம், தீவகம் கல்வி வலயங்கள்

மாலை: 01.00மணி முதல் மாலை: 06.00 மணிவரை
யாழ்ப்பாணம், தென்மராட்சி கல்வி வலயங்கள்

இடம் : கோப்பாய் ஆசிரிய கலாசாலை

வெற்றித்தேர்வு வளவாளர்களுடன் விசேட விரிவுரையாளர்களும் கருத்தரங்கில் உங்களோடு. கருத்தரங்கு இலவசம். விசேட வினாப்பத்திரமும் கையேடும் ரூபா 50.00 மட்டும்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.